# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 99 மாசி 21ஆம் நாள் திங்கட்கிழமை 05 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049




# இந்தியாவுடனான உறவை விமர்சிப்பது வேடிக்கை

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் விளக்கம்

**யாழ்ப்பாணம், மார்ச் 5**

**இந்திய வல்லரசுடனான எமது உறவுகள் தொடர்பில் விமர்சிப்பது நகைப்புக்குரியது என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். "நாங்கள் எமது அண்டை நாடான இந்திய வல்லரசுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுவது யதார்த்த பூர்வமானது. அதற்கு உள்ளர்த்தங்கள் கற்பிக்கப்படுவது நகைப்புக்குரியது" என்று அவர் குறிப்பிட்டார்.** » 06

# தமிழீழம் உருவாகுவதற்கு இந்தியா உதவ வேண்டும்

## வடக்கு அவைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 5
தமிழீழம் மலர்வதற்கு இந்திய அரசு. இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மலர்ந்த தமிழீழத்தில் கொன்சியூலர் ஜெனரல் நடராஜன் மீண்டும் கால் பதிக்கவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கொன்சியூ » 24

# சமாதானத்தை வெளிக்காட்டும் நினைவுச் சின்னங்களே சிறப்பு

**விக்கியை மறைமுகமாகச் சாடினார் சுமந்திரன்**

யாழ்ப்பாணம், மார்ச் 5
எமது பிரதேசத்தில் பணியாற்றி விடைபெற்றுச் செல்பவர்களுக்கு கொடுக்கப்படும் நினைவுச் சின் » 23

# அமர்வுக்கு வருவோரை விட விருந்துக்கு வந்தோர் அதிகம்

## வடக்கு அவைத் தலைவர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 5
வடக்கு மாகாண சபையின் அமர்வுகளுக்கு வருகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இந்தியக் கொன்சியூலர் ஜெனரலின் பிரிவு விருந்துபசாரத்துக்கு அதி » 23

# பிரம்பயடியில் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு

## மோட்டார் சைக்கிள்களில் வந்த குழு அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
யாழ்ப்பாணம் பிரம்படியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று இனந்தெரியாத கும்பல் ஒன்று » 23


5 ஆம் திகதி இரவு 9.45 க்கு TV பாருங்கள்


# ரணிலுக்கு எதிராக கிளம்பியது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 5
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை » 06

# சிறிய குழுவின் செயலுக்காக பகையை வளர்ப்பது கூடாது

## தாக்குதலுக்குள்ளான பள்ளிவாசலின் தலைவர் ஹாரூன் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 5
அம்பாறை வன்முறையில் சிறிய குழுவே நாசகார வேலைகளைச் செய்துள்ளது. அதற்காக நாங்கள் பெரும்பான்மைச் சமூகத்தைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுக்கு எங்களுடைய உயரிய நல்ல குணங்களைக் காண்பிக்கவேண்டும்.
இவ்வாறு அம்பாறையில் தாக்குதலுக்கு உள்ளான பள்ளிவாசலின் தலைவர் ஹாரூன் தெரிவித்தார்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் » 06

## அம்பாறை வன்முறைகள்

# பொலிஸின் விசாரணைகளில் குறைபாடுகள் கண்டுபிடிப்பு

அம்பாறை, மார்ச் 5
அம்பாறைத் தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணைகளில் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்திசெய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பை சட்டமா அதிபரிடமும் பொலிஸ்மா அதிபரிடமும் ஒப்படைத்திருக்கின்றோம். இவ்வாறு ஒலுவிலில் நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் » 23

# பிறந்ததினமான 24 இல் பதவி துறப்பார் ரணில்?

கொழும்பு, மார்ச் 5
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். கட்சிக்குள் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு முடிவு கட்டுவதற்கும், » 06

## பதவி விலகுவேன் என

# எழுத்து மூலம் ரணில் உறுதி தர வேண்டும்

## பாலித்த பிடிவாதம்

கொழும்பு, மார்ச் 5
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவேன் என்ற உத்தரவாதத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எழுத்துமூலம் வழங்குவாராயின் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேர » 06

# வரலாற்று அவதூறிலிருந்து விடுதலை செய்தார் அனந்தி

## நன்றி கூறுகிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 5
வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலத்தில் தன்மீது நடத்தப்பட்ட தாக்குதலை தமிழ் அரசுக் கட்சியினரே முன்னெடுத்தனர் என்று வடக்கு மாகாண சபையின் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தி » 24

# ஓய்வு வயதெல்லை 67ஆக அதிகரித்தது

கொழும்பு, மார்ச் 5
அரச நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 67 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
இது பற்றிய » 24

# புதிய பாதையில் ஐ.தே.க.ஏப்ரலின் பின்னர் பயணம்

## அமைச்சர் ஹரின் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 5
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே முன்வந்து மாற்றத்தை ஏற்படுத்துவார். ஏப்ரல் மாதத்தின் பின்னர் புதியதொரு பாதையில் கட்சி பயணிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ » 23

# பூசை செய்து புதையல் தோண்டிய 10 பேர் முல்லையில் கைது

சிறப்பு பூசைகள் வழிபாடுகளை மேற்கொண்டு புதையல் தோண்ட ஆரம்பித்தபோதும், அவர்கள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர். விடுதலைப் புலிகள் பதுக்கினர் என்று கூறப்படும் புதையலைத் தேடிக்கொண்டிருந்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் கூறினர்.

(விரிவு பக்கம் 11இில்)

# சிறுத்தைக் குட்டியின் சடலம் மீட்பு

நுவரெலியா,மார்ச்.5
தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தின் வளாகப்பகுதியில் உயிரிழந்த நிலையில் சிறுத்தைக் குட்டி ஒன்று இன்று மீட்கப்பட்டது.
பாடசாலை வளாகம் சிரமதானம் செய்யும் போதே இந்தச் சிறுத்தைக் குட்டியின் சடலம் காணப்பட்டது.
இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்தே இந்தக் சிறுத்தைக் குட்டியின் சடலம் மீட்கப்பட்டது.
நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளிடம் இந்த சிறுத்தைக் குட்டியின் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற,ரி4)



# இரவீந்திரனை இடமாற்றினால் பெரும் போராட்டம் வெடிக்கும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 5
இலங்கை நிர்வாக சேவையில் சுப்றா தரத்தில் உள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரனை வடக்கு மாகாணத்துக்கு வெளியில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் துரத்துவது மிகவும் பாரதூரமான அநீதியாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இடமாற்றம் செய்தால் இதுவரை எங்கும் நடைபெற்றிராத முறையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.
இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நிர்வாக சேவையில் சுப்றா தரத்தில் உள்ள அதிகாரியானஇ.ரவீந்திரன் கஷ்டமான காலங்களில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டவர். போர் முடிவுக்கு வந்த பின்னர் வன்னிப் பிரதேசத்துக்குள் மக்கள் சேவைக்காக ஆபத்துக்களையும் தாண்டி உள்ளே முதலில் நுழைந்தவர்களுள் முன்னைய கல்வி அமைச்சின் செயலராக இருந்த எல்.இளங்கோவனும், சுகாதார அமைச்சின் செயலராக இருந்த இ.இரவீந்திரனும் மறக்கமுடியாதவர்கள். அப்பேற்பட்ட ஆபத்தான காலங்களிலும் கடமையாற்றிய இ.இரவீந்திரனை வடக்கு மாகாண முதலமைச்சர் வடமாகாணத்துக்கு வெளியே இமாற்றம் செய்யக்கோருவது வேடிக்கையானது. விசனத்துக்குரியது. அன்றைய காலகட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரே வடக்கின் பக்கம் இருந்திருக்கவில்லை.
57 வயதில் இடமாற்றம் செய்ய முடியாது. சுப்றா தரத்தில் இருப்பவரை இடமாற்றம் செய்வதற்கு யாரால் முடியும். வடக்கு மாகாணத்தின் கல்வியில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதற்காக கல்வி அமைச்சின் செயலர் எடுக்கும் மேன்முயற்சிகள் என்ன என்பனவற்றை முன்வைத்து வடக்கு மாகாண ஆளுநருக்கு, கல்வி அமைச்சின் செயலரது இடமாற்றத்தை நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தோம்.
ஆளுநரோ மேற்குறித்த விடயங்களில் உள்ளசட்ட நடைமுறைகளை ஆராய்ந்தே முடிவெடுக்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில் மீண்டும் வடக்கு மாகாண முதலமைச்சர் இ.இரவீந்திரனை இடமாற்றம் செய்து, வடக்குக்கு வெளியே அனுப்ப வேண்டும் என்ற பிடிவாதத்தில் இருப்பதன் பின்னணி தெரியவில்லை.
வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புக்களால் பெரிதும் பாதிப்படைந்து, நோய்வாய்ப்பட்டிருந்த கல்வி அமைச்சின் செயலர் தானே இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில் ஆசிரிய தொழிற்சங்கங்களும், சமூக அமைப்புக்களும் முன்வைத்த வேண்டுகோளை நிராகரிக்காமல் மீண்டும் தனது கடமைகளை உற்சாகத்துடன் மேற்கொள்வதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.
எதுவானாலும் கல்வி அமைச்சின் செயலரை இடமாற்றம் செய்தால் இதுவரை எங்கும் நடைபெற்றிராத முறையில் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது. இத்தகைய இடமாற்றத்தை யார் முன்னெடுத்தாலும் அதுதொடர்பில் உண்மைக் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையும், தைரியமும் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு உண்டு என்பதனை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும்.
ஆளுநர், இ.ரவீந்திரனின் இடமாற்றத்தை நிறுத்தி வடமாகாணத்தின் கல்வி நடவடிக்கைகள் சீராக மேலெழ வழிவகை செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ற-5)

# கைியெழுத்து போராட்டம்

மட்டக்களப்பு,மார்ச்.5
மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக கையெழுத்துப் போராட்டம் நேற்று நடைபெற்றது.
இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க, பன்னாட்டு குற்றவியல் பொறிமுறையை நடைமுறைப்படுத்த ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
பன்னாட்டு பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.
பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கை அரசு தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இதனை ஐ.நா. பாதுகாப்புச் சபை நேரடியாகத் தலையிட்டுத் தீர்க்க வேண்டும் என இதன் போது வலியுறுத்தப்பட்டது.
இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு, தமது கையெழுத்துக்களைப் பதிவுசெய்தனர். (ற,ரி4)

# கூட்டணியின் உபதலைவர் மறைவுக்கு சங்கரி இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 5
தமிழர் விடுதலை கூட்டணியின் மூத்த உப தலைவர் குணரத்தினம் சிவகுலதிலகசிங்கத்தின் திடீர் மறைவு எமது கட்சிக்கு ஈடுகொடுக்க முடியாத பெரும் இழப்பாகும்.
இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது,
2004ம் ஆண்டு எமது கட்சி உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்த கால கட்டத்தில், கிராம சேவையாளராக இருந்தும், எம்முடன் துணிச்சலுடன் நீதியாக செயற்பட்டவர். எதனையும் ஆணித்தரமாக எடுத்து கூறுபவர். எவருக்கும் அஞ்சாத மனம் கொண்டவர். தன்னலம் கருதாத ஒரு மக்கள் சேவகன்.
அன்னாரின் இழப்பால் துயரிலிருக்கும் அவரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை என்சார்பிலும், எம் கட்சிநண்பர்கள் சார்பிலும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (ற)

# குருதித்தான முகாம்

அச்சுவேலி,மார்ச் 5
அச்சுவேலி உகரம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற 6ஆவது குருதித்தான முகாம் அச்சுவேலி மத்தியகல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
யாழ்.போதனா வைத்தியசாலை குருதி வங்கியின் அனுசரனையுடன் நடைபெற்ற குருதித்தான முகாமில் 30க்கு மேற்பட்ட இளைஞர்கள் குருதிக் கொடை வழங்கினர்.
அச்சுவேலி உகரம் அறக்கட்டளை அமைப்பு வருடந்தோறும் இரண்டு தடவைகள் குருதித்தான முகாமை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது. இது 5ஆவது குருதித்தான முகாம் என உகரம் அறக்கட்டளையின் தலைவர் தெரிவித்தார். (ற-ரி5)




# கல்வியைப் போன்று விளையாட்டிலும் மாணவர்கள் ஆர்வம் கொள்ளவேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நுவரெலியா,மார்ச்.5
விளையாட்டு உடல் ஆராக்கியத்துக்கு இன்றியமையாததொன்றாகும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது போன்று விளையாட்டு கலை கலாசாரத்துறையிலும் கவனம் செலுத்த வேண்டும்.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
கண்டி போகம்பர உள்ளக விளையாட்டு அரங்கில் செயற்பட்டு மகிழ்வோம் செயற்பாடு ஊடாக தேசிய மெய்வல்லுநர் போட்டி நேற்றும், முன்தினமும் இடம்பெற்றது.
இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத் துறை பற்றிய அறிமுகத்தை கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.
விளையாட்டுத் துறையில் ஈடுபடும் போது சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு. எனினும் இந்தப் பிரச்சினைகள் நடைபெறுகிறது என்று நாங்கள் விளையாட்டுத் துறையை விட்டு ஒதுங்கி விட முடியாது.
இத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியில் விளையாட்டுத் திறனைச் செய்ய வேண்டும்.
வெறுமனே படிப்பதோ பரீட்சை எழுதுவதோ மட்டுமல்ல விளையாட்டுத் துறைகளிலும் கலை கலாசாரத் துறைகளிலும் பங்கு பற்றி முழு மனிதனாவதற்கு இந்த மூன்றும் அம்சங்களும் அவசியமாகும் - என்றார்.
இதில் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த 162 பாடசாலைகளின் 1458 மாணவர்கள் கலந்து கொண்டனர். (ற,ரி4)





பதுளை பகுதியின் எலதலுவை பெருந்தோட்டத்தில் அமைக்கப்பட்ட கொங்கிறீற்றிலான வீதி திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட 15 லட்ச ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த வீதி சீரமைக்கப்பட்டது.

# ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றாவிட்டால் ஆபத்து

## கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 5

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை அடுத்த ஆண்டுக்குள் அரசு நிறைவேற்றத் தவறுமாயின் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



உப்புவெளியில் அமைக்கப்படவுள்ள முதியோர் இல்லத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று சொல்லப்படுகின்றதே தவிர அது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறு கொண்டு வரப்படுமானால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் என்ன முடிவு எடுக்க வேண்டுமென்பதை நாடாளுமன்றக் குழு கூடியே ஒரு கூட்டுத்தீர்மானம் மேற்கொள்வோம்.

**அரசு தொடரவேண்டும்**

இந்த அரசு தொடரவேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும். எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை எம்மால் திட்டவட்டமாக கூற முடியாது. அரசியல் தீர்வு முயற்சிகள் தொடரவேண்டும். தேசியப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும். தீர்த்து வைக்கப்படாமல் நாட்டிலுள்ள எந்தப்பிரச்சினைக்கும் நல்ல முடிவு காணமுடியாது. ரணிலின் அரசாக இருக்கலாம், அரச தலைவர் மைத்திரியின் ஆட்சியாக இருக்கலாம், இல்லை மகிந்த ஆட்சியாக இருக்கலாம். இதுதான் உண்மைநிலை. இதுதீர்க்கப்படாத நிலையில் எந்த அரசும் நிலைத்திருக்கமுடியாது.

இந்த அரசின் மீது தமிழ் மக்களுக்கு அவ நம்பிக்கை ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. இருந்தபோதிலும் ஒரு கட்சியென்ற வகையில் நாம் எதையும் தூக்கி எறிந்து விடமுடியாது.

தமிழ் மக்கள் தீவிரமாகவும் பக்குவமாகவும் நேர்மையாகவும் செயற்பட்டார்கள் என்ற உயர்ந்த அபிப்பிராயத்தை பன்னாட்டுச் சமூகம் உணரவேண்டும். தமிழர்கள் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் கெடுத்துவிட்டார்கள் என்ற முடிவுக்கு பன்னாட்டுச் சமூகம் வர நாம் இடமளிக்கக் கூடாது.

**அரசு மீதான அதிருப்தி**

அரசின் மீது கொண்ட அதிருப்தியே உள்ளூராட்சித் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்தது. வாழ்க்கைச் செலவு விண் அளவு அதிகரித்துச் சென்றமை, முன்னைய கால ஊழல்கள், தற்போதைய ஊழல்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படாமை போன்ற காரணங்களே அவர்களின் பின்னடைவுக்குக் காரணம்.

**ஐ.நா. தீர்மானம்**

2015ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்ட எந்தவொரு கருமமும் நிறைவேற்றப்படவில்லை. சில விடயங்களில் முன்னேற்றம் காணப்படுகிறது. காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், மீள்குடியேற்றம், சிறைக்கைதிகள் விவகாரமென சில முன்னேற்றங்கள் காணப்பட்டபோதும் அதில் முழுமை நிலை அடையப்பெறவில்லை.

இத்தகைய முன்னேற்ற நிலைகள் காணப்படுகின்றபோதும் முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் கடுமையான எதிர்ப் பரப்புரைகள் நிலமைகளை மோசமாக்கி வருகின்றன. இருந்தாலுங்கூட தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு திருப்தி அடையக்கூடிய அளவுக்கு அரசின் முன்னெடுப்புக்கள் போதுமானதாக இல்லை என்பதே உண்மையாகும் - என்றார்.

(ற-5.61)



# வெள்ளைமாளிகைக்கு மிக அருகில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் தற்கொலை

வொஷிங்டன், மார்ச் 5

அமெரிக்க அதிபரின் இல்லமான வெள்ளை மாளிகைக்கு மிக அருகே கைத்துப்பாக்கியால் ஒருவர் சுட்டு தற்கொலை செய்து கொண்டதால் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

'வெள்ளை மாளிகையின் வடக்குப் பகுதியில் இந்தச் சம்பவம் பதிவானது. காரில் வந்த நபரொருவர், தான் கொண்டுவந்த கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார். துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதும் வெள்ளை மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டது. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அது மீண்டும் திறக்கப்பட்டது. (ம)

# அப்போது உணவே மருந்து இப்போது அதனாலே கேடு

## பேராசிரியர் சண்முகலிங்கன் அறிவுரை

யாழ்ப்பாணம், மார்ச்.5

அன்றைய காலத்தில் உணவே மருந்து. ஆனால் தற்போது நவீன உணவே கேடு விளைவிக்கிறது. யாழ்.போதனாமருத்துவமனைக்கு முன்பாக பீட்சா வந்துவிட்டது. அங்கே அதைச் சாப்பிட்டு விட்டு, கொலஸ்ரோல் வந்த பின் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவலம் தற்போது நிலவுகின்றது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

தமிழ்த்தாய் மன்றத்தால் இலவச மருத்துவ முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை புதிய செங்குந்தா வீதியிலுள்ள மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் புலவர் எம்.எஸ்.ஶ்ரீதயாளன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அதில் உரையாற்றும்போதே முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.ச்ண்முகலிங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எங்களுடைய வாழ்க்கை முறையை உணவுப் பழக்கங்களை மாற்றுவதன் மூலம் நலம் பெறலாம். எங்களுடைய பண்பாட்டின் பாரம்பரியமும் சமூக வாழ்வும் காட்டப்படுவதற்கு இந்த தமிழ்த்தாய் மன்றக் குடும்பம் ஒரு சாட்சியாக இருக்கின்றது. இதைப் பார்த்து மற்றவர்களும் செய்ய வேண்டும் - என்றார்.

100 பேருக்குக் கண் பரிசோதனைகள் செய்து கண்ணாடிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. யாழ். மாநகர சபை சித்த ஆயுள் வேத வைத்தியர்கள் கலந்து கொண்டு இலவச நீரிழிவு, இரத்த பரிசோதனை செய்ததுடன் இலவசமாக ஆயுள்வேத மருந்துகளும் வழங்கினர்.

விஞ்ஞானத்தையும் மருத்துவத்தையும் இணைக்கும் நாடிப் பரிசோதனை ரஷ்ய தொழில்நுட்ப முறையில் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தின் மூலம் செய்யப்பட்டு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

(ற)

# கிழக்கின் கல்வி நிலையை கட்டியெழுப்புவது அவசியம்

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 5

கிழக்கு மாகாணத்தில் 37 ஆயிரம் பேர் சேவையாற்றுகின்றனர். இவர்களின் வேதனத்துக்கு வருடம் ஒன்றுக்கு 17 மில்லியன் ரூபா கொடுப்பனவு தேவைப்படுகின்றது. 21 ஆயிரம் பேர் பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். ஆயிரத்து 100 பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இருந்தும் 2017 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் கல்விப் பெறுபேறு வீழ்ச்சி கண்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித போஹொல்லாகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் வேலைசெய்து, ஒழுக்கமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குவதற்கு திடசங்கற்பம் பூண வேண்டும். ஆசிரியர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகத்திகழவேண்டும். அப்போதுதான் கிழக்கு மாகாணத்தைக் கல்வியில் முன்னேற்ற முடியும்.

30 வருடகால போரால் சமாதானம் கண்ணுக்கு எட்டாத இடத்தில் காணப்பட்டது. நல்லாட்சி அரசு சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருகின்றது.

இலங்கையின் 9 ஆவது இடத்தில் கிழக்குமாகாணம் காணப்படுகின்றது. இந்த நிலமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கடந்த நவம்பர் 26 ஆம் திகதி ஆங்கில டிப்ளோமாதாரிகள் உட்பட ஆயிரத்து 370 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இன்னும் எஞ்சியிருப்பது ஆயிரத்து 900 பட்டதாரிகளே. இவர்களுக்கு கிழக்கு மாகாண சபையில் உள்ள அனைத்துத் திணைக்களங்களிலும் வேலை வாய்ப்பு வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் எங்களால் மேற்கொள்ளப்படும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டி இருக்கின்றது. கிழக்கின் வளமாக 440 சதுர கிலோ மீற்றர் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் பாதைகள் சரியாக அமைக்கப்படவேண்டும். மத்திய அரசும், மாகாண சபையும் இணைந்து அதை அபிவிருத்தி செய்யவேண்டும். மட்டக்களப்பை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கல்விப் பிரதேசமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.



ஆசிரியர்களாகிய நீங்கள், மாணவர்களிடம் சிறந்த கல்வியையும் ஒழுக்கத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். அர்ப்பணிப்புடன் வேலை செய்து கிழக்கைக் கட்டியெழுப்புவோம் - என்றார். (ற)

# வெவ்வேறு இனத் திருமணத்தால் நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பாம்

யாழ்ப்பாணம், மார்ச்.5

வெவ்வேறுபட்ட இன திருமணம் நடந்தால் நல்லிணக்கம் ஏற்படுமாம் என மொனராகலையை சேர்ந்தமாணவிதெரிவித்துள்ளார்.

நேற்றுதிருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்ற சிறுவர் நாடாளுமன்ற அமர்வில் அனைத்து மதத்தினருக்கும் முன்னிலையில் மாணவி மேலும்தெரிவித்தபோதுவெவ்வேறுபட்ட இனத்தை சேர்ந்தவர்கள் திருமணம் மேற்கொண்டால் நாடு ஒற்றுமையாக இருக்கும் என்றும் வெளிநாட்டவர்களின் குறுக்கீடே இந்த நல்லிணக்கம் ஏற்படுவதற்கு தடையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அன்பு இருந்தாலே நல்லிணக்கம் ஏற்படும் என திருகோணமலையை சேர்ந்த மாணவர் தெரிவித்துள்ளார்.

சமயம் தொடர்பான நல்லிணக்கத்துக்கு உதாரணமாக மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவி தெரிவித்த போது அம்பாறையில் 27 ஆம் திகதி முஸ்லிம்களின் பள்ளிவாசல் என்பவற்றை உடைத்து நல்லிணக்கம் இல்லாது செல்கின்றது. அதுமட்டுமில்லாமல் மட்டக்களப்பில் அகழ்வாராய்ச்சியின்போது கல் ஒன்றுகண்டெடுக்கப்பட்டது அங்கு விகாரை கட்ட முற்பட்டபோது முரண்பாடு ஏற்பட்டது அதனால் நல்லிணக்கம் ஏற்படாமல் போகின் றது என்றும் மட்டக்களப்பு மாணவி தெரிவித்துள்ளார். எப்பொழுது ஒருவர் தான் தங்களு டைய இனத்தை கூறாமல் இலங்கையன்என்றுகூறுகிறார்களோ அப்பொழுது இலங்கை நல்லிணக்க நாடாக உருவாகும் என பாணந்துறையைச் சேர்ந்த மாணவன் தெரிவித்துள்ளார். (ற)

## பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் .மார்ச்.5
சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலத்திரனியல், கணினி தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பு பவர்கள் நாளைமறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-21)

### தெல்லிப்பழைப் பிரதேசத்தின்

## வீட்டுத்திட்ட கொடுப்பனவை அதிகரிப்பதற்கு இணக்கம்

**யாழ்ப்பாணம் மார்ச் 5**

**போரால் பாதிக்கப்பட்ட தெல்லிப்பழைப் பிரதேச செயலக மக்களுக்கான வீட்டுத்திட்டத்துக்கான கொடுப்பனவை அதிகரிக்க யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.**


யாழ்ப்பாணன மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கூட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர், "எனது பிரிவில் உள்ள பிரதேசங்கள் போரால் நேரடியாகவும் அதிக அழிவுகளையும் சந்தித்த பிரதேசங்களாகும். அங்குள்ள மக்களின் வீட்டுத்திட்டத்துக்காக இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை.

எனவே நிதியை அதிகரித்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேலும் சிதைவடைந்த, வீடுகளை புனரமைக்க நான்கு இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்படுகின்றது.

அந்த நிதியைக் கொண்டு முழுமையாக சேதமடைந்த வீட்டை நிர்மாணம் செய்ய முடியாது. எனவே அதற்கு வழங்கப்படும் நிதியை அதிகரித்து வழங்க வேண்டும்' என கோரிக்கையை முன்வைத்தார்.

பிரதேச செயலரின் கோரிக்கையை கேட்ட இணைத் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா ஆட்சேபனை எவையும் தெரிவிக்கப்படாததால் அதற்கு நாம் அனுமதி வழங்குகின்றோம் -என்றார். (எ-8)



நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தில் இறுதிநாளான கடந்த வியாழக்கிழமை சுவாமி பூஞ்சப்பாதத்தில் வீதிவலம் வந்தார். அதனைப் படத்தில் காணலாம். (எ-17)

## வீதிக் குறியீடுகள் மறுசீரமைப்பு

யாழ்ப்பாணம்.மார்ச்.5
யாழ்ப்பாணக்குடாநாட்டின் முதன்மை வீதிகளில் உள்ள வீதிக் குறியீடுகள் மீளவும் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

நல்லூர்-பருத்தித்துறை வீதி, கைதடி-நாவற்குழி போன்ற முதன்மை வீதிகளில் உள்ள விதிக் குறி யீடுகள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. தற்போது அவை மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முதன்மை வீதிகளின் சந்தியை அண்டிய பகுதிகளில் வேகக் கட்டுப்பாட்டு கோடுகளும் புதிதாக அமைக்கப்பட்டு வருவகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது. குறியீடுகளை மறுசீரமைப்பதற்கு கொழும்பில் இருந்து மூலப்பொருள்களும் இயந்திரமும் எடுத்து வரப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

### திக்கம் வடிசாலை தொடர்பில்

## அனந்தியிடம் மாகாண எதிர்க்கட்சி தலைவர் கேள்விக்கணை

யாழ்ப்பாணம், மார்ச். 5
யாழ்ப்பாணத்தில் மதுப் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்த வடக்கு மாகாண மகளிர் அமைச்சர் அனந்தி, சில மணி நேரத்திலேயே திக்கம் வடிசாலையை எம்மிடம் தாருங்கள் நாம் நடத்துகின்றோம் என கூறுகின்றார் என்றால் இவர் மதுவை கட்டுப்படுத்த கோருகின்றாரா அல்லது ஊக்குவிக்கின்றார் என வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சரமாரியாக வினாக்கள் முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா, வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆரம்பத்தில் மதுபான சாலைகளை மூட வேண்டும்: மதுவை கட்டுபடுத்த வேண்டும் என கொக்கரித்த அனந்தி சசிதரன் சில மணி நேரத்திலேயே திக்கம் வடிசாலையை மாகாண சபையிடம் தாருங்கள் நாம் புனர்நிர்மாணம் செய்து திறமாக நடத்துகின்றோம் என கருத்துக்களை கூறிக் கொண்டிருந்தார்.

இதனை கேட்டுக் கொண்டிருந்த தவராசா திடீரென, 'திக்கம் வடிசாலையை வடக்கு மாகாண சபைக்கு தந்தால் நாம் அதனை புனர்நிர்மாணம் செய்து திறமாக நடத்துவோம் என்றால் உங்களின் நோக்கம் தான் என்ன?

மதுவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இவ்வளவு நேரமும் கதைத்தீர்கள். இப்போது மது விற்பனையை மாகாண அமைச்சின் கீழ் தாருங்கள் நடத்துகின்றோம் என்கின்றீர்கள்.

அப்படியாயின் நீங்கள் என்ன கொள்கையில் செயற்படுகின்றீர்கள்? என கேள்வி எழுப்பினார். இதனால் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வாயடைத்தனர். (எ-8)

## பொலிஸாரின் வருடாந்த இடமாற்றத்தால் இடர்பாடு

யாழ்ப்பாணம் மார்ச் 5
யாழ்ப்பாணம் முதன்மைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒரே தடவையில் 140 பொலிசார் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் பெரும் ஆளணிப் பற்றாக்குறையை பொலிஸ் நிலையம் எதிர்கொள்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல பொலிஸ் நிலையங்களில் இருந்தும் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் பொலிஸார் மாற்றலாகிச் சென்றுள்ளனர். எனினும் யாழ்ப்பாணம் முதன்மைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டும் கடந்த முதலாம் திகதி 140 பொலிசார் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தற்போது சுமார் 530 பொலிசார் பணியாற்றும் நிலையில் ஒரே தடவையில் 140 பொலிசார் இடமாற்றம் பெற்றுச்சென்றமை இடர்களை ஏற்படுத்தியுள்ளது. அவர்களுக்கான புதிய பொலிஸார் யாழ்ப்பாணம் வரவுள்ள நிலையிலும் இதுவரையில் புதிய பொலிசார் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை. இன்னும் ஓரிரு நாள்களில் மாற்றலாகிச் சென்ற எண்ணிக்கைக்கான பொலிஸார் யாழ்ப்பாணம் வருவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-101)



யாழ்ப்பாணம் விக்ரோறியா கல்லூரி மாணவர்களுக்கு சுழிபுரம் புலம்பெயர் வாழ் உறவுகளால் கடந்த வெள்ளிக்கிழமை காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு



பாழ்ப்பாணம்.மார்ச் 4
பாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளை' யாட்டு நிகழ்வு பாடசாலை மைதானத்தில் அதிபர் மாணிக்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரம்ப கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் பி.சசிக்குமார் மற்றும் சிறப்பு விருந்தினராக தேனு களஞ்சிய உரிமையாளர் ரி.ஸ்ரீமோகனராஸ் கலந்து கொண்டார்.

'பாடசாலை மாணவர்கள் படிக்கும் காலங்களில் படிப்புக்குக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் கொடுக்க வேண்டும். மாணவர்களை பாடங்களில் முழுமையாக திணிப்பதால் மாணவர்கள் மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர். மாணவர்களை சங்கீதம், நடனம் போன்ற கலைப்பாடங்களுடன் இணைத்து செயற்பட வைக்க வேண்டும்.

தொலைக்காட்சி பாவனையே மாணவர்களின் கல்விக்கு இடையூறாக உள்ளது. தொடர்நாடகங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விக்கு கொடுப்பதில்லை. .

பல தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுப்புவதால் மாணவர்கள் சுயமாக வீட்டில்வந்து கல்வி கற்பதில்லை. ஆகவே பிள்ளைகளுக்கு எது சரி என்று படுகின்றதோ அந்த ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை தேர்ந்து கல்வி கற்க விட வேண்டும்' என முதன்மை விருந்தினர் தனது உரையில் தெரிவித்தார். நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அயல்பாடசாலை அதிபர்கள், நிறுவன உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# வீதி சமிக்ஞைகள் சீரமைக்கப்படும்வரை போக்குவரத்துப் பொலிஸார் கடமையில்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச். 5

**யாழ்ப்பாணத்தில் உள்ள முதன்மைச் சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞைகள் சீரமைக்கும்வரை அந்த வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த வேண்டும் என யாழ்ப் பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு வந்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள முதன்மைச் சாலைகளில் பொருத்தமற்ற விதத்தில் பூட்டப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞைகளால் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதாவது வீதிச் சமிக்ஞைகளில் பயணிப்பதற்கான சமிக்ஞை காட்டப்படும்போது பாதசாரிக் கடவைகளுக்கான சமிக்ஞையும் காட்டப்படுகின்றது. இதனால் வாகனங்கள் பயணிக்கும்போது பாதசாரிகளும் வீதியை கடப்பதால் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காது வேடிக்கை பார்த்து வருகின்றனர். மேலும் பாதசாரிக் கடவைகள் சமிக்ஞை காணப்படும் இடத்தில் இருந்து பல தூரம் தள்ளியே பாதசாரிக் கடவைகள் காணப்படுகின்றன -என்றார்.

இதற்குப் பதில் அளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர், 'வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்பட்டுள்ள வீதிகளில் முன்னர் அமைக்கப்பட்டுள்ள பாதசாரிக் கடவைகளை அழித்தோம். ஆனாலும் அவை அழியவில்லை. வீதிச் சமிக்ஞைகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். (எ-8)



## நுணாவில் அ.த.க பாடசாலைக்கு பல்லூடக எறியி வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 5

கைதடி நுணாவில் அ.த.க பாடசாலைக்கு 2017ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் பல்லூடக எறியி வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டு நிகழ்வின்போது விருந்தின ராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனால் எறியி பாடசாலை சமூகத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது

நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (எ)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்.5

யாழ்ப்பாண மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஆரியகுளம் உயர்கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட தொண்டராசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-64)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி, மார்ச்.5

கரவெட்டில் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர்கள் ரஜீவ், செயலகக் கணக்காளர் எஸ்.சிவரஞ்சன், யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் பி.கமலநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நிதியத்தின் இந்த ஆண்டுக்கான செயற்குழுவுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (எ-173)

## பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டி இலவச செயலமர்வுகள்

சாவகச்சேரி மார்ச் 5

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டி இலவச செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணம் ஆரியகுளம் புதிய கலைக் கல்லூரி வளாகத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9.30 மணிக்கு 'இளையோருக்கான வேலைவாய்ப்பு' தொடர்பாகவும் மாலை 2 மணிக்கு 'ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்வி பெறுதல்' தொடர்பாகவும் வழிகாட்டல் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி சங்கத்தானையில் உள்ள கழக அலுவலகத்தில் பதிவு செய்யுமாறும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் 077 926 5447 இலக்க அலைபேசியில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் கழகத் தலைவர் உ.சிசில் றெமிண்டஸ் அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வில் கலந்து கொள்பவர்கள் கட்டாயமாக ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச.5

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் மற்றும் இலங்கை வடபிராந்தியப் பொறியியலாளர் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 'வேலைத்தளத்து மீதான நன்னிலை' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

## 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்.5

யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு வித்தியாலய மைதானத்தில் நாளை செவ்வாய்க் கிழமைமதியம்1.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ப.சசிகுமார் மற்றும் மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண வலய ஆரம்பக் கல்வி விளையாட்டு அபிவிருத்தி செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (எ)

## வீடுகட்ட பக்கற் மண்

### முதலமைச்சர் யோசனை

யாழ்ப்பாணம், மார்ச். 5

மீள்குடியேற்ற மக்களின் வீட்டுத்திட்டப் பணிகளின் போது ஏற்படும் மண் பிரச்சினையைபோக்க பக்கற்றில் அடைக்க பட்ட மண்ணை விநியோகிக்கலாம் என வடக்கு மாகாண முதல்வர் யோசனை ஒன்றை முன் வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, "மீள்குடியேற்ற மக்களின் வீட்டுத்திட்டத்தின் போது பயனாளிகளுக்கு தகுந்த நேரத்தில் மண் வழங்கப்படாமையால் அவர்களின் கட்டுமானப்பணி தாமதப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அதிக விலையில் தனியாரிடம் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். எனவே இதற்கு என்ன தீர்வை வழங்க முடியும்" என யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் கேட்டார். அதற்கு பதில் அளித்த மாவட்டச் செயலர், 'யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முன்பு வன்னியில் இருந்து ஆற்று மணல்கள் வந்தன. ஆனால் இப்பொது அவற்றின் வரத்து குறைந்துள்ளது. வடமராட்சியில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்களுக்கான மண்ணை வழங்கி வருகின்றோம்' என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த வடக்கு முதல்வர், "யாழ்ப்பாண மக்களின் மண் தேவையை முழுமை செய்ய நாம் மண்ணை பக்கற்றுகளில் அடைத்து வழங்கலாம். அதற்காக நான் சில பொறியியலாளர்களுடன் பேசியுள்ளேன். அவ்வாறான யோசனையை பரீட்சிக்கலாம்" என்றார். (எ-8)

## பூசணிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,மார்ச்.5

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகள் தற்போது பூசணிச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

சில இடங்களில் நெற்செய்கை அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் விவசாயிகள் பூசணிச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வலிகாமம் மேற்கு, சங்கு வேலி, சண்டிலிப்பாய், தீவுப்பகுதி போன்ற இடங்களில் விவசாயிகள் பூசணிச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. முன்கூட்டியே இந்தச் செய்கையில் ஈடுபட்டவர்கள் அதனை அறுவடை செய்யும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளனர். சந்தைகளுக்கு பூசணி போதியளவு வந்து சேர்வதால் அவற்றின் விலை வீழ்ச்சிய டைந்து காணப்படுகின்றது. குறிப்பாக திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ பூச ணிகாய் நாற்பது ரூபாவாக விற்கப்பட்டது. (எ-17)

## விபத்தில் இரண்டு பெண்கள் படுகாயம்

சாவகச்சேரி, மார்ச். 5

இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கிடையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இரண்டு பெண்கள் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாக உள்ள முதன்மைச் சாலையில் இடம்பெற்றது. இதில் கச்சாய் சாலை சாவகச்சேரியைச் சேர்ந்த பற்றிக் ஜெயசீலன் ரட்ணராதா (வயது 42), கோவிலாக்கண்டி கைதடியைச் சேர்ந்த உதயராசா சிந்துஜா (வயது 34) என்ற இருவருமே காயமடைந்தனர்.

முதன்மைச் சாலையில் பயணித்த மோட்டார் சைக்கிள் சமிக்ஞையின்றிசாலையின் மறுபுறத்தில் உள்ள ஒழுங்கைக்குச் செல்வதற்காக திருப்பிய போது இந்த மோட்டார் சைக்கிளை முந்த முயன்ற மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி அருகிலிருந்த மதிலுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் அந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்த இரு பெண்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ-21-9)

## நிறைவேற்றப்படாதுள்ள விடயங்கள் குறித்து சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச். 5

யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இணக்கம் காணப்பட்டபலவிடயங்கள் இன்னும் நிறை வேற்றப்படாமல் உள்ளன. எனவே அவற்றை செயற்படுத்த விரைவில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என நாடாளுமன்றஉறுப்பினர்மாவை சேனதிராஜா கோரிக்கை விடுத்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைப் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவம் விடுவித்த போதிலும் பொலிஸார் அங்குள்ள பல காணிகளை இன்னும் விடுவிக்காமல் அபகரித்து வைத்துள்ளனர். எனவே அவற்றை விடுவிக்க பொலிசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீள்குடியேற்றப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் அதிபர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். எனவே கல்வி அமைச்சு இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (எ-8)

## இந்தியாவுடனான...

கொன்சியூலர் ஜெனரல் நடராஜனுக்கு வடக்கு மாகாண சபையால் நேற்று பிரிவுபசார நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது

**இந்திய வாகனம் கிடைக்கவில்லை**

வடமாகாணத்துக்கான முதலாவது சபையாக இந்தச் சபை தோற்றுவிக்கப்பட்டமையால் எமக்கான வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. முதலாவது சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் வாகன வசதியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்தியாவிலிருந்து சொகுசு வாகனங்களைத் தருவித்து வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஒரு சில காரணங்களால் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. இலங்கை அரசால் எமக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகையுடன் கூடிய சிறப்பு அனுமதிப் பத்திர வழங்கல் மூலமாக அந்தப் பிரச்சினை தற்போது தீர்வுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் உறுப்பினர் தர்மபால செனவிரத்ன என்னைப் பார்க்குந்தோறும் "இந்தியா கார் வழங்கும் என்று கூறினீர்களே. எங்கே எங்கள் கார்கள்?" என்று விடாது கேட்டு வந்தமை நினைவுக்கு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இன்று அமைக்கப்படுகின்ற கலாசார நிலையம் நடராஜனையும் அவரின் சேவையையும் சதாகாலமும் நினைவுறுத்திய வண்ணமே இருக்கும்.

**வாளுக்கு வியாக்கியானம்**

வால்மீகி இராமாயணத்தை கம்பர் தமிழில் எழுதிய போது அந்த இராமாயணப் பாடல்களுக்கு உரை எழுதாமல் விட்டு விட்டார். கம்ப இராமாயணத்துக்கு கம்பர் உரை எழுதாத காரணத்தால் அவருக்கு பின் தோன்றிய தமிழ் அறிஞர்களும் இலக்கிய விற்பன்னர்களும் தத்தமது திறமைகளுக்கேற்ப இராமாயணத்துக்கான உரைகளைப் புதிது புதிதாக உருவாக்கிக் கொடுத்தார்கள்.
அதேபோன்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இராப்போசன விருந்து உபசாரத்தில் நடராஜனுக்கு யாழ்ப்பாண மக்கள் சார்பாக வாள் ஒன்றை ஞாபகார்த்தப் பரிசிலாக வழங்கியிருந்தமைக்கு வெவ்வேறு விதமாக அர்த்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. கம்பர் உரை எழுதாமையால் தமிழறிஞர்கள் எவ்வாறு தமது திறமைகளைத்தாம் எழுதிய உரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார்களோ அதேபோன்று எமது ஊடகவியலாளர்களும் கடந்த 25ஆம் திகதி தொடக்கம் இன்று வரை விதம்விதமான கற்பனை வளத்துடன் அன்று கையளித்த வாளுக்கான குறியீட்டுச் செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

**உள்ளர்த்தங்கள் கற்பிக்கப்படுகிறன**

அது மட்டுமல்லாது எனது அரசியல் போக்கு இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது என்றும், அதில் அரசியல் ரீதியான உள்ளர்த்தங்கள் இருக்கின்றது என்றும் கூறி வருகின்றார்கள்.
வடக்கு, கிழக்கு இணைந்த சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வை ஏற்படுத்துவதில் இந்தியாவின் முக்கியத்துவம் பற்றியும் இந்தியாவுக்கு இருக்கின்ற தார்மீகக் கடமை பற்றியும் நான் வலியுறுத்தி வருவதையும் சுட்டிக்காட்டி இந்தியாவிடம் நான் அடிபணிந்து விட்டேன் என்று சில பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான தொடர்புகள், எமது பிரச்சினையில் கடந்த நான்கு தசாப்தங்களாக இந்தியா ஏற்படுத்தியுள்ள பல்வேறு மட்டங்களிலான தலையீடுகள், இன்றைய பூகோள அரசியலில் இந்தியாவுக்கு இருக்கின்ற முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளும் எமது முயற்சிகளில் இந்தியாவுடனான நட்பு மேலும் நேர்மையுடனும் இதய சுத்தியுடனுமான பரஸ்பர அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் என்பன அவசியமானவை. இதை இந்திய அடிபணிவு அரசியல் என்று விமர்சனம் செய்வது பொருத்தமற்றது. இந்தியா எமக்கு முக்கியமானது. இந்தியாவின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் நாம் கரிசனை கொண்டுள்ளோம். அதேவேளை இலங்கையில் இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான வளர்ச்சி ஆகியன இந்தியாவுக்கு எந்தளவுக்கு நன்மையானதும் இன்றியமையாததுமானது என்ற உண்மையின் அடிப்படையிலானதே இந்தியா தொடர்பிலான எனது கூற்றுக்கள்.

**இதயசுத்தியுடன் இயங்க வேண்டும்**

போர் காரணமாக பெரிய அழிவைச் சந்தித்து தொடர்ந்தும் பல அடக்குமுறைகளுக்குள்ளும் இராணுவ கெடுபிடிகளுக்குள்ளும் வாழ்ந்து வரும் எமது மக்கள் தமது வரலாற்று ரீதியான அடையாளங்களும் உரிமைகளும் பாதுகாக்கப்பட தக்க ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு இந்தியா காத்திரமானதும் துணிச்சல் மிக்கதுமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளும் என்று எமது மக்கள் நம்பியிருக்கின்றார்கள். எமது மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை கலாசார ரீதியான உறவுகள் ஒத்துழைப்புக்கள் ஆகியன எமது உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு அடித்தளம் இடுவன என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.
கசப்புணர்வுகள், நம்பிக்கையீனங்கள், சந்தேகப்பார்வை ஆகியவற்றை புறம்தள்ளிவைத்து எமது இலக்கை அடைவதற்காக இந்தியாவுடன் பரஸ்பர நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் இதயசுத்தியுடன் நாம் செயற்பட வேண்டிய காலம் இது.
எனது தனிப்பட்ட அரசியற் போக்கை இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தி விமர்சிக்கின்றமை நகைச்சுவை நிறைந்தது.

**ஆன்மிக ரீதியானது உறவு**

ஒன்றை எம் பத்திரிகையாளர்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். புலிகளுக்குப் பயந்து இந்திய நாட்டைத் தஞ்சம் அடையவோ இந்திய அரசுடன் சேர்ந்து புலிகளை அழிக்கவோ எனக்குத் தேவையிருக்கவில்லை. இந்தியாவுடனான எனது உறவு ஆன்ம ரீதியானது.
மகாத்மாகாந்தி 1948ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டதும் அன்றைய சிறு வயதிலேயே குடும்பத்திலிருந்த மற்றவர்களுடன் சேர்ந்து தேம்பி தேம்பி நாள் கணக்காக அழுது தீர்த்தவர்கள் நாம். ஆச்சார்ய வினோபாபாவே பூதான இயக்கத்தைத் தொடங்கிய போது அது வெற்றி பெற வேண்டும் என்று பிரார்த்தித்தவர்கள் நாங்கள். ஜெயப்பிரகாஷ் நாராயண் அகிம்சை முறையில் சர்வாதிகாரத்தை எதிர்த்தபோது அவரின் மக்கள் இயக்கத்தின் முன்னேற்றம் பற்றிக் கரிசனையாக இருந்தவர்கள் நாங்கள். இன்றைய பத்திரிகையாளர்களுக்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் பற்றி எதுவுமே தெரியாது இருக்கலாம். அவர் அகிம்சை முறையில் அரசை எதிர் கொண்ட விதம் பற்றி எல்லாம் எமது ஊடகவியலாளர்கள் படித்தறிய வேண்டும்.

**யாசிக்க வேண்டிய தேவை இல்லை**

இலங்கை - இந்திய சங்கம் மாகாத்மா காந்தி பற்றிய முதல் நினைவுப் பேருரையை என்னை வைத்தே ஒழுங்கமைத்தனர். பாரத நாட்டின் ஆத்ம பலத்தில் ஆன்மிக பாரம்பரியத்தில் ஈடுபாடுடையவன் என்றே என்னைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள் என்று நம்புகின்றேன். அப்போதைய இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி எனது பேச்சை வெகுவாக இரசித்தார். அவருடன் இருந்த ஒருவர் காந்தி பற்றி இலங்கைத் தமிழர்களாகிய நீங்கள் அறிந்த அளவு இந்தியர்கள் அறிந்து வைத்திருக்கின்றார்களோ என்று தெரியவில்லை - என்றார்.
எம் மக்கள் நலனுக்காக அன்றி இந்தியாவிடம் எதனையும் யாசிப்பதற்கு எனக்குத் தேவைகள் இல்லை. காங்கேசன்துறை பற்றிய எமது கோரிக்கையை இந்தியா பெருமனதுடன் ஏற்றுள்ளது. அதேபோல் பலாலி வானூர்தி நிலையம் பற்றிய எமது கோரிக்கைக்கும் இலங்கை அரசும் இந்திய அரசும் செவி சாய்க்க வேண்டும் என்று எதிர் பார்க்கின்றோம். எது எப்படியோ நாம் எமது அரசியல் கொள்கைகளில் வழுவாது நின்று எமது மக்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய அனைத்து அனுகூலங்களையும் பெற்றுக்கொடுப்பதே எமது சிந்தனையாகும். அதைப் பத்திரிகைகள் கொச்சைப்படுத்தாது இருக்க வேண்டும் என்று அவற்றிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**தேர்தலுக்கான தயார்படுத்தல்**

அரசியல் கட்சிகள் பலவும் அடுத்த மாகாணசபைத் தேர்தலுக்கான முத்தாய்ப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்து விட்டன. எமது ஒவ்வொரு செயலும் கட்சிகளால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. எமது நடவடிக்கைகள் சம்பந்தமாக புதிது புதிதாக உரைகள் எழுதப்பட்டு வருகின்றன. தொடர் தேடல்களே விடியல்களுக்கு வழிவகுக்கும் என்ற வகையில் இவர்களின் முயற்சிகள் புதிய புதிய தேடல்களாக மாறி எம்மையும் வழிப்படுத்தட்டும் - என்றார். (ற-5,8)

## எழுத்து...

ணையைக் கைவிட நான் தயாராகவே இருக்கின்றேன்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பாலித்த ரங்கே பண்டாரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடந்துள்ளது. உட்கட்சி மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து, தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தடுத்துநிறுத்தும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.
கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் செய்வதற்கு தலைமை அமைச்சர் இணங்கியுள்ளார். எதற்காக வீண் பிரச்சினை? இப்படியே நாம் மோதிக்கொண்டால், மாகாண சபைத் தேர்தலில் பெரும் சிக்கல்வரும்" என்று இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.
தலைமைப் பதவியில் மாற்றம் வேண்டுமென பலமுறை கட்சிக்குள் கோசம் எழுப்பினேன். அதற்காக நான் தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளேன். தற்போது மாற்றம் வராவிட்டால், கட்சியைக் கட்டியெழுப்பவே முடியாது. எழுத்து மூல உத்தரவாதமொன்றைத் தலைவர் வழங்குவாரானால், நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதிலிருந்து நான் பின்வாங்குகின்றேன் என்று பாலித்த ரங்கே பண்டார பதிலளித்துள்ளார்.
சரி, ரணிலை நீங்கள் நேரில் சந்தித்துப் பேசுங்கள். அரசியல் ரீதியாக விமர்சிக்கலாம். ஆனால், ரணிலைத் தனிப்பட்ட ரீதியில் விமர்சிப்பது அரசியல் நாகரிகமல்ல. கட்சியின் ஒரு மூத்த உறுப்பினராக உங்களையும் நாங்கள் கருதுகின்றோம். அதனால்தான் இதைச் சொல்கின்றோம்.
எங்களிடம் கூறியவற்றை நீங்கள் ரணிலிடமும் சொன்னால் பிரச்சினையை இலகுவில் தீர்த்துக்கொள்ளலாம். சந்திப்புக்கான ஏற்பாட்டை நாங்கள் செய்கின்றோம். திங்கட்கிழமை (இன்று) நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெறும். அன்றைய தினத்திலேயே இந்தச் சந்திப்பை வைத்துக்கொள்ளலாம் என்று பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். அதற்கு பாலித்தவும் இணக்கம் தெரிவித்துள்ளார். (ற-5)

## பிறந்ததினமான....

தலைமை அமைச்சர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவுமே இவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது. தனது பிறந்தநாளான எதிர்வரும் 24ஆம் திகதி தனது பதவி விலகல் தொடர்பான முடிவை ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று தெரியவருகின்றது.
ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராக முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வரான அமைச்சர் சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படவுள்ளார் என்றே சிறிகொத்த தகவல்கள் கூறுகின்றன.
பரபரப்பான அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் இன்று நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் கட்சித் தலைமைத்துவ விவகாரம் சம்பந்தமாகப் பேசப்படவுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. கட்சித் தலைவர் பதவியிலிருந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. கட்சிக்குள்ளும் இதற்கான ஆதரவு வலுத்தது. தலைமை அமைச்சர் பதவியிருந்தும் ரணிலை ஓரங்கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சி கைகூடவில்லை.
தலைமை அமைச்சருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே செயற்பட ஆரம்பித்தமை கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கட்சிக்குள் மறுசீரமைப்பு செய்வதற்கு கொள்கையளவில் அவர் இணக்கம் வெளியிட்டிருந்தார். இது பற்றி ஆராய்வதற்காக குழுவொன்றையும் அவர் அமைத்திருந்தார். இதுவொரு சமாளிப்பு நடவடிக்கை என்று அதிருப்தியாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.
ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பாலித்த ரங்கே பண்டார, தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார். கட்சியின் தலைவர் பதவியைத் துறக்காவிட்டால் தனக்கு இதைவிட வேறு வழியில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். மகிந்த அணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் பாலித்தவுக்கு நேசக்கரம் நீட்டின.
இந்தப் பின்புலத்தில் சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பிய தலைமை அமைச்சரை நேரில் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர், கட்சிக்குள் உடனடியாக் மறுசீரமைப்பு செய்யவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் மத்தியில் செல்ல முடியாது. அடுத்துவரும் தேர்தல்களையும் சந்திக்க முடியாது எனக் குறிப்பிட்டு, கடந்தகாலப் பெறுபேறுகளை சுட்டிக்காட்டியுள்ளனர்.
"மாற்றம் செய்வதற்கு நான் சம்மதம் தெரிவித்தேன். கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவிலேயே இதற்கான சமிக்ஞையை நான் வெளிப்படுத்தியிருந்தேன். மறுசீரமைப்பு குழுவின் அறிக்கை கிடைத்ததும். அது நிச்சயம் நடக்கும்"என்று ரணில் பதிலளித்துள்ளார்.
ஆனால் சமாளிப்புப் பாணியில் மாற்றம் நடக்கக்கூடாது. முக்கிய பதவிகளில் முழு அளவிலான மாற்றம் வேண்டும் என்பதே அதிருப்திக் குழுவின் கோரிக்கையாகும். தலைமை அமைச்சர் பதவியைக் கருதி இதற்கு ரணில் பச்சைக்கொடி காட்டியுள்ளார் என்பதே பிந்திக் கிடைத்த தகவலாகும். இவ்வாறு தலைவர் பதவியை ரணில் துறந்த பின்னர், மூத்த தலைவர் என்ற பதவியொன்று உருவாக்கப்பட்டு அது ரணிலிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்றும், கட்சியின் யாப்பிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்றும் சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராக சஜித் பிரேமதாசவே நியமிக்கப்படவுள்ளார். உடல்நலக்குறைவால் சபாநாயகர் கரு ஜயசூரிய எந்தவொரு கட்சிப் பதவியையும் ஏற்கத் தயாரில்லை என்று அறிவித்துள்ளார். அத்துடன், அமைச்சர்களான நவீன் திஸாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ ஆகியோருக்கும் முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன.
அமைச்சர் சஜித் பிரேமதாஸ, சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றவர். இலங்கைப் படையினருக்கு எதிராக பன்னாட்டு விசாரணை தேவையில்லை என்றும், உள்நாட்டு விசாரணைகூட தேவையில்லை என்றும் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டவர். (ற-5)

## சிறிய...

நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாங்கள் நாட்டில் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக இருக்கிறோம். முஸ்லிம்கள் மிக பக்குவமாகவும், பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும். ஒரு சிறிய குழுவே இந்த நாசகார வேலைகளைச் செய்கிறது. அதற்காக முஸ்லிம்களாகிய நாங்கள் பெரும்பான்மை சமூகத்தை பகைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கு எங்களுடைய உயரிய நல்ல குணங்களைக் காண்பிக்கவேண்டும்.
கடந்த புதன்கிழமை முழுஅடைப்பு ஒன்றுக்கு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தயாரானார்கள். நாங்கள் அதனைத் தடுத்தோம். அதேபோன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்காக அம்பாறை பள்ளிக்கு பெருந்திரளானோர் வரவிருந்தனர். விரும்பத்தகாத செயல்கள் நடைபெறலாம் என்பதால் அவற்றையும் நாங்கள் தவிர்த்தோம்.
அம்பாறை பள்ளிவாசலில் நாளாந்தம் ஆண்கள், பெண்கள் என்று சுமார் 2 ஆயிரம் முஸ்லிம்கள் பள்ளிக்கு வந்து தொழுகைகளில் ஈடுபடுவதிலும், பிரயாணங்களின்போது ஓய்வு எடுப்பதற்கும், இரவு நேரங்களில் தங்குவதற்கும் வருகின்றார்கள். அதில் அரச ஊழியர்களே அதிகமானவர்கள். அவர்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ற-5)

## ரணிலுக்கு...

யில் கையொப்பம் திரட்டும் பணியை மகிந்த அணி நாளை ஆரம்பிக்கவுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தே அதன் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகத் தென்படுவதாலேயே மகிந்த அணி நேரில் களமிறங்கியுள்ளது.
மகிந்த அணியான கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதன்போதே மேற்படி பிரேரணையில் கையொப்பம் திரட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ற-5)

## கூட்டணியின் மூத்த உபதலைவரின் சாவுக்கு கட்சியின் தலைவரே காரணம்

### குற்றம் சுமத்துகின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், மார்ச் 5

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உப தலைவர் பொ.சிவகுலதிலக சிங்கத்தின் உயிரிழப்புக்கு, கூட்டணியின் தலைவர் சிவசுப்பிரமணியத்தின் செயற்பாடே காரணம் என்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியுள்ளார்.

'மிக ஆபத்தான விபத்தில் சிக்கி முள்ளந்தண்டு உள்பட பலசத்திர சிகிச்சைகளை செய்து விரைவாக தேறிக் கொண்டிருந்த எமது கட்சியின் மூத்த உப தலைவர் பொ.சிவகுலதிலகசிங்கம், சிவசுப்பிரமணியத்தின் முட்டாள்தனமான செயற்பாட்டால் திடீரென உயிரிழந்தார்' என்று ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் விடுதலை கூட்டணி தலைவரை நான் தாக்க முற்பட்டேன் என்றும், முக்கிய கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் உண்மைக்கு மாறான பல விடயங்களை அவர் கூறியதாக பல்வேறு ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களிலும்வெளி வந்த செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்.

பொ.சிவகுல திலகசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும், இறுதிச் சடங்கு ஒழுங்குகள் பற்றியும் மட்டுமே அன்றைய செயற்குழு கூட்டம் கட்சியின் உப தலைவர் சோமசுந்தரம் தலைமையில் அவசர அவசரமாக கூட்டப்பட்டது. அந்த நேரத்தில் தலைவர் சிவசுப்பிரமணியத்தின் நியாயப்படுத்த முடியாத வரவு அனைவருக்கும் ஆச்சரியத்தை கொடுத்தது. சிவசுப்பிரமணியத்தின் அலைபேசி உரையாடலின் தாக்கமே கடும் சிகிச்சைக்கு ஆளாகி விரைவாக தேறிக்கொண்டிருந்த கட்சியின் மூத்த உப தலைவரின் திடீர் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்தது. இதனால் மிகவும் சோகத்தில் இருந்த எமது செயற்குழு உறுப்பினர்கள், இவருடைய போக்கில் மிகவும் வெறுப்படைந்திருந்தனர்.

கடந்த ஆறுமாத காலமாக இவருடன் கட்சி எதுவித தொடர்பும் கொண்டிருக்கவில்லை. இவர் மீது சில சந்தேகங்கள் இருந்தமையால் இவரை நாம் எந்த நிகழ்வுக்கும் அழைக்கவில்லை என்பதே உண்மை. இவர் கூட்டத்துக்கு சமுகம் கொடுத்தமை திட்டமிட்ட ஓர் செயல் என நான் கருதுகின்றேன். இவரை நானே வெளியேறுமாறு பணித்தேன். அவர் மறுத்தமையாலே, நிர்வாக சபை உறுப்பினர்களே அவரை வெளியில் அனுப்பி வைத்தனர்.

இவர் மீது என்றோ எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கை, நிர்வாகக் குழுவின் தீர்மானத்துக்கமைய விரைவில் பொதுச் சபையில் எடுக்கப்படும். இந்த விடயத்தில் என் தலையீடு இல்லாதிருந்திருந்தால் இவரின் அன்றைய நடத்தை பெரும் விபரீதத்தை ஏற்படுத்தியிருக்கும். குறித்த சம்பவங்கள் அனைத்தும் எமக்கு மகிழ்ச்சி தரும் விடயமல்ல - என்றுள்ளது. (5)

## மாகாணசபைத் தேர்தல்:

# நாடு முழுவதிலுமுள்ள 222 தொகுதிகளில் 25 தொகுதிகளே தமிழர்களுக்கானது

கொழும்பு, மார்ச் 5

மாகாணசபைத் தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் குழுவின் அறிக்கை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் நாடு முழுவதையும் 222 மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளாக உருவாக்கும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 175 தொகுதிகள் சிங்களவர்களுக்கானதா கவும், 25 தொகுதிகள் தமிழர்களுக்கானதாகவும், 13 தொகுதிகள் முஸ்லிம்களுக்கானதா கவும், 9 தொகுதிகள் மலையகத் தமிழர்களுக்கானதாகவும் உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நேரடி மற்றும் விகிதாசார முறைகள் இணைந்த கலப்புமுறையில் நடத்த சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கமைய, 50 வீதமான உறுப்பினர்கள் நேரடியாகவும், 50 வீதமான உறுப்பினர்கள் மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மாகாணசபைகளின் தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் பணிகள் கலாநிதி தவலிங்கம் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் குழு 4 மாதங்களில் தமது அறிக்கையை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் தொகுதி நிர்ணயத்தின்போது, முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் அரசியல் கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. 222 மாகாணசபைத் தொகுதிகளில் 13 உறுப்பினரை மாத்திரமே முஸ்லிம்கள் பெறமுடியும்என்றும், 9 மாகாணங்களில் 5 மாகாணசபைகளில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் என்றும், எல்லை வரையறுக்கும் குழுவில் இடம்பெற்றிருந் பேராசிரியர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

'இது கவலை தரும் விடயம். ஆனால் எல்லை வரையறை செய்யும் குழு சட்டத்தின்படியே செயற்பட முடியும். இந்த விவகாரத்தை தீர்க்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை பொருத்தமான வழிமுறைகளில் தீர்த்துக் கொள்ள வேண்டும்' என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை கலப்பு தேர்தல் முறையில்முதன்முறையாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான சபைகளில் தொங்கு ஆட்சியே ஏற்பட்டுள்ளது. இதனால் மாகாணசபைத் தேர்தலில், வட்டாரப் பிரதிநிதித்துவத்தை 70 சதவீதமாகவும், விகிதாசார பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாகவும் உள்ளடக்கி தேர்தலை நடத்த அரசு ஆலோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)



### அட! அப்படியா சங்கதி!!

## வடக்கில் சீனா கண்

கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் இப்போது வடக்கில் கண்வைக்க ஆரம்பித்துள்ளதாம். வடக்கிலுள்ள முக்கிய அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதிகளை சந்திக்கத் தூது அனுப்பியுள்ள 'சைனீஸ் எம்பஸ்ஸி' அவர்களை வளைத்துப் போட சில திட்டங்களை அவர்களுக்கு ஊடாக நடைமுறைப்படுத்தவும் உத்தேசித்துள்ளதாம்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கின் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அப்பால் மக்களுக்கான சுயதொழில் உதவிகளையும் வழங்க சீனா தீர்மானித்துள்ளதாம். அந்தப் பகுதி அரசியல்வாதிகள் ஊடாக இந்தப் பணிகள் செய்யப்படவுள்ளனவாம்.

## பன்னாட்டு நாணய நிதியம் குழப்பத்தை ஏற்படுத்துகிறது

### இப்போது சொல்கிறார் முன்னாள் நிதி அமைச்சர் ரவி

கொழும்பு, மார்ச் 5

பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படுவதனாலேயே தேவையற்ற அரசியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த நிதியம் மக்கள் மத்தியில் அரசைத் துரோகியாகக் காண்பித்து மக்களுக்கும் அரசுக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. வெள்ளைக்காரர்களின் நிகழ்ச்சி நிரலை நாம் ஒருபோதும் செயற்படுத்தக் கூடாது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் தேவைப்பாடுகள் நிறைவடைந்து விட்டன. குறித்த நிதியம் இனி எமது நாட்டில் இருந்து வெளியேறும் காலம் வந்து விட்டது. இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி பணியகத்தில் நேற்று விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிடமிருந்து பன்னாட்டு நாணய நிதியத்துக்கு கிடைக்க வேண்டியவை கிடைத்து விட்டன. அந்த நிதியத்திடமிருந்து கிடைக்க வேண்டியது எமக்குக் கிடைத்து விட்டது. தற்போது அவர்களது கோரிக்கைகளுக்கு அடிபணிய வேண்டிய அவசியமில்லை.

நாட்டு மக்களுக்குத் தேவையான யோசனைகளையே நடைமுறைப்படுத்த வேண்டும். அதனை விடுத்து வேறு தேவையற்ற யோசனைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை. வீடு விற்கும் போது 15 வீத வற்வரி அறவிடவேண்டும் என்பது பன்னாட்டு நாணய நிதியத்தின் யோசனையாகும். இந்த யோசனையினால் எந்தவொரு லாபமும் கிடைக்காது. கைத்தொழில் துறை பாதிப்பு ஏற்படுவதே மீதமாகும்.

நான் நிதி அமைச்சராக இருந்த போது வற்வரியை இரண்டு ஆண்டுகளில் 9 வீதமாக குறைப்பேன் என்று கூறினேன். தற்போது அதற்கான காலம் வந்துள்ளது. நான் அமைச்சராக இருந்த போது 25 மற்றும் 30 வீதம் வரை அரச வருமானம் அதிகரித்து வந்தது. மதுவரியின் ஊடாக பெரிய வருமானத்தைப் பெற்றோம். எனினும் தற்போது அந்த நிலமை இல்லை. மதுவரி வருமானம் பெருமளவில் குறைந்துள்ளது. நான் அமைச்சராக இருந்த போது பெற்ற வருமானங்கள் எங்கே? அது எங்கு போய் உள்ளது என்பதனைத் தேடிப் பார்க்க வேண்டும். இல்லையேல் மீண்டும் மக்கள் மீது அதிக வரியைச் சுமத்த வேண்டி ஏற்படும் - என்றார். (5,61)

## மகிந்தவின் தலையில் கட்டிவிட்டு அரசு தப்பிக்க முயற்சிக்கின்றது

### அம்பாறைச் சம்பவம் தொடர்பில் விமலவீர எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

அம்பாறைத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர்களை தான் காப்பாற்ற முயற்சி செய்வதாக கூறமுற்படுவது முட்டாள்தனமானது என்று திகா மடுல்லை மாவட்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல வீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர்இதுதொடர்பில்மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட சிறு மோதல் சம்பவம் மதத் தலம் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றுள்ளது. இது மேலும் பரவாமல் நாம் தடுக்க வேண்டும். அதனை விட்டு விட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்ற முயற்சிக்கக் கூடாது. அம்பாறையில் சமாதானம் மலரவே நாம் இந்த விடயத்தில் தலையிட்டுள்ளோம். எவரையும் பாதுகாக்கும், காப்பாற்றும் நோக்கில் இதில் நாம் தலையிடவில்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் முன்னணியின் பொறுப்பில் இருக்கும் எவரும் தொடர்புபடவும் இல்லை அதனால் எவரையும் காப்பற்ற எந்த ஒரு தேவையும் எமக்கு இல்லை.

மோதல் சம்பவம் இடம்பெற்றபோது முஸ்லிம் ஹோட்டலுக்குள் பொலிஸார் இருந்தனர். அதேபோல் தாக்கப்பட்ட மதத் தலத்துக்கு மிக அண்மையில் பொலிஸ் நிலையம் உள்ளது. தாக்குதலை தடுத்து நிறுத்துவது பொலிஸாரின் கடமை. அதனை விடுத்து இந்தச் சம்பவத்தை அரசியலுடன், கட்சிகளுடன் முடிச்சுப் போடுவது முட்டாள்தனமாகும்.

அது தவிர நான் இந்த அரசில் எந்த ஒரு பொறுப்பிலும் இல்லை. எமது தலைவர் மகிந்த ராஜபக்ச ஆவார். அவரும் இந்த அரசில் இல்லை. இவ்வாறு இருக்கத்தக்கதாக நாங்கள் எவ்வாறு சட்டம் ஒழுங்கு விதி முறைகளுக்கு அப்பால் மூக்கை நுழைக்க முடியும்.

கடந்த காலங்களைப் போல இந்த விடயத்தையும் மகிந்த ராஜபக்சவின் தலை மீது போட்டுவிட்டு சிலர் அரசியல் இலாபம் தேடும் முயற்சியாகவே நாம் இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் மட்டுமல்ல முழு நாட்டிலும் அனைத்து இன மக்களும் மிகவும் நல்லுறவுடன் வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (5,48)

## பன்னாட்டுச் சமூகமே தீர்வு தரவேண்டும்

### ஐ.நா. பக்க அமர்வில் சிவாஜி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 5

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இலங்கை அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பில் பன்னாட்டுச் சமூகமும், ஐ.நா. மனித உரிமைகள் சபையும் உரிய கவனம் செலுத்தவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்றுவருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை அங்கு இடம்பெற்ற பக்க அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (5,61)

### காணாமற்போனோர் பணியகம்

# குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியல்ல

*மகிந்தவைச் சாடுகிறார் மங்கள*

கொழும்பு, மார்ச் 5



காணாமற்போனோர் பணியகம் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் கடந்த காலங்களில் காணாமற்போயிருந்தனர். இவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கும் நீதியை நிலைநாட்டுவதும் இந்தப் பணியகத்துக்கு உள்ள பொறுப்பாகும். குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி இதுவல்ல. இவ்வாறு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

காணாமற்போனோர் பணியகத்துக்கு ஆணையாளர்களை நியமித்தமை கூட்டு அரசுக்குக் கிடைத்த வெற்றியாகும். இலங்கையில் காணாமற் போனோர் தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து, அது தொடர்பான பரிந்துரைகளை மேற்கொள்வதே இந்தப் பணியகத்துக்கு உள்ள முக்கிய பொறுப்பாகும்.

1980ஆம் ஆண்டு முதல், காணாமற் போனோர் விடயங்களில் நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன். ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. சபையின் மனிதஉரிமைகள்ஆணைக் குழுவுக்கு1980ஆம்ஆண்டு முதல் காணாமற் போனோர் குறித்து, முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொடுத்து, காணாமற் போனோரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் நானும் செயற்பட்டோம்.

இந்த முயற்சி வெற்றி பெறுவதற்காக, அன்னையர் முன்னணி அமைப்பு என்ற பெயரில் அமைப்பொன்றும் அமைக்கப்பட்டது. அதன் இணை அமைப்பாளராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், நானும் இருந்தோம்.

இருப்பினும் மகிந்த ராஜபக்ச தற்போது படையினரை பணயமாக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்தி பணியகத்துக்கு எதிராகச் செயற்படுகின்றார். இந்த விடயம் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் கடந்த காலங்களில் காணாமற் போயிருந்தனர். இவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கும் நீதியை நிலைநாட்டுவதே இந்தப் பணியகத்துக்கு உள்ள பொறுப்பாகும். குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி இதுவல்ல. இன, மதம், பிரதேச வேறுபாடுகளின்றி காணாமற் போனோர் தொடர்பான குடும்ப அங்கத்தவர்கள் எதிர்கொண்ட சிரமங்களுக்குத் தீர்வை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும். இன பேதங்களுக்கு அப்பால் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## சுயாதீனமானவர்கள் நியமிக்கப்படவில்லை

*குற்றம் சுமத்துகிறது கடும்போக்கு சிங்கள அமைப்பு*

கொழும்பு, மார்ச் 5



மைத்திரிபால சிறிசேன காணாமற் போனோர் பணியகத்துக்கு சுயாதீனமாக செயற்படக்கூடிய உறுப்பினர்களை நியமிக்கத் தவறிவிட்டார். புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கி அவர்களது கட்டளைகளை நிறைவேற்றுபவர்களே காணாமற்போனோர் பணியகத்துக்கு ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த கால அரசுக்குப் பாதகமாகவும், நல்லாட்சி அரசுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கு சாதகமாகவும் தமது விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர். குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற மேற்குலக நாடுகளின் விருப்பங்களை மைத்திரி, காணாமற் போனோர் பணியக விவகாரத்தில் நிறைவேற்றியுள்ளார். போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் மாத்திரம் கிடையாது. சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்குலக நாடுகள் போர் விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமாகவே இன்றுவரை இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

இறுதிக்கட்டப் போரில் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் பலர் காணாமற் போயுள்ளனர் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்குநியாயம்கிடைக்க வேண்டும். அதற்காக நாட்டை ஒருபொழுதும் காட்டிக்கொடுக்கவும், விட்டுக் கொடுக்கவும் முடியாது.

கடந்த காலங்களில் இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மந்தகரமாகவே காணப்பட்டது. தற்போது நியமிக்கப்பட்டுள்ளவர்கள் ஒருபோதும் சுயாதீனமாக செயற்படமாட்டார்கள்.

இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் விருப்பங்களுக்கு அமையவே தமது விசாரணைகளை மேற்கொள்வார்கள். அலுவலகத்தின் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விசாரணைகள் முழுமைப்பெற வேண்டும் என்ற கட்டாயம் காணப்படுவதன் காரணமாக இவர்கள் பொய்யான விசாரணைகளையும், சாட்சியங்களையும் உருவாக்க முடியும்.

இறுதி விசாரணை அறிக்கையினை இவர்கள் மேற்குலகத்தவரின் விருப்பங்களுக்கு அமையவே உருவாக்கி பன்னாட்டுச் சமூக மட்டத்தில் இலங்கையினை காட்டிக் கொடுத்து நாட்டை பன்னாட்டு நீதிமன்றம் வரை கொண்டு செல்வார்கள் என்பதை நல்லாட்சியின் தலைவர் மறந்துவிடக் கூடாது - என்றார். (5,31)

## கிரியெல்ல தகுதியற்றவர்

*அமைச்சர் மனோ தெரிவிப்பு*

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு பதவிக்கு லக்ஷ்மன் கிரியெல்லவை நியமிக்க முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் கூட்டு அரசின், அரசியல் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும். அனைவருக்கும் எடுத்துக்காட்டாக காணப்படும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்கு இவர் தகைமையற்றவராகவே காணப்படுகின்றார். இவ்வாறு தேசிய சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சை முறையாக நிர்வகிக்காமையின் காரணமாகவே இவரது அமைச்சைக் கடந்த அமைச்சரவையில் மாற்றினர். சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி தற்போது சவால்களை எதிர்கொண்டு வருவதால் அதற்குத் தீர்வு காண லக்ஷ்மன் கிரியெல்லவை நியமிப்பது பொருத்தமற்றதாகவே காணப்படும். இவரது பொறுப்பில் கடந்த காலத்தில் இருந்த உயர் கல்வி அமைச்சில் பெரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சட்டத்துறையில் தகைமை மற்றும் தேர்ச்சி பெற்றோர் பலர் காணப்படுகின்றனர். அவர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. ஆனால் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் அவற்றைக் கருத்திற்கொள்ளாமல் செயற்படுவது அரசியல் நெருக்கடியை மேலும் அதிகரிப்பதாகவே அமையும் - என்றார். (5,61)

## காணாமல் ஆக்கப்பட்டவரின் மனைவியும் பணியக உறுப்பினர்

கொழும்பு, மார்ச் 5

காணாமற்போனோர் பணியகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள 6 பேரில், காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் மனைவியான ஜெயதீபா புண்ணியமூர்த்தியும் அடங்கியுள்ளார்.



அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் 28ஆம் திகதி, சாலிய பீரிஸ்தலைமையிலான காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர் உள்ளிட்ட 7 உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

இந்த 6 உறுப்பினர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜெயதீபா புண்ணியமூர்த்தி என்ற பெண்ணும் ஒருவராவார். இவர், காணாமல் ஆக்கப்பட்ட பத்மசிறி என்பவரின் மனைவியாவார்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த நான்காவது நாள், மட்டக்களப்பில் இவரது கணவன் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். இதையடுத்து, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் போராட்டங்களில் ஜெயதீபா புண்ணியமூர்த்தி தீவிரமாக ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## சீனாவின் பட்டுப் பாதை இலங்கைக்கு நன்மையானது

*சீனாவுக்கான இலங்கை தூதுவர் தெரிவிப்பு*

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் இலங்கையர்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்று சீனாவுக்கான இலங்கை தூதர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

சீன ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் வரலாற்றைப் பார்க்கும்போது, அவை ஏனைய நாடுகளை ஆக்கிரமித்து வந்துள்ளன. பட்டுப்பாதைத் திட்டம் தொடர்பில் மேற்குலக முதலாளித்துவ வாதிகள் கூறும் கருத்துக்கள் அடிப்படையற்றவை. அந்த நாடுகள் தமது மக்களின் நலன்களையே முன்னிலைப் படுத்தியுள்ளன. பட்டுப்பாதைத் திட்டமானது இலங்கைக்கு நன்மைப் பயக்கக்கூடியது. நாம் அதனை ஆதரித்து, அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (5)

## சார்க் பிராந்திய நுண்நிதி துறை மாநாடு நாளை

கொழும்பு, மார்ச் 5

சார்க் பிராந்திய நுண்நிதி துறை மாநாடு கொழும்பில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு சினமன் ஹோட்டலில் இரு தினங்கள் இடம்பெறவுள்ளது.

'தெற்காசியாவின் நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்துதல்' என்பது மாநாட்டின் தொனிப் பொருளாகும்.

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 300 க்கும் அதிகமான பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# கொழும்பில் அரசியல் மாற்றத்துக்கு காய் நகர்த்துகின்றதா சீனா ?

கொழும்பு, மார்ச் 5

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி கொழும்பு அரசியலில் அதிரடி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு சீனா திரைமறைவில் காய்நகர்த்தி வருகின்றது என்று தேசிய புலனாய்வுத் துறை அரச உயர்மட்டத்திடம் தகவல் தெரிவித்திருப்பதாக மிக நம்பகரமாக அறிய முடிகின்றது.

வெளிநாட்டுச் சேவையை சாராத சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரான ஒருவரான செங் சுயானை புதிய தூதுவராக நியமித்திருக்கும் சீனா, இலங்கையில் தற்போதுள்ள அரசியல் உறுதிப்பாடற்ற நிலையைப் பயன்படுத்தி, அவரினூடாக சில முக்கிய காய் நகர்த்தல்களை செய்யத் திட்டமிட்டிருக்கின்றது என்று அரச தேசிய புலனாய்வுத்துறை தனது இரகசிய அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியுள்ளது என்று தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் கொழும்பு வந்து பதவியேற்ற புதிய சீனத் தூதுவர் செங் சுயான், பதவியேற்ற கையோடு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தப் பின்னணியில் கொழும்பு அரசியலில் மாற்றமொன்றை செய்யத் திட்டமிடும் சீனா அதற்குத் தேவையான பின்புல ஏற்பாடுகளையும் அரசியல் கட்சிகளுக்கு செய்யும் வாய்ப்பிருக்கின்றது என்று தேசிய புலனாய்வுத்துறை அரசை எச்சரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவந்த மிகமுக்கிய அபிவிருத்தித்திட்டங்கள் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அதிரடியாக தடுத்து நிறுத்தப்பட்டன. கொழும்பு மீது, பீஜிங் கடும் சீற்றத்துடன் இருந்தது. இருந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை தனக்கு வழங்கி விட்டு, மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்கியதாலும் சீனா கடும் அதிருப்தியில் இருந்தது. அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் மகிந்தவின் கை ஓங்கியுள்ளது. இவரின் ஆட்சிக்காலத்தில் சீனாவுக்கு சார்பான அயலுறவுத்துறைக் கொள்கையையே இலங்கை அரசு கடைப்பிடித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிரடி காட்ட சீனா தயாராகி வருகின்றது என்று அறியமுடிகின்றது. (5)

## துறைமுகத்தைப் பார்வையிட சீன நிறுவனம் அனுமதிமறுப்பு

கொழும்பு, மார்ச் 5
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பார்வையிடுவதற்குச்சீனநிறுவனம்மறுப்புத் தெரிவித்துள்ளதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. கொழும்பின் பிரபல பாடசாலையின் மாணவர்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்றுள்ளனர். துறைமுகத்தை மாணவர்கள் பார்வையிட அதனை நிர்வாகம் செய்யும் சீன நிறுவனம் அனுமதி வழங்கவில்லை.

துறைமுகத்தைப் பார்வையிடச் சென்ற மாணவர்களைப் பாதுகாப்பு அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர். சீன நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கேற்ப தாம் செயற்படுவதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்குத் துறைமுகத்தைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை, அம்பாந்தோட்டைத்துறைமுகம் சீன நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# அஷ்ரப்பின் உயிரிழப்பு திட்டமிட்ட சதியா?

## *18 ஆண்டு கால இரகசியத்தை ஆர்.ரி.ஐ. அம்பலப்படுத்தியது*

கொழும்பு, மார்ச் 5
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிறுவகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் உலங்குவானூர்தி விபத்தில் உயிரிழப்பதற்கு குண்டுவெடிப்பு ஏதும் காரணமில்லை என்று தெரியவந்துள்ளது.



2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி, அமைச்சராக இருந்த எம்.எச்.எம். அஷ்ரப் உள்ளிட்டவர்கள் பயணம் செய்த எம்.ஐ.17 உலங்குவானூர்தி ஊரகந்தப் பகுதியில் மலையில் விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவத்தில் அஷ்ரப் உள்ளிட்ட 14 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் திட்டமிட்ட ஒரு சதிச்செயலாக இருக்கலாம் என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் இருந்து வந்தது. அஷ்ரப் உயிரிழப்புத் தொடர்பாக ஆராய, மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி வீரசேகர தலைமையிலான விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை இதுவரையில் பகிரங்கப்படுத்தப்படாமல் இருந்து வந்த நிலையில், தகவல் உரிமைச் சட்டத்தின் (ஆர்.ரி.ஐ.) கீழ் அந்த அறிக்கையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகு தாவூத் பெற்றுள்ளார்.

இதையடுத்து, ஆணைக்குழுவின் கண்டறிவுகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளன. அஷ்ரப் பயணம் செய்த உலங்குவானூர்தி விபத்துக்குள்ளானதற்குக் குண்டுவெடிப்பு ஏதும் காரணமில்லை என்று தெரியவந்துள்ளது.

'அமைச்சர் அஷ்ரப்பின் உயிரிழப்புக்கு யாரேனும் ஒருவர் அல்லது குழு காரணமாக இருக்கலாம் என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. குண்டுவெடிப்பினால் அல்லது எந்தவொரு வெடிபொருளினால் இந்த விபத்து நேரிட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை என்று அரச பகுப்பாய்வாளர், சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் உதவியாளர்கள் ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளனர்' என்று விசாரணைக் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், வானூர்திப் பராமரிப்புப் பணியாளர்களின் அலட்சியம் அல்லது கண்டுகொள்ளாத போக்கு இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

'2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி, பிற்பகல் வான்படைத் தளபதியைத் தொடர்பு கொண்ட அஷ்ரப், தனிப்பட்ட முறையில் கல்முனை செல்வதற்கு உலங்குவானூர்தி ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு கோரியிருந்தார். விசாரணைக்குழு மேற்கொண்ட ஆய்வுகளின் படி, விபத்துக்குள்ளான உலங்குவானூர்தி அந்த நேரத்தில், பழுதடைந்திருந்தது.

குறித்த உலங்குவானூர்தியை விமானப்படைத் தளபதி எந்தப் பரிசோதனையுமின்றி அவரது பயணத்துக்கு ஒதுக்கியிருக்கமாட்டார். ஏனென்றால், பறப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ள வானூர்திகளின் பட்டியல் ஒவ்வொரு நாள் காலையிலும் விமானப் படைத் தளபதிக்கு வழங்கப்படுவது வழக்கம்.

செப்ரெம்பர் 15ஆம் திகதி காலை 8.30 மணியளவில், பறக்கக் கூடிய நிலையில் இருந்த வானூர்திகளின் பட்டியலில், விபத்துக்குள்ளான உலங்குவானூர்தியும் இருந்துள்ளது. ஆனால் உண்மை அதுவல்ல. வான்படைத் தளபதி தவறாக-வழிநடத்தப்பட்டுள்ளார் என்று விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (5)

## ஜப்பானுக்குப் பறக்கிறார் அரச தலைவர் மைத்திரி

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த மாத நடுப்பகுதியில் ஜப்பானுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, பிராந்தியத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்கின்ற ஒரு முயற்சியாக இலங்கையுடன் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளும் தனது அர்ப்பணிப்பை ஜப்பான் உறுதிப்படுத்தவுள்ளது. ஜப்பானில் இருந்து வெளியாகும் ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ஜப்பானுக்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜப்பானிய சக்கரவர்த்தி அகிஹிடோ மற்றும் பேரரசி மிசிகோ ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அரச தலைவரைச் சந்திக்கும் போது, பொருளாதாரத் துறையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஜப்பானிய தலைமை அமைச்சர் ஷன்சோ அபே உறுதிப்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன என்றும், சுதந்திரமான திறந்த இந்தோபசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## காணாமல் போனோர் பணியகத்தின் பேச்சாளர் அடுத்தவாரம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 5
காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர்கள் இந்த வாரம் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். கடந்த மாதம் 28ஆம் திகதி காணாமற்போனோர் பணியகத்தின் தலைவராகச் சாலிய பீரிசை நியமித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அதன் ஏனைய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வழங்கினார்.

இந்த நிலையில், காணாமற் போனோர் பணியகத்தின் ஆணையாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஏழு பேரும், இந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதன் பின்னர், ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இதன்போது பணியகத்தின் பேச்சாளர் யார் என்பது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்று, பணியகத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். (5)

## இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மாத்திரை புத்திக் குறைபாடுடையவர்களின் கருத்து

### *சாடுகின்றார் அமைச்சர் ராஜித*

கொழும்பு, மார்ச் 5
இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மருந்து ஆங்கில மருத்துவத்தில் இல்லை. இலங்கையில் தொழில்நுட்பம் அபிவிருத்தி அடைந்துள்ள நிலையிலும், இது போன்ற கருத்துக்களை நம்புவதில் புத்திக் குறைபாடுள்ளவர்களாகவே உள்ளனர். இவ்வாறு சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ண தெரிவித்தார். தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை நகரில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸார் அசமந்தப் போக்கில் செயற்பட்டமை பிரச்சினையாகியுள்ளது.

பொய்யானசெய்தியொன்றை அடிப்படையாக வைத்தே இந்த வன்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மாத்திரை என்ற ஒன்று ஆங்கில மருத்துவத்தில் இல்லை. இலங்கையில் தொழில்நுட்பம்அபிவிருத்திஅடைந்துள்ள நிலையிலும், இதுபோன்ற கருத்துக்களை நம்புவதில் புத்திக்குறைபாடுள்ளவர்களாகவே உள்ளனர்.

மிகவும் சிறிய ஒரு பிரச்சினையைமுதன்மைப்படுத்தி முழு நாட்டையும் தீ வைக்க முயற்சிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

அம்பாறைச்சம்பவம் உடனடிக் காரணங்களினால் உருவான ஒன்றா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த அரசின் காலத்தில் இருந்த முக்கிய நபரினால் குற்றம்சாட்டப்பட்ட நபர் ஒருவர் அம்பாறைச் சம்பவம் இடம்பெறசிலதினங்களுக்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் செயற்பட்டுள்ளார். பொலிஸ் அதிகாரிகளுடனும் பல பேச்சுக்களை முன்னெடுத்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மருந்து என்ற போர்வையில் இனவாதத் தீயை மூட்ட இவர் செயற்பட்டுள்ளாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இனவாதம் பேசி வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தற்பொழுதுள்ள சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த அரசு இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எதிரானது. இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் ஆதரவாக செயற்படுபவர்கள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் இந்த அரசு புதிய சட்டம் இயற்றியுள்ளது. இந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். கிடைத் துள்ள சமாதானத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாதவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் – என்றார். (5)

## வானூர்தி பயண தாமதங்களால் 5 கோடி இழப்பு

கொழும்பு, மார்ச் 5
வானூர்திப் பயணங்கள் தாமதமடைந்த காரணத்தினால் சிறிலங்கன் வானூர்தி சேவைக்கு ஐந்து கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்கப் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வானூர்திப் பயணங்கள் தாமதமடைந்துள்ளதாக வானூர்தி நிலைய உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில வானூர்திகளில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக இவ்வாறு வானூர்திப் பயணங்கள் கால தாமதமடைந்துள்ளன. கடந்த வாரத்தில் மட்டும் இவ்வாறு பத்து வானூர்திப் பயணங்கள் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன.

வானூர்திப் பயணங்கள் காலம் தாமதித்த காரணத்தினால் சிறிலங்கன் வானூர்தி சேவை நிறுவனத்திற்கு 5 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. (5)

## உறுப்பினர்களின் பட்டியல் 9ஆம் திகதி வெளியீடு

### *மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 5
உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் மூலம், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 9ஆம் திகதி அரசிதழில்வெளியிடப்படவுள்ளது.

அரசியல் கட்சிகள், விகிதாசார உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை, மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்குவதற்கான கால அவகாசம், அரசியற் கட்சிகள் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, எதிர்வரும் புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பெயர்ப் பட்டியலை அரசிதழில் அறிவித்தல் மூலம் பிரகடனப் படுத்தும் பணி எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தினம் மேலும் நீடிக்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (5)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி அன்னலட்சுமி சின்னத்துரை

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சின்னத்துரை (03.03.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் சின்னத்துரையின் மனைவியும் இராஜேஸ்வரி, கந்தசாமி (கனடா), விக்கினேஸ்வரன் (கனடா), சிவநேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் குணரத்தினம் (அதிபர் - யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம்), குணா (கனடா), ஞானி (கனடா), கிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் யதுர்ஷன் (பொறியியலாளர்), சுதர்சனா (Phd Student), கஜானனன் (யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவன்), அழகன் (யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற மன்மோகன் மற்றும் கோவேந்தன் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி உயர்தர மாணவன்), தேவேஸ்வரி (யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) சுனித்தன் (கனடா), அனித்தா (கனடா), அனுசா (கனடா) வருனி (கனடா), மகீசன் (கனடா), அபிராமி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் அமீராவின் பூட்டியும் சின்னம்மா, காலஞ்சென்றவர்களான சின்னம்மணி, சி.ஐயாத்துரை, பொன்னுத்துரை (கனடா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, ஆனந்தர், தங்கம்மா, சௌந்தரம், அன்னப்பிள்ளை மற்றும் சிற்றம்பலம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 015 8446 — தகவல்: குடும்பத்தினர்.

CS 57315(17)

## வைரமுத்து சோமசேகரன்

*(ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர் சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்)*



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி, மானிப்பாயை வாழ்விடமாகவும் தற்பொழுது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து சோமசேகரன் நேற்று (04.03.2018) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தலைமை ஆசிரியர் வைரமுத்து (செல்லையா வாத்தியார்) - மனோன்மணிஅம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் பேரம்பலம் அவனியூ சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (ஆசிரியர்) - நாகரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும் பதிவு பெற்ற வைத்திய அதிகாரி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வைதேகி (நோர்வே), மைக்ரோ பீ.சி இயக்குநர்களான ககனாந்தா, குகனானந்தா ஆகியோரின் தந்தையும் பிரபாகரன் (நோர்வே), வினோதா, கார்த்திகா ஆகியோரின் மாமனும் கருணிகா (நோர்வே), தனிஸ்கா, யாதுரா, பிரதன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சண்முக ரட்ணம் மற்றும் பொன்மயிலாம்பிகை, பூரணானந்தம்பிள்ளை, திருநிலைநாயகி, செல்வேந்திரன் (கனடா), விஜயேந்திரன் (லண்டன்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கலாமணி ஆகியோரின் சகோதரரும் பரமேஸ்வரி, யுகவதி (லண்டன்), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரஞ்சோதிநாதன், மங்கையற்கரசி, பஜனேஸ்வரி (பிரான்ஸ்), மகாலிங்கம், இராஜேஸ்வரி, காந்தமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மதிவதனி (லண்டன்), பிரிய தர்சினி (பிரான்ஸ்), லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் சுப்பிரமணியம் தம்பதிகள், சந்திரசேகரம் தம்பதிகள், ஸ்ரீஸ்கந்தன் தம்பதிகள் ஆகியோரின் சம்பந்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம், பாலேந்திரன் மற்றும் அமிர்தலிங்கம், உமா, விஜயசுந்தரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

115/8, W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு - 06

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 03 . 1957



மறைவு
04 . 03 . 2018

### செல்வி கௌசல்யா வேலாயுதம்

(சட்டத்தரணி, கொழும்பு)
(முன்னாள் ஊழியர் - Lanka Cement Ltd)

மல்லாகம் புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், நாரம்ஹன்பிட்டி, மனிங்ரவுண், தொடர் மாடியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி செல்வி கௌசல்யா வேலாயுதம் (04.03.2018) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் ஜெகதீஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் ராதா, ஜெயமோகன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் குசலகுமாரன், றஞ்சி ஆகியோரின் மைத்துனியும் சாரங்கனின் பெரியம்மாவும் நீலனின் மாமியும் காலஞ்சென்ற விவேகானந்தன், சுபத்திராதேவி ஆகியோரின் மருமகளும் செல்வநாயகம், மங்களேஸ்வரி காலஞ்சென்றவர்களான சபாபதிப் பிள்ளை, முத்துக்குமாரு, மாணிக்கவாசகர் ,பாக்கிய லட்சுமி, தையல்நாயகி ஆகியோரின் பெறா மகளும் சுதாகரன், விவேகா, செல்வகௌரி, மாதங்கி, ஜெயராணி காலஞ்சென்ற யோகரட்ணம், விஜயலட்சுமி காலஞ்சென்ற புஸ்பம், மகேந்திரன், கமலா காலஞ்சென்ற யசோதரா ,ஸ்ரீஸ்கந்தகுமார், ஸ்ரீரமணகுமார், ஸ்ரீசெல்வ குமார், ஸ்ரீசிவ குமார், ஸ்ரீகிருஸ்ணகுமார், ஸ்ரீரஞ்சனாதேவி ,ஸ்ரீவத்சலாதேவி, ரகுநாதன், பராசக்தி காலஞ்சென்ற சதானந்தன் காலஞ்சென்ற நித்தியானந்தன், இந்துமதி, ஞானேஸ்வரி காலஞ்சென்ற மனோகரன் காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 8.30 மணியளவில் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 4 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471
021 492 7472



ES Printers

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை சின்னார்



மண்ணில் 01.03.1930 — விண்ணில் 01.03.2018

யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சின்னார் கடந்த 01.03.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முதலியார் ஐயம் பிள்ளை - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முதலியார் சின்னார் அவர்களின் பாசமிகு மனைவியும், கனகராஜா (அருமை - இலங்கை), நல்லம்மா (தங்கம் - இலங்கை), இராசலிங்கம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), தர்மரத்தினம் (பூபதி - சுவிஸ்), காலஞ்சென்ற கிஸ்ணன் (இலங்கை) மற்றும் நாகேஸ்வரன் (நாகேஸ் - Stuttgart Indo Euro Shop Ceylonas Restaurant - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தருமரத்தினம் (இலங்கை), செல்லம்மா (இலங்கை), ஞானேஸ்வரி (ஜேர்மனி), தங்கராஜா (பிரான்ஸ்), வசந்தராணி (சுவிஸ்), ஜெயந்தினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரன், இந்திரன், ஈசன், றூபன், ரவி, உமா, கிருபா, கவி, கௌரி (இலங்கை), காயத்திரி (ஜேர்மனி), லதா (ஜேர்மனி), மஞ்சுளா, அமுதி சுகந்தன், சசி (இலங்கை), கரன், கலா (ஜேர்மனி), கண்ணன், கெவின் (பிரான்ஸ்), கனி (சுவிஸ்), சிந்து, சிவஜா (ஜேர்மனி), குமார் (ஜேர்மனி), அப்பன், சுபாஷினி, வாணி, துர்க்கா, கிருபா, உமேசன், ஜூலியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சகானா, வினோ, விது, தீபா, மதன், நிசா, லக்ஸ்சனா, அக்ஜா, அட்சிவின், அஜிஸ், லெவின், மயூசன், திலக்சன், கௌஷி, லக்கி, கீர்த்தி, சுவர்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் முதலாம் வட்டாரம் பனங்காணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/14485)(11,17)

தகவல்- குடும்பத்தினர்.

சுகந்தன் - (இலங்கை) - +947 7920 3260



## திருகோணமலை கடற்கரையில் கரையொதுங்கும் போத்தல்கள்

### மருத்துவக் கழிவுகள் என அச்சம்

மூதூர், மார்ச். 5
திருகோணமலைக் கடற்கரையில் மருத்துவமனைக் கழிவுகளான மருந்துப் போத்தல்கள் சில வெறுமையாகவும் மருந்துகளுடனும் கரையோதுங்குகின்றன என பகுதி கரையோர பாதுகாப்பு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
கழிவுகள் எங்கிருந்து கொட்டப்படுகின்றன என்பதை அறிய முடியவில்லை. கடற்றொழில் கிராமங்களின் கரைகளிலும் இவ்வாறான போத்தல்கள் கரையொதுங்குவதால் இதனை சிறுவர்கள் எடுத்து விளையாடவும் வாய்ப்புள்ளது. இது எவ்வகை யான மருந்துகள் என்று தெரியாததால் அச்சமாக உள்ளது.
திருகோணமலை வெளித் துறைமுகத்தில் பல நாட்டுக் கப்பல்கள் நங்கூரம் இட்டு நிற்பதால் அவற்றிலிருந்து கொட்டப்படும் கழிவுகளா? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றனர்.
(எ-40)

# புதையல் தோண்டிய பத்துப் பேர் கைது!

## முல்லைத்தீவு சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு மார்ச் 5**
**முல்லைத்தீவு களிக்காடு என்ற கிராமத்தின் காட்டுப்பகுதியில் பூசைகள் வழிபாடுகள் மேற்கொண்டு புதையல் தோண்ட முற்பட்ட 10 பேரை இன்று தாம் கைது செய்துள்ளோம் என்று சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.**



சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட களிக்காடு எனப்படும் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகள் காலத்தில் காணப்பட்ட புதையல்கள் இருப்பதாக குறித்த நபர்களுக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதையடுத்து குறித்த நபர்கள் நிலத்தை வெடிவைத்து தகர்ப்பதற்கு ஏற்றவகையில் பொருள்களுடன் சென்று புதையல் தோண்டும் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.
இவர்களின் இந்த நடவடிக்கை குறித்து முல்லைத்தீவு மாவட்ட சிறப்பு அதிரடிப் படையினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. அதையடுத்து அங்கு சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் அனைவரையும் கைதுசெய்து அவர்கள் கொண்டு சென்ற பொருள்களையும் எடுத்து சென்றனர்.
கிடைக்கப்பெற்ற மண்வெட்டி, திசையறிகருவி, அலவாங்கு, மின்பிறப்பாக்கி, டைனமட் 11, வெடிபொருள் வெடிப்பி 21, உள்ளிட்ட பொருள்களை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் சிறப்புப் படையினர்.
இவர்களில் கண்டியைச் சேர்ந்த முஸ்லிம் நபர்கள் மூன்று பேரும் நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மூவரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நால்வரும் உள்ளடங்குகின்றனர்.
கைதுசெய்யப்பட்ட அனைவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த ஒட்டுசுட்டான் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3-500)



## சிறுவர் இல்ல நிர்வாக அமைப்பில் திருத்தம்

யாழ்ப்பாணம்.மார்ச்.5
வடக்கு மாகாணத்தில் ஒரு நிதியத்தின்கீழ் இயங்கும் வெவ்வேறான சிறுவர் இல்லங்களின் பிரிவுகள் அனைத்தும் தனித்தனியான நிர்வாகத்தின்கீழ் இயங்குவது அவசியம் என்று மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் 40க்கும் அதிகமான சிறுவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் சில, ஒரு நிதியத்தின் கீழ் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இல்லமாக இருந்தாலும் அதற்கு தனியான நிர்வாக கட்டமைப்பு இருப்பது அவசியம். அதாவது ஒரு இல்லத்தின் பெயரில் ஆண், பெண் இல்லங்கள் தனியாக இருந்தாலும் அவைக்கு ஒரு நிர்வாகமே காணப்படுகின்றது. இந்த நடைமுறை தவறு. நிர்வாகம் தனியாக இருத்தல் வேண்டும். அதற்கான கணக்குகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தனியாக இருத்தல் வேண்டும். அதன் அடிப்படையில் இது வரை இரண்டு இல்லங்களின் நிர்வாகம் இந்த நடைமுறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. பல பிரிவுகளைக் கொண்டுள்ள இல்லங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். நிர்வாக முறைமைகள் இல்லங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்குவதில் ஒரு முக்கிய காரணியாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.
(எ-7)

## குருதி சுத்திகரிப்பு நிலையங்களுக்கு புதிய தாதியர்கள் விரைவில் நியமனம்

வடக்கு மாகாணத்தில் உள்ள 6 மருத்துவமனைகளின் குருதி சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விரைவில் தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாரகன் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் குருதி சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. ஆனால் அவற்றின் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு போதுமான ஆளணி வசதிகள் இல்லை. இதனால் நோயாளி ஒருவருக்கு குருதி தேவைப்படும்போது அதனை தரம் பிரிப்பதற்கு வேறு ஆய்வு கூடங்களை நாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.
எமது மாகாணத்தில் தற்போது வவுனியா மாவட்ட மருத்துவமனையில் மாத்திரமே குருதி சுத்திகரிப்பு நிலையம் செயற்படுகின்றது. ஆகவே வவுனியா மாவட்டம் தவிர்ந்த மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி, மந்திகை, தெல்லிப்பளை ஆதார மருத்துவமனைகளுக்கும் குருதி சுத்திகரிப்பு பிரிவுகள் செயற்படக்கூடிய ஆளணிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அண்மையில் நியமனம் பெற்ற 110 தாதியர்களில் எமது மாகாணத்தில் தொடர்ந்து சேவையாற்றக் கூடிய தாதியர்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சிகள் நிறைவடைந்ததும் அவர்கள் குருதி சுத்திகரிப்பு நிலையங்களுக்கு நியமிக்கப்படுவார்கள்-என்றார். (எ-7)

# பெண்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை உரியவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்

## சட்டத்தரணி அம்பிகா சிறீதரன் அறிவுரை

யாழ்ப்பாணம்.மார்ச்.5
பெண்கள் தங்களுக்கு நடக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரியவர்களுக்கு தெரியப்படுத்த முன்வர வேண்டும் என்று சட்டத்தரணி அம்பிகா சிறீதரன் தெரிவித்தார்.
பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கைப் பெண்கள் பணியகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான கருத்தரங்கு மற்றும் சுய தொழில் உற்பத்திப் பொருள் கண்காட்சி என்பன யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் மற்றும் வளாகத்தில் நேற்று நடைபெற்றன.
இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெண்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பேருந்தில் பயணம் செய்யும்போது, அலுவலகம், வீடு போன்ற பல்வேறு இடங்களில் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் அது பற்றி அவர்கள் உரியவர்களுக்கு வெளிக்காட்டுவதற்கு முன்வருவது இல்லை. இந்தப் பிரச்சினை தொடர்பில் வெளியில் சொன்னால் பிரச்சினை இன்னும் அதிகமாகுமோ அல்லது தன்னை புறந்தள்ளி விடுவார்களோ என்ற அச்சத்தால் அவர்கள் பொறுமையாக இருந்து விடுகின்றனர். இவ்வாறு பொறுமையாக இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மேலும் பல துன்பங்களுக்கு அவர்கள் உள்ளாகின்றனர். ஆகவே பெண்கள், பிரச்சினைகள் ஏற்படும்போது அதனை பொலிஸ், பெண்கள் பிரிவு போன்ற பல்வேறு துறைசார்ந்த உத்தியோகத்தர்களை நாடுவது சிறப்பானதாகும். அங்கு உங்களது தகவல் பாதுகாக்கப்படும்.
உடல் ரீதியான துன்புறுத்தல்கள் நடைபெறும்போது தான் அவர்களின் பிரச்சினைகள் வெளியே தெரிய ஆரம்பிக்கின்றது. ஆனால் உள ரீதியாக பாதிக்கப்படும் பெண்கள் தமக்கான துன்புறுத்தல்களை வெளியே சொல்ல முடியாமல் தவறான முடிவெடுத்து தற்கொலை முயற்சிக்கும் செல்கின்றனர். பெண் மன ரீதியாக பாதிக்கப்பட்டது வெளியில் தெரியவரும்போது சமூகத்துடன் ஒன்றித்து வாழ முடியாத நிலை ஏற்படுகின்றது. ஆகவே பிரச்சினைகள் ஏற்படும்போது ஒதுங்கி இருக்காமல் அதனை வெளிக்கொண்டுவர வேண்டும்-என்றார். நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்டச் செயலர், மருத்துவ கலாநிதி எஸ். சிவகணேஷ், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். சுயதொழில் மூலம் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் பெண்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(எ-7)



## யாழ்ப்பாணத்தில்

# உற்பத்தி செய்யப்பட்ட அன்றே விற்று முடிகிறது பனம் வெல்லம்

### ப.தெ.அ.கூ சங்கங்களின் புதிய முயற்சி பெரும் வெற்றி

**யாழ்ப்பாணம், மார்ச், 5**

**யாழ்ப்பாணத்து பனம் வெல்லத்துக்கு வெளிநாட்டவர்கள், தென்பகுதியைச் சேர்ந்தவர்களிடயே பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட அன்றைய தினமே பனம் வெல்லங்கள் அனைத்தும் காலியாகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனைமரங்களில் பருவ காலக் கள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தலில் கள் அடைக்கும் பணிகளையும், பதநீர் உற்பத்தியை ஊக்குவித்து பனைவெல்ல உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளன.

குடாநாட்டுப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள் மற்றும் பனம் வெல்லம் ஆகியவற்றை தென்பகுதி மக்கள் உட்பட புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவதால் சங்கங்கள் இந்த முறை அதிக அளவில் உற்பத்தியை மேற்கொள்ளலாமென திட்மிட்டனர்.

போத்தலில் கள் அடைக்கும் பணியும் உற்பத்தி செய்யப்படும் பதநீரிலிருந்து வெல்ல உற்பத்திப் பணியும் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்றையதினம் 25கிலோக்கிராம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. அனைத்து உற்பத்திகளும் அன்றையதினம் மாலைக்குள் காலியாகியுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை 30 கிலோக்கிராம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. அதுவும் அன்றே விற்பனை செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினமும் 30 கிலோ வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதில் 25 கிலோக்கிராம் வெல்லம் நண்பகல் வேளையிலேயே முடிவடைந்துள்ளது என்று சங்கத்தினர் தெரிவித்தனர். இந்த வருடம் 2ஆயிரம் கிலோக்கிராம் வெல்லம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. ஒரு கிலோ 800 ருபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வருடம் 742 கிலேக்கிராம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. ஒரு கிலோ வெல்லம் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. வெல்லத்துக்கு மவுசு ஏறுகிறதால் அதனுடைய உற்பத்தியும் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தென்மராட்சி பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்ததாவது:

"புலம்பெயர் நாடுகளிலிருந்து தாயகத்துக்கு வருகை தந்துள்ளவர்களும் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு சுற்றலா வந்தவர்களும் பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் சங்கத்துக்கு வருகை தருகின்றனர்.

இதேவேளை தென்பகுதியில் உள்ள பல வர்த்தகர்கள் தமக்குப் பனை வெல்லம் வழங்குமாறு சங்கத்துக்கு கடிதங்கள் அனுப்பி வருகின்றனர்" என்றனர்.

போத்தலில் கள் அடைப்பதால் அரசுக்கு பெருமளவு வரி செலுத்த வேண்டியுள்ளதால் பனை வெல்ல உற்பத்தியில் சங்கங்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் பனங்கட்டிக் குட்டான் விற்பனையும் ஆரம்பித்துள்ளதால் அவற்றினையும் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

(எ-21- 9)



## பனை அபிவிருத்திச் சபையால்

# பனங்கிழங்கு கொள்வனவு செய்யப்படுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்.5

பனை அபிவிருத்திச் சபை உற்பத்தியாளர்களிடம் இருந்து பனங்கிழங்குகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது பனம் கிழங்கு சீசன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் உற்பத்தியாளர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அவற்றை வழங்க முடியும். ஒரு பனம் கிழங்கு 2.25 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் என்று சபையின் உற்பத்திப் பிரிவு தெரிவித்தது.

அதனைவிட புழுக்கொடியல், ஒடியல், பனாட்டு, வட்டச்சீவல், சீவல் ஒடியல் போன்ற பனம் உற்பத்திப் பொருள்களையும் சபை கொள்வனவு செய்து வருகின்றது.

பனம் உற்பத்தி பொருள்கள் இருப்பின் உற்பத்தியாளர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அவற்றை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட

# குடாநாட்டு விவசாயிகளுக்கு உலர் உணவு பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 2016-2017 பெரும்போக நெற்செய்கையின் போது வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளில் கமநல சேவைகள் திணைக்களமும் யாழ்ப்பாணம் இடர் முகாமைத்துவப்பிரிவும் இறங்கியுள்ளன. இதற்கான விவரங்களைத்திரட்டும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை பிரதேச செயலர்பிரிவு ரீதியாக நடைபெற்று வருகிறது.

மேற்படி உலர்உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்தில் மாத வருமானம் 20ஆயிரம் ரூபாவுக்குட்பட்ட குடும்பங்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். அந்தக் குடும்பங்களை ஒரு இலகு வேலைத் திட்டத்துக்குள் உள்வாங்கிய பின்னரே அவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான பணிப்புரைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(எ-21)

# மிகைஊழியர் என்றுபாராது அதிபர் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்

## பாதிக்கப்பட்ட அதிபர்கள் கோரிக்கை

மாங்குளம் மார்ச் 5

பாடசாலை அதிபர்களுக்கு அண்மையில் சம்பளத்துடன் சிறப்புக் கொடுப்பனவு இணைக்கப்பட்டு வழங்கப்பட்டது. இருந்தும் பல அதிபர்களுக்கு இந்தக் கொடுப்பனவு கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட அதிபர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கு 'அதிபர் படி' என்ற புதிய கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது. இதில் வடக்கில் பல அதிபர்களுக்கு அந்தக் கொடுப்பனவு கிடைக்கவில்லை. மிகை ஊழியராக உள்வாங்கப்பட்டவர்கள் கொடுப்பனவுக்கு உள்வாங்கப்படவில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டது.



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட அதிபர்கள் தெரிவித்ததாவது:

கடந்த 2013ஆம் ஆண்டு மிகை ஊழியர் என்ற அடிப்படையில் பல அதிபர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்தநிலையில் அதேஆண்டிலேயே அவர்கள் அதிபர் சம்பளக் கொடுப்பனவில் இணைக்கப்பட்டனர்.

தற்போது மிகை ஊழியர் என்ற உள்வாங்கப்பட்டு பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற அதிபர்கள் ஏனைய அதிபர்கள் ஆற்றும் கடமைகளுக்கு அமைவாக அனைத்துக் கடமைகளையும் ஆற்றிவருகின்றனர். எனினும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. வடக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இவ்வாறானவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய மாகாணங்களில் பதில் கடமையாற்றுகின்ற அதிபர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எனினும் வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அதிபர்கள் கூட்டத்தில், அதிபர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அதிபர்கள் தொடர்பில் கொழும்பு அமைச்சுடன் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட அதிபர்களின் கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என முடிவெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

விசேட செயற்பாடுகளுக்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் விசேட செயற்பாடுகள் மேற்கொள்ளும் அனைத்து அதிபர்களுக்கும் வழங்கப்படவேண்டும். இது தொடர்பாக நடுநிலையான தீர்மானத்திற்கு கல்வித் திணைக்களங்கள் வரவேண்டும் -என்றனர். (எ-72)





# கலாவித்தகர் பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்.5

வட இலங்கைச் சங்கீத சபையின் 22ஆவது 'கலாவித்தகர்' பட்டமளிப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் அரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

சபைத் தலைவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளருமான ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீன்பிடித்துறை தலைவர் பேராசிரியர் சிவசாந்தினி குகநாதன் மற்றும் மதிப்புறு விருந்தினராக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் முன்னாள் நடனத்துறை தலைவர் அருட்செல்வி கிருபராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் 37 கலைஞர்களுக்கு கலாவித்தகர் பட்டம் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் ஓய்வு பெறவுள்ள தலைவர் ந.தெய்வேந்திரராஜாவுக்கு மதிப்பளிக்கப்பட்டது.

(எ)

## புத்தளத்தில் வெடிப்பு சம்பவம்

புத்தளம்,மார்ச் 5
புத்தளம் பாலாவிய பிரதேசத்தில் இரும்பு சேர்க்கும் கடை ஒன்றில் வெடிப்புச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. அதில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதான ஒருவரே உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## வெளிநாட்டு பணத்துடன் சீனநாட்டவர் கைது

கொழும்பு, மார்ச். 5
சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுப் நாணயங்களை தாய்லாந்துக்குக் கொண்டு செல்ல முயன்ற சீன நாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து 78 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத் தொகை கைப்பற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

## மட்டு.கொலைச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 5
மட்டக்களப்பு - வெல்லாவெளிப் பிரதேசத்தில் ஆண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு செல்வபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கமலேஸ்வரன் என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.
இந்தச்சம்பவத்தில் 19 வயது இளைஞர் ஒருவரும் காயமடைந்திருந்தார். அவர் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிரவரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று ஒருவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரின் சகோதரர் என்று கூறப்படுகிறது.
இவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)



# ஆலயங்கள் உடைப்பை எதிர்த்துக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.5
**வடக்கில் சைவ ஆலயங்கள் உடைத்துச் சேதப்படுத்துவதைத் தடுத்து நிறுத்தக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு பேரணி ஒன்று நடைபெற்றது. இந்தப் பேரணி அகில இலங்கை சைவ மகா சபையால் முன்னெடுக்கப்பட்டது.**

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பித்த இந்தப் பேரணி கைலாச பிள்ளையார் கோவிலை சென்றடைந்து அங்கிருந்து முதலமைச்சர் அலுவலகம் வரை சென்றது. முதலமைச்சரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.
இதில் ஆதீன முதல்வர், துறவிகள் முன்னிலை வகிக்க சைவ ஆலயங்களின் பரிபாலன சபைகள், தர்மகத்தா சபைகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
அரசதலைவர் தலைமை அமைச்சர் ஆகியோருக்கு வடமாகாண ஆளுநர் ஊடாகவும் இந்து கலாசார திணைக்கள பிரதிநிதி ஊடாகவும் இந்து கலாசார அமைச்சருக்கு மனுக்கள் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4)



## சிறுவன் கொலை; சந்தேகத்தில் முல்லை.வாசி கைது

புத்தளம், மார்ச் 5
10 வயதான சிறுவன் ஒருவனைக் கடத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.
கடந்த 25 ஆம் திகதி காணாமல் போன இந்த சிறுவனின் சடலம் இரணவில காட்டுப் பகுதியில் 27 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தது.
சிலாபம் இரணவில, சமிதுகமயை சேர்ந்த 10 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.
சந்தேக நபர் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயாறு மீன்பிடிக் கிராமத்தில் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-ரி5)

## மருந்தின் விலைகள் குறைக்க நடவடிக்கை


கொழும்பு, மார்ச் 5
மருந்து வகைக்ளின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
புற்றுநோய், இருதய நோய் போன்ற பெரிய நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மருந்து வகைகளின் விலைக் குறைப்பு காரணமாக மக்கள் பெரும் நன்மையடைந்திருந்த போதிலும், ஊடகங்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவில்லை. சில மருந்து வகைகளின் விலைகள் பல மடங்காக குறைக்கப்பட்டுள்ளன - என்றார். (ந-ரி5)

## அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இனவாதத்துடன் செயற்படுகின்றனர்

அம்பாறை.மார்ச்.5
அம்பாறை மாவட்டத்தில் சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இனவாதத்துடன் காணிஅளவீட்டில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு சார்பாக செயற்பட்டுவருவதை வன்மையாக கண்டிக்கின்றோம். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.
காணி அளவீட்டில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மட்டக்களப்பு சிறைச்சாலை யில் வைக்கப்பட்டுள்ள நிந்தவூர் - அட்டப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த 21 பேரை நேற்றுச்சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.
ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபரிக்கப்படுகின்றமை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன.
பரம்பரையாக மயானபூமியாக பயன்படுத்தப்பட்டுவந்த பகுதியானது பொறுப்பற்ற சில அதிகாரிகளின் செயற்பாடுகளால் அரசியல் பின்புலத்துடன் அபரிக்கப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
ஆரம்பகாலத்திலிருந்த மயானக்காணிகள் நில அளவை செய்யப்படாத காரணத்தினால் சில இடங்களில் பிரதேசசபைகளில் பதிவுசெய்யப்படாத நிலையிருக்கின்றன.
இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது கவனத்துக்கு கொண்டு வர இருக்கின்றேன் - என்றார். (ந.ரி4)

## திருமலையில் சிரமதானப் பணி

திருகோணமலை, மார்ச் 5
டெங்கு பரவும் அபாயத்தைத் தடுக்கும் நோக்கில் கிண்ணியா நகரசபையின் செயலாளர் என். எம். நௌபீஸின் தலைமையில் கடந்த வெள்ளிக் கிழமை மாஞ்சோலை பிரதேசத்தில் சிரமதானம் நடைபெற்றது.
பெய்துவரும் மழையின் காரணமாக கிண்ணியா நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது அதைத் தடுக்கும் நோக்கில் இந்தச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நகரசபை மேற்பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-ரி5)







## சிரியாவுக்குள் துருக்கி நடத்திய வான் தாக்குதலில் 36பேர் உயிரிழப்பு



டமஸ்கஸ், மார்ச், 5
சிரியாவுக்குள் துருக்கி நடத்திய வான் தாக்குதலில் குர்திஸ் ஆயுதக் குழுவைச் சேர்ந்த 36பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரியாவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஸ் ஆயுதக் குழுவுக்கு எதிராக, துருக்கிஅவ்வப்போதுவான்தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஆப்ரின் பகுதியில் குர்திஸ் ஆயுதக்குழுவின்நிலைகளைக்குறிவைத்து துருக்கிநேற்றுமுன்தினம்நடத்தியதாக்குதல்களில்36பேர்உயிரிழந்தனர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, குர்திஸ் ஆயுதக் குழு நடத்திய தாக்குதலில்துருக்கிச்சிப்பாய்கள்7பேர்உயிரிழந்தனர். இதற்குவிரைவில்பதிலடிகொடுக்கப்படும் என்று துருக்கி அறிவித்திருந்தது. இந்தப்பின்னணியிலேயேஇந்தத்தாக்குதல் நடத்தப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## கவுடாவுக்கு உதவிப்பொருள்கள் வழங்குவதை

# அரச தரப்பே தடுத்துள்ளது

டமஸ்கஸ், மார்ச் 5

சிரியாவில் உள்நாட்டுப்போர் நடைபெற்றுவரும் கவுடா பகுதியில், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருள்கள் செல்லவிடாமல் அரச தரப்பே தடுத்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரிய அதிபர் அசாத் ஷியாபிரிவைச் சேர்ந்தவர். அங்குசன்னிபிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சிரிய அதிபரைப் பதவி நீக்குவதையும் ஏனைய சில திட்டங்களையும் நோக்கமாகக் கொண்டு அங்கு ஆயுதக்குழு போராடி வருகிறது. கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த உள்நாட்டுப் போர்நடைபெற்றுவருகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவின் தலைமையில் கூட்டுப் படை உதவி செய்கிறது. கிளர்ச்சிக்குழுவின்பின்னணியில்அமெரிக்காஉள்ளது. கடந்த7 வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை சுமார் 4 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த அலெப்போ நகரில் கடந்த வருடம் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கவுடாநகரில்இந்த வருடம்தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அங்கு 30 நாள்கள் போர் நிறுத்தம் செய்ய சிரிய அரசு எடுத்தமுயற்சிதோல்வியில்முடிவடைந்தநிலையில், தினமும்5மணிநேரமாவது போர் நிறுத்தம்செய்வதற்கு நீண்ட இழுபறியின் பின்னர் இரண்டு தரப்பும் தற்போது உடன்பட்டுள்ளன.


எனினும்பாதிக்கப்பட்டமக்களுக்கு உரிய உதவிகளை கொண்டு சென்று வழங்க 5 மணிநேரம் போதாதுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அரசதரப்புஆங்காங்குதடுப்புக்கள் அமைத்து மீட்புப் பணிகளையும், பொருள்கள்விநியோகிப்பதற்காகச் செல்லும் வாகனங்களையும் தடுத்து வருகின்றன என்றும் பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

# இரசாயன ஆயுதங்களை சிரி

டமஸ்கஸ், மார்ச் 5
"இரசாயன அணுவாயுதங்களையும், அவைதயாரிக்கப்பயன்படும்மூலப்பொருள்கள் மற்றும் தொழில் நுட்பங்களையும் நாமே சிரியாவுக்கு வழங்கினோம் என்றுஐக்கியநாடுகள்சபைவைத்தள்ள குற்றச்சாட்டு பொய்யானது" என்று வட கொரியா தெரிவித்தது.

சிரிய அரசுக்கும் அரசுக்குஎதிரான கிளர்சிக் குழுவுக்கும் தற்போது தாக்குதல்

நடைபெற்றுவரும் கவு
அரசால் இரசாயன ஆ
டுத்தப்பட்டமை ஆதரபு
கப்பட்டது. அமெரிக்கா,
சபை, பிரான்ஸ்ஆகிய
கண்டனம் தெரிவித்து
வடகொரியாதான்சிரிய
யான இரசாயன ஆயுத
யது என்று அமெரிக்க
னவே குற்றம்சாட்டியி



## தேவாலயத்தில் துப்பாக்கி

அமெரிக்காவின்பென்சில்வேனியாவில் உள்ள ஒரு தேவாலயத்தில், துப்பாக்கிகளைக் கையில் ஏந்தி, குண்டுகளைக் கிரீடமாக அணிந்துகொண்டு பிரார்த்தனை நடைபெற்றிருக்கிறது.

புளோரிடாவில் உள்ள பள்ளியில் இடம்பெற்றதுப்பாக்கிச்சூட்டில்பலர்உயிரிழந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் அமெரிக்கர்கள் மீளவில்லை. அதற்குள் அமெரிக்கத் தேவாலயம் ஒன்றில், எல்லோரும் துப்பாக்கி களைக் கையில் பிடித்தபடி பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். 'அமைதிமற்றும்ஒற்றுமைக்கானதேவாலயம்'என்றபெயரைவைத்துக்கொண்டு, பாதிரியார் சியான் மூன், துப்பாக்கி இன்றி எவரும் இந்தப் பிரார்த்தனைக்கு வரக்

கூடாது என்று சொல்லி
மண ஆடைகளை அ
தலையில் கிரீடமும்
யையும்பிடித்துக்கொ
தனைக்கூட்டத்தில்ஏரா
கலந்துகொண்டனர்.
பட்டவுடன் துப்பாக்கி
எதிராகப்போராடிக்கொ
தேவாலய வாயிலி
கோசங்களை முழங்கி
"சாத்தானை விரட்டி
துப்பாக்கிப் பிரார்த்தன
ருக்கும் 45 ஆயிரம்
கூப்பன்களை வழங்கி
இதைக்கொடுத்து, க
பாக்கிகளைவாங்கிக்



# உலக
# இரா

டுபாய், மார்ச் 5
டுபாயில்உலகின்
அமைக்கப்பட்
வோட்டர்தீவில
உருவாக்கப்பட்
டுபாய்ஜுமைரா
படும்பகுதியில்து
பின்ராஷித்அல்
1.6 சதுர கிலோமீ
வோட்டர் தீவு'
கைத் தீவு அமை
சொகுசுத் தீவாக
பெற்றுள்ளது. தீ

# ள சிரியாவுக்கு வழங்கவில்லை; ஐ.நாவின் குற்றச்சாட்டு பொய் என்கிறது வடகொரியா

ுவரும் கவுடா நகரில், சிரிய
ரசாயன ஆயுதங்கள் பயன்ப
மை ஆதரபூர்வமாக நிரூபிக்
அமெரிக்கா, ஐக்கிய நாடுகள்
ன்ஸ் ஆகியன இதற்குக்கடும்
தெரிவித்துள்ளன.
தான்சிரியாவுக்குத்தேவை
யன ஆயுதங்களைவழங்கி
அமெரிக்க ஊடகங்கள் ஏற்க
றம்சாட்டியிருந்த நிலையில்

அவ்வாறான கருத்தை ஐக்கிய நாடுகள் சபையும் கடந்த வாரம் முன்வைத்தது. 2016, 2017ஆம் ஆண்டுகளில் வடகொரியாவால் சிரியாவுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. இந்தக் குற்றச்சாட்டை வடகொரியா மறுத்துள்ளது.

'ஐக்கியநாடுகள்சபையின் இந்தக்குற்றச்சாட்டு பொய்யானது. இதன் பின்னணியில் அமெரிக்கா உள்ளது. அமெரிக்கா அனைத்துப்போர்நெறிமுறைகளையும் மீறி எத்தனையோ முறை நடந்து கொண்டுள்ளது.

அது, தன்மீதான தவறுகளை மறைக்க அடுத்தவர்கள் மீது பிரச்சினையைத் திருப்பிவிடுகிறது. சிரியா மற்றும் ரஷ்யாவுடன் எவ்வித ஆயுத ஒப்பந்தங்களையும் வடகொரியா செய்து கொள்ளவில்லை"என்றுவடகொரிய அயலுறவுத்துறை அறிவித்தது. (ம)





## ாக்கிகளுடன் பிரார்த்தனை

ு சொல்லியிருக்கிறார்! திரு
களை அணிந்துகொண்டு,
ிரீடமும் கையில் துப்பாக்கி
த்துக்கொண்டுஇந்தப்பிரார்த்
டத்தில்ஏராளமானஜோடிகள்
ண்டனர். இதைக் கேள்விப்
துப்பாக்கிக் கலாசாரத்துக்கு
ராடிக்கொண்டிருப்பவர்கள்
வாயிலில் கூடி, எதிர்ப்புக்
ள முழங்கினார்கள்.
ா விரட்டியடிக்கவே இந்தத்
ிரார்த்தனை. ஒவ்வொருவ
ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள
ள வழங்கினோம்.
டுத்து, கடையில் இருந்துதுப்
வாங்கிக்கொண்டனர். பார்ப்

பதற்கு பயங்கரமான துப்பாக்கிகளாகத் தெரிந்தாலும், இவை அனைத்தும் தோட்டாக்கள்அற்றதுப்பாக்கிகள். அதைப் பரிசோதித்த பிறகே தேவாலயத்துக்குள் அனுமதித்தோம். அதனால் ஏதாவது அசம்பாவிதம் நிகழும் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்கிறது தேவாலயத் தரப்பு.

"இவ்வளவு பேர் ஓரிடத்தில் மிகப் பெரிய துப்பாக்கிகளுடன்இருப்பதைப்பார்க்கும் போது, அதுசிலருக்குஆர்வத்தைத்தூண்டலாம் என்பதைக்கூடவா இவர்கள் யாரும் உணரவில்லை? அன்பே உருவான இறைவனை வழிபடும் தேவாலயத்துக்குள் எதற்கு இந்தத் துப்பாக்கி?" என்றுகேட்கிறார்கள்எதிர்ப்பாளர்கள். (ம)

# ஹைப்பர் சொனிக்கை எதிர்கொள்ளத் தயார்

## அமெரிக்கா அறிவிப்பு




வொஷிங்டன், மார்ச் 5

ரஷ்யா தயாரித்துள்ள ஹைப்பர் சொனிக் ஏவுகணையைஎதிர்கொள்ளத் தயார்என்று அறிவித்துள்ளது அமெரிக்கா.

அமெரிக்க அதிபரின் இல்லாமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் ரஷ்யாவின் இந்தச் சோதனைக்குத் தனது கண்டனத்தைப் பதிவுசெய்தார்.

''அமெரிக்கா, ரஷ்யா இடையே கையெழுத்தானஒப்பந்தங்களைமீறி நாசகார ஆயுதங்களை அந்த நாடுதயாரித்து வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமில்லை. ரஷ்யாவின் எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். இராணுவத்தை வலுப்படுத்துவதற்காக அதிபர் ட்ரம்ப் பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கி வருகிறார்' என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத் தலைமையகமானபென்டகனின் செய்தித் தொடர்பாளர் டானா வொயிட், "நாங்கள் எப்போதுமே தயார் நிலையில் உள்ளோம், எந்தச் சவாலையும்எதிர்கொள்ளும்திறன் அமெரிக்க இராணுவத்துக்குஉள்ளது"என்றுதெரிவித்தார். (ம)

# ஒலியைவிட 20 மடங்கு வேகமுடைய ஏவுகணை ரஷ்யாவிடம் கைவசம்

மொஸ்கோ, மார்ச் 5

ரஷ்யாவிடம்ஒலியைவிடவும்20மடங்குவேகம்கொண்ட ஏவுகணைஉள்ளதுஎன்றுரஷ்யஅதிபர்புடின்நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இந்த ஏவுகணைக்கு 'ஹைப்பர் சொனிக்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ரஷ்ய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாறுகையிலேயே விளாடிமிர் புடின் இவ்வாறு தெரிவித்தார்.

"ஹைப்பர்சொனிக்ஏவுகணைச்சோதனைமுழுமையான வெற்றிபெற்றுள்ளது.

அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த ஏவுகணையை எந்தவொரு ஏவுகணைத் தடுப்பு அரணாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஒலியைவிட 20 மடங்கு வேகத்தில் சீறிப் பாயக்கூடியது. உலகின் எந்த மூலையையும் தாக்கும் திறன் கொண்டது.

ரஷ்யாவின் தற்காப்புக்காகவே இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதுதவிர அதிநவீன ஆளில்லா நீர்மூழ்கிக் கப்பலையும், ரஷ்யா தயாரித்துள்ளது.

இந்த வகை நீர்மூழ்கிகள் பல்வேறு நாடுகளில் உள்ள நீர்மூழ்கிகளைவிட அதிவேகமாகசெல்லக்கூடியவை"என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



# லகின் மிகப்பெரிய இராட்டினம் டுபாயில்

, மார்ச் 5
ல் உலகின்மிப்பெரியஇராட்டினம்
க்கப்பட்டுள்ளது. டுபாய் புளூ
டர்தீவிலேயே இந்த இராட்டினம்
ாக்கப்பட்டுள்ளது.
ஜ்மைராவில்அய்ன்டுபாய்எனப்
குதியில்துபாய்மன்னர்முகம்மது
ஷித்அல்மக்தூம்உத்தரவின்படி
ர கிலோமீற்றர் பரப்பளவில்'புளூ
டர் தீவு' என்ற பெயரில் செயற்
தீவு அமைக்கப்பட்டு வருகிறது.
த்தீவாக இந்தத் தீவு அமையப்
ள்ளது. தீவுக்கு மற்றுமொரு சிறப்

பாகமிகப்பெரியஇராட்டினம்அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இராட்சத இராட்டினம் மொத்தம் 9 ஆயிரம்தொன் எடை கொண்டது. தரையில் இருந்து 689 அடி உயரமுள்ளதாக இராட்டினம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 'நியூயோர்க் வீல்' என்ற இராட்டினம் அமைக்கப்பட்டது. இந்த இராட்டினமே இதுவரைகாலமும் உலகின் மிகப்பெரிய இராட்டினமாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம)



# இயற்கை இடர்களை அறிய நாசாவால் செயற்கைக்கோள்

வொஷிங்டன், மார்ச் 5

வானிலை நிலவரங்களையும், இயற்கைஇடர்களையும்துல்லியமாக முன்கூட்டியே கண்டறியும் வகையில், மேம்படுத்தப்பட்ட கோயஸ்எஸ் என்ற செயற்கைக்கோளை நாசா விண்ணில் செலுத்தியுள்ளது.

'அட்லஸ் 5' ரொக்கெட் மூலம் கேப் கேனவரலில் உள்ள தளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இந்த ஏவுகணைஏவப்பட்டது. வானிலைநிலவரங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்காக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுடன் கோயஸ் எஸ்செயற்கைக்கோள்தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திய மதிப்பில் சுமார் 70 ஆயிரம்கோடிரூபாய்செலவில் இந்த செயற்கைக்கோளை நாசா விண்வெளி ஆய்வு மையம் விண்ணில் செலுத்தியுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாய்ச்சொல்லில் வீரரடி!

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை வினைத்திறன்மிக்கதாக முன்னெடுப்பதற்கு இரண்டு தனிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு, வடக்கு – கிழக்கு தொடர்பான தனது கரிசனையை, வாய்ப்பேச்சில் மற்றுமொரு தடவை வெளிப்படுத்தியுள்ளார் அவர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி, அதாவது சரியாக ஒருவருடத்துக்கு முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 'அரச தலைவரிடம் தெரிவியுங்கள்' அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியமைத்திரிபாலசிறிசேன, 'யாழ்ப்பாணமாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்தால் சிறப்பாக இருக்கும். இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், அரசின் அமைச்சர்கள் என்று அனைவரையும் அடுத்த மூன்று மாதங்களில் ஒவ்வொரு மாதமும் சந்தித்து, அபிவிருத்தி தொடர்பிலும், இங்குள்ளபிரச்சினைகளைஎவ்வாறு விரைந்து தீர்ப்பது என்பது தொடர்பிலும் கலந்தாலோசிப்பேன்' என்று தெரிவித்திருந்தார்.


ஆனால், அவர்தான்தெரிவித்ததைப்போன்று எந்தநடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. எந்தச் சந்திப்புக்களையும் இங்கு நடத்தவில்லை. அவர் குறிப்பிட்டதன் அடிப்படையில் கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அரச தலைவர் யாழ்ப்பாணமாவட்டத்துக்குவந்து அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கைகளைஎடுத்திருக்க வேண்டும். ஆனால்ஒருதடவையேனும் அவ்வாறு அவர் இங்கு வருகைதந்தார் என்று பதிவாகவில்லை. 'அரசதலைவரிடம் தெரிவியுங்கள்' நிகழ்வில் அரச தலைவர் தெரிவித்தமை பொய்யுரையாகவே அமைந்தது. இவ்வாறானதொருபின்னணியில், மட்டக்களப்பில் வைத்து, தான் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு அரச தலைவர் செயல்வடிவம் கொடுப்பாரா என்பதைச் சந்தேகக் கண்கொண்டே நோக்க வேண்டியுள்ளது. அவரின் கருத்துக்களில் நம்பகத்தன்மை இழந்தவர்களாகவே தமிழ் மக்கள் உள்ளனர். யதார்த்தமும் அதுவேதான்.

தமிழர்தாயகத்தைவெறும்அறிக்கைகளாலும், உரைகளாலும் ஏமாற்றிச்செல்லும்பாங்கைகொழும்பில் ஆட்சிபீடம்ஏறும் தலைமைகள் தாராளமாகவே கற்று வைத்துள்ளன. தற்போதைய அரச தலைவரும் அவர்களில் இருந்து விதிவிலக்காக அமைந்துவிடவில்லை. கடந்த 2015ஆம் ஆண்டு, அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெறுவதற்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளே துருப்புச்சீட்டாக அமைந்தன. இதைஅவரேபலமுறைஏற்றுக்கொண்டுள்ளார். தமிழர் தாயக மக்களுக்கு, தான் தகுந்த நன்றிக் கடனையும் செய்வேன்என்றும்தனது முன்னைய உரைகளில்அவர்குறிப்பிட்டிருந்தார். ஆனால் இன்றுவரை அவர் எந்த நன்றிக் கடனையும் செலுத்தவில்லை. ஏனைய அரச தலைவர்களில் இருந்து தன்னை வேறுபடுத்தி அவர் காட்டவில்லை.

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணங்கள். அவற்றுக்கு இன்னும் ஏகப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தேவை. அவ்வாறான திட்டங்களுக்கு நகர்வுகளையும், செயல்வடிவத்தையும் கொடுப்பதற்குஅரச தலைவர் முன்வர வேண்டும். ஒன்றுமாறி ஒன்றாக அறிக்கைகளையும் திட்டங்களையும் விடுத்துக் கொண்டிருப்பதில் பயனொன்றும் இல்லை. மேடைப் பேச்சுக்களுடன் மௌனித்துவிடாது அதற்கு அப்பாலும் செயற்பட கூட்டு அரசு முன்வர வேண்டும்.

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கதலைமையிலானகூட்டு அரசின்நடவடிக்கைகளைப் பார்க்கையில், சொல்லாமல் செய்வர் பெரியார், சொல்லிச்செய்வர்சிறியர், சொல்லியும்செய்யார்கயவர் என்று பள்ளிப்பருவத்தில் படித்திட்ட நினைவுகள் மனதை சட்டெனத்தட்டிச்செல்கின்றன. இதில்எந்தவகையறாக்குள் அரசதலைவர்இருக்கிறார், இனி எந்த வகையறாக்குள் இருக்கப்போகிறார் என்பதை அவரே முடிவு செய்யட்டும்.





# நாட்டு மக்களை அச்சுறுத்தும் பிரமிட் மோசடி

ஞா.பிரகாஸ்

இலங்கை மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்டிருக்கும் பிரமிட் வலையமைப்பு, சந்தைப்படுத்தல், திட்டமுதலீட்டு மோசடியாளர்களின் செயற்பாடுகள் தற்போது எமது நாட்டில்அதிகரித்திருக்கின்றன. தமதுசெயற்பாடுகளை இவர்கள் பல்வேறு விதமாக, சூட்சுமமான முறையில் நாட்டின் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி நடுத்தரவறியமக்களைஏமாற்றிகுறித்ததிட்டத்தில் இணைத்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

### ஏமாறுவதற்கான வாய்ப்பு பிரமிட் திட்டத்தில் அதிகம்

பிரமிட் திட்டம் என்பது 'ஒருவர் வருமானத்தைப் பெறுவதற்காக இந்தத் திட்டத்துக்குள் மற்றவர்களை இணைத்து பொருள் விற்பனை அல்லது நிதிக் கொடுப்பனவைச் செய்யும் திட்டம்' என்று வரைவிலக்கணம்செய்யப்படுகிறது. இந்தத்திட்டத்தில் புதிதாக இணைந்தவர்கள் மற்றையவர்களை இந்தத் திட்டத்துள் இணைத்துக் கொள்வதற்கான உரிமையைப்பெற்றுக்கொள்கின்றனர். அதற்குப் பதிலாக அத்தகைய ஆள்சேர்ப்புக்கான வருமானத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். இதுவே பிரமிட் திட்டம் என்று கூறப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு புதிய பங்கேற்பாளர்களை இணைத்துக் கொள்ள நுட்பமான முறையில் ஆள்களைச் சேர்ப்பதே அடிப்படை விடயமாகும். இதில் பற்கேற்பவர்கள் இடைநடுவில் ஏமாற்றமடைந்து முதலீட்டை, பணத்தை இழக்கும் நிலைக்கு சென்றுவிடுவார்கள். இதுமுன்கூட்டியேதிட்டமிடப்பட்டதொரு மோசடித் திட்டமெனக் கொள்ளத்தக்கது.

பிரமிட் திட்டத்துக்கு ஆள்சேர்ப்பில் ஈடுபடுவர்கள் குறைந்த நிதி முதலீடு அல்லது பொருள் கொள்வனவின்மூலம்அதிகவருமானத்தைப்பெறமுடியும் என்ற தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைத்து நம்பகத் தன்மையான பிம்பம் ஒன்றை உருவாக்கி தமது திட்டத்தில் இணைத்துக்கொள்கிறார்கள். உண்மையில் இந்த பிரமிட் திட்ட முதலீடுகளில் பிரமிட் திட்ட நிறுவனத்தில் மேல் நிலையில் இருப்பவர்களே இலாபமடைகின்றனர். அதில் இணைந்துகொள்ளும்பொதுமக்கள்சிறிதுகாலத்தில்ஏமாற்றப்பட்டுவருமானம்எதுவும்கிடைக்காத நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவார்கள்.

### பிரமிட் திட்டம் சட்டவிரோதம்

பிரமிட்தன்மைகொண்டதிட்டங்கள்வங்கிதொழில் சட்டத்தின் 83சி பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதுடன்இவ்வாறானதிட்டங்களைநேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்துதல், கொண்டு நடத்துதல், நிர்வகித்தல் என்பனவும் சட்டவிரோதமானது என மத்திய வங்கி கூறி யுள்ளது.

தெற்கில் காணப்பட்ட இந்த பிரமிட் மோசடியாளர்கள் தற்போது வடக்கு, கிழக்கு, மலையகம் என நாட்டின் அனைத்து பகுதிகளுக்குள்ளும் பரந்துபட்டு செயல்படுவதுடன் மக்களை ஏமாற்றி தம்முடன் இணைத்து மோசடி செய்கின்றனர். தமது ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை சமூக வலைத்தளங்களின்ஊடாகவும்வேறுவழிகளிலும்முன்னெடுத்து வருகின்றனர். தற்போது இந்த பிரமிட் மோசடியாளர்கள் போரில் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த மக்களிடையில் சென்று அவர்களின் வறுமை நிலையை தமக்குச் சாதகமாக்கி பிரமிட் மோசடியில் இணைத்து ஏமாற்றி இலாபமடைந்து வருகின்ற மனிதநேயமற்ற செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகின்றது. இந்தத் திட்டம் தொடர்பில் மக்கள் விழிப்படைய வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட பிரமிட் எச்சரிக்கை அறிக்கை ஒன்றில் இந்தத் திட்டம் மக்கள் மத்தியில்நம்பகத்தன்மையை அழித்துவிடுகிறது. இவ்வாறானதிட்டங்கள்மணமுறிவுக்கும், தற்கொலைகளுக்கும்காரணமாகஇருந்துள்ளனஎன்றும் மிகத் தெளிவாக விபரித்திருக்கின்றது. பிரமிட் மோசடி தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க "நாட்டில் பல்வேறு முறையிலான பிரமிட் செயற்பாடுகள் இடம்பெற்ற போதிலும் அவற்றுக்கு எதிராக பொலிஸார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. வங்கி சட்டம்முதல்அனைத்தையும்மாற்றியமைக்கவேண்டும்" என்றும் கூறியிருந்தார்.

எனவே பிரமிட் மோசடியை தடுக்கும் சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிந்தும் அரசு உரிய முறையில் அவற்றைச்செயற்படுத்தாமல்இருப்பது இந்தமோசடியாளர்களுக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. சட்டங்களில் தண்டனை வழங்கப்படும் என்று மட்டும் எழுதிவைத்தால் மோசடியார்கள் அச்சமடையப்போவதில்லை என்பதே உண்மை. பிரமிட் மோசடியை இலங்கையில் இருந்து அழிக்க ஆக்கப்பூர்வமான சட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்.

கனகநமநாதன்

# உள்ளூர் நிர்வாகத்தில் கட்சி அரசியல் முறை இருத்தல் ஏற்கத்தகாதது

நாடாளுமன்ற ஆட்சியமைப்பு அரசியலில், வெற்றிபெற்ற கட்சிகள் தத்தமது நலனை ஒரு மூலையில் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒன்றிணைந்து இலங்கை வாழ் மக்களிடையே பாகுபாடின்றி சனநாயகத்தையும் சிவில் மனித உரிமைகளையும் பாதுகாத்து செயல்படுத்தும்வகையில்நிர்வகித்துச்செல்லக்கூடிய ஆட்சியை 'தேசிய அரசு' என்ற பெயரில் அமைக்க முன்வந்ததன் மூலம் தென்னிலங்கை மக்களில் பலர் எந்தளவுக்குநாட்டின்மீதும்மக்களின்மீதும்பற்றுதலைக் கொண்டிருந்தார்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் இந்த நாட்டுப்பற்றுச் சிந்தனை சோபித தேரரின் மறைவோடுமங்கிவிட்டது. உண்மையில் மகிந்தவின் வெற்றியுடன் மறையப்பார்த்தது. இப்போது தப்பிப் பிழைத்துள்ளது.

**தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டாலேயே தெற்கைக் கேள்விகேட்க முடியும்**

ராஜபக்சவின்'இனவாதம்பேசிஊழல்செய்யும்'சிந்தனையைசிங்களமக்கள்ஏற்றுள்ளார்கள் போன்ற உணர்வு, உள்ளூராட்சி தேர்தலின் மூலம் தென்னிலங்கையில் காணப்படுகின்றது. இது தென்னிலங்கை அரசியலில் தமிழருக்கு தன்னாட்சி உரிமை கொடுப்பதை எதிர்க்கும் மனப்பான்மை சிங்கள மக்களிடம் எவ்வளவு தூரம்வேர்ஊன்றியுள்ளதுஎன்பதைவிளக்குகின்றது. ஆனால்தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள நிலைமைகளை அலசி ஆராயப் போனால் அவை தென்னிலங்கையிலும் பார்க்கக்கேவலமாகவுள்ளது. அரசியல்வாதிகள் கட்சிநலன் அரசியலை அடிமட்டத்திலுள்ள கிராம அரசியலிலும் வெகு ஆக்ரோசமாகக்கடைப்பிடிகின்றநிலைமைகாணப்படுகின்றது. தமிழர்கள்தங்களுக்குள்கட்சி பேதங்களை மறந்து மக்கள் நலனிலும் கிராம அபிவிருத்தியிலும் ஆர்வம்காட்டாத போது. நாம்எவ்வாறுசிங்களகட்சிகள்கட்சி நலனைக் கைவிட்டு ஒன்றிணைந்து தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க முன்வருவார்கள் என எதிர்பார்க்க முடியும்.



**உள்ளூராட்சி மட்டத்தில் ஆட்சியமைக்க கட்சிகளிடையே ஏகப்பட்ட முரண்பாடுகள்**

தமிழ் அரசியல் வாதிகளின் பிரதேசசபை, நகரசபை, மாநகரசபைகளின் நிர்வா கத்துக்கு தவிசாளர்கள், தலைவர்கள், நகர முதல்வர்போன்றமுதன்மையாளர்களை தெரிவுசெய்யும்விடயத்தில்தமிழ்அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள்கூறியசிலகருத்துக்கள்கீழேகாணப்படுகின்றன. ஒருசபையில் அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும், கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சியேதவிசாளரை, தலைவரை, நகரமுதல்வரைதெரிவுசெய்யஇடமளிக்கப்படவேண்டும். அதற்குமற்றையகட்சிகள்ஒத்துழைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டிருந்தது. ஒரே கொள்கையையுடைய கட்சிகள் ஒன்று சேர்ந்து சபைகளில்ஆட்சியமைக்கவேண்டும்என வட மாகாண சபை முதலமைச்சர் கருத்துவெளியிட்டிருந்தார். கூடியஆசனங்களை ஒரு கட்சி வென்றிருந்தாலும் அக்கட்சிக்கு எதிரான கட்சிகள் கூடிய ஆசனங்களைக் கொண்டிருந்தால் அவர்கள் ஒன்றுகூடி ஆட்சி அமைக்கலாம் என்பது ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியின் (ஈ.பி.டி.பி.) நிலைப்பாடு. யாழ். மாநகர சபையில் நகர முதல்வர் தெரிவை இரகசிய வாக்கெடுப்புக்கு விட்டால் தங்கள் கட்சி சார்பாக நகர முதல்வர் பதவிக்காக நிறுத்தப்படும் வேட்பாளரேவெற்றிபெறுவார்எனதமிழ்தேசிய மக்கள் முன்னணி கருதுகிறது. கட்சிகள், அரசியல்வாதிகள்தேர்தலின்பின்னர்உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைப்பது பற்றியே இப்போது சிந்தித்து கொண்டிருக்கும்நிலையையேஅவதானிக்கமுடிகிறது. ஏதோநாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்தது போன்ற எண்ணத்தில் இவர்கள் வெளியிடும்கருத்துக்கள்அமைந்துள்ளன. நடந்துமுடிந்ததோகிராமியமட்டஅமைப்புகளுக்கான தேர்தல். வேட்பாளர்களை ஆதரித்தவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் மட்டும்எனப்பார்க்கமுடியாது. இனசனபந்துக்கள், நண்பர்கள்எனகட்சிக்குஅப்பாலான ஆதரவாளர்கள்தேர்தல்முடிவுக்குகாரணமானவர்களாகவும்ஆகிஇருந்திருக்கலாம்.

**உள்ளாட்சியில் ஆட்சியமைக்க கொள்கைகள் அவசியமற்றவை**

நடந்து முடிந்த தேர்தல், சிலபல வேலைத் திட்டங்களை கிராமிய மட்டத்தில் மேற்கொள்ள வேண்டி ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கு அரசியல்ரீதியிலான கொள்கை நிலைப்பாடு என்ற கேள்வியை இங்கே எழுப்பி நிற்கிறது. பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை ஆகியவற்றின் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள், சட்ட ஏற்பாடுகளாக அந்தந்த சபைகளின் நியதிச் சட்டங்களில் விரிவாகத் தெளிவாகக்கூறப்பட்டுள்ளன.

அவைகளில் முக்கியமான வேலைத்திட்டங்களாக வீடுகளில், வீதிகளில் சேரும் குப்பை கூழங்களை ஒன்று சேர்த்து அவற்றை ஒரு இடத்தில் சேகரித்து விவசாயத்துக்கேற்ற பசளையாக்குதல்;, உள்வீதிகளையும் ஒழுங்கைகளையும் போக்குவரத்துக்கு ஏற்ப செப்பனிடுதல்;, குடி தண்ணீர்மலசலகூடங்களின்சுத்தத்தைபேண நடவடிக்கை எடுத்தல்;, சந்தைக் கட்டிடங்கள் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்நடாத்திவரிஅறவிட்டபொதுக்கட்டடங்களுக்குத் தேவையான சுத்தத்தையும் வியாபாரத்துக்கானதேவையானஉதவிகளையும் செய்து கொடுத்தல்;, துவிச்சக்கர வண்டிக்குவரிஅறவிட்டுஅவற்றைப்பயன்படுத்துவதற்கான உரிமத்தை வழங்கல் போன்றவற்றைப் பட்டியலிடலாம். இது போன்றதெருவைகூட்டிகுப்பைகூளத்தை அப்புறப்படுத்தும் வேலைகளை செய்வதற்கு கொள்கை என்ன தேவை? கூட்டு என்ன தேவை? கட்சி அரசியலுக்கான தேவைஎன்ன? கிராமமக்களுக்குதேவையான சேவைகளைச் செய்வதற்கு அரசியலும்கட்சிகளும்கொள்கைகளும்தேவைப்படுகின்றனவா?

உள்ளூர்களில் வாழும் மக்களுக்கான தேவைகளைவிடயதானங்களாகபிரித்துப் பட்டியலிட்டுஅந்தஒவ்வொருவிடயதானங்களிலுள்ள வேலைகளை ஒழுங்கு படுத்துவதற்கும்செவ்வனேசெய்வதற்கும், காலத்துக்கு காலம் அதன் நடைமுறைகளை பரிசீலிக்கவும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சிலரைக் கொண்ட குழுக்கள் அமைத்து அந்த விடயங்களைக் கண்காணித்து நிர்வகித்தலே உள்ளூராட்சி மன்றங்கள்மேற்கொள்ளவேண்டியபணிகளாகும். மூவரோநால்வரோஅல்லதுஐவரோ ஒருகுழுவில்நியமிக்கப்படலாம். வேலைப்பளு கூடுதலாகவுள்ள விடயங்களுக்கு அதைவிடக்கூடியஉறுப்பினர்கள்நியமிக்கப்படலாம். அந்த விடயதான பணிக்கு அந்தக் குழுவே முழுப் பொறுப்பையும் கொண்டிருக்கும்.

உள்ளூராட்சிச் சபைகளில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்று எதுவுமே இருத்தல் ஆகாது. வெற்றி பெற்றவர்களை சபை உறுப்பினர்களாக அன்றி கட்சி ரீதியாக பார்க்கக்கூடாது. தேர்தலுக்குமுன்னர்கட்சி வேட்பாளர்களாகவும்வெற்றிக்குப்பின்னர் சபைஉறுப்பினர்களாகமட்டுமேநோக்கும் போக்கும் பின்பற்றப்பட வேண்டும். சபை கூட்டாகசேர்ந்துஎடுக்கும்தீர்மானங்களை அந்தந்த விடயாதானத்திற்கு பொறுப்பாக அமைக்கப்படும் குழு செயற்படுத்தி வர வேண்டும்.

இதனால் கட்சி மோதல்கள்; சபை நடவடிக்கையின் போது நிலவாது. நேரம் வீண் விரையமாகுவதைத் தவிர்க்க முடியும். மக்கள் சேவை சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புசகலகட்சிகளிடமுமிருந்தும்கிடைக்கும்.

வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை சபைகளைக் கைப்பற்றிய பெரும் கட்சியே இந்த மாற்றத்தை கொண்டுவர முன்னிற்க வேண்டும். இந்தப் பெருந்தன்மையான செயற்பாடு மக்களின் அமோக ஆதரவையும் பாராட்டுக்களையும் பெற்று நன்மதிப்பை ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## ஆசிரியருக்கான கடிதம்

# சிமிழ் கண்ணகைபுர வீதி சீரமைக்கப்படுமா?

சாவச்சேரிப்பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வடவரணி 339 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட சிமிழ் கண்ணகைபுர வீதி நீண்ட காலமாக சீரமைப்புச் செய்யப்பட்டாததால் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் போக்குவரத்துச் செய்வதில் மிகப்பெரிய இடர்பாடுகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

இந்த வீதியானது கொடிகாமம், பருத்தித்துறை தலைமை வீதிக்கு கிழக்குப் பக்கமாக ஆரம்பித்து குடத்தனை ஆறாம் கட்டைவீதி வரையில் முடிவடைகிறது.

இந்த வீதியால் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான பிரயாணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், கடலுணவு விற்பனை செய்வோர் மிகப்பெரிய இடையூறுகளின் மத்தியில் பயணம் செய்து வருகின்றனர்.

இந்த வீதியில் ஆங்காங்கே குழிகள் காணப்படுவதுடன் வீதியும் மிகவும் மோசமானநிலையிலேஉள்ளது. இதைவிடமழைகாலங்களில்பிரயாணிகள் பயணிக்க முடியாமல் மிகவும் சிரமப்படுவவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரயாணிகள் நன்மை கருதி இந்த வருடத்திலாவது இந்த வீதியை சீரமைக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென சமூக ஆர்வலர்களும் பிரயாணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை குறித்த பகுதியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் ஜூன் பௌர்ணமி தினத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது.

விழாவின்போது அதிக அடியார்கள் இந்த வீதியை நிச்சயம் பாவிப்பார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முக்கிய கவனம் எடுத்து சீரமைப்புச் செய்து பிரயாணிகளின் போக்குவரத்துக்கு உதவ முன்வருவார்களா?

அன்புவரணி.



# உங்கள் பிறந்த திகதியின்படி உங்களுக்கான அதிர்ஷ்டங்கள்

ஒருவரின் பிறந்த திகதியை வைத்து அவர்களுக்கு அதிர்ஷ்டத்தை கொடுக்கும் எண்கள், நிறம், இரத்தினக்கல், திசை, கிழமை மற்றும் வணங்க வேண்டிய கடவுள் ஆகிய அனைத்தை பற்றியும் ஜோதிடம் கூறுகிறது.


**1,10,19,28 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**

இந்த எண்களின் அதிபதி - சூரியன்
அதிர்ஷ்ட எண்கள் - 1, 4
அதிர்ஷ்ட நிறம் - வெளிர் சிவப்பு, சந்தன நிறம், நீலம் கலந்த வெள்ளை
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - கனகபுஷ்பராகம், மாணிக்கம், ப்ளட் ஸ்டோன்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - சிவன்

**2,11,20,29 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**

இந்த எண்களின் அதிபதி சந்திரன்.
அதிர்ஷ்ட எண்கள் - இரண்டின் வரிசை (அதாவது 2,20,29), ஏழின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - வெண்மை, சந்தன நிறம்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - முத்து, சந்திரகாந்த கல், உபலகம்
அதிர்ஷ்ட திசை - வட மேற்கு
அதிர்ஷ்ட கிழமை - திங்கள்
வணங்க வேண்டிய கடவுள் - பார்வதி

(தொடரும்)



# மதங்களை மிதிக்காது மதிப்போம்

இறைவன் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கோ, மொழியினருக்கோ உரியவரல்ல. மாறாக அவர் அனைத்துலகுக்கும் உரியவர். இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாத நாசரேத்தூர் மக்கள் தங்களில் ஒருவர் தங்களுக்கு ஆசிரியராவதை விரும்பவில்லை. அவர்களது சமய வெறி இயேசு பிற இனத்தவரோடு உறவாடியதை தடுத்தது. அதன் பொருட்டே "இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை" என்று கூறுகிறார் இயேசு.

கடவுளுக்கென்று எல்லைகளை ஏற்படுத்தி இவரைக் கட்டுப்படுத்தி முடக்கிப் போடும் மதங்கள் மனிதருக்கு நன்மை செய்ய முடியாது. இவை மனிதமற்ற மதவாதிகளைத் தான் உருவாக்கும். இதுவே மதங்களுக்கெதிரான வன்முறைகளுக்கும் வழிபாட்டிடங்கள், தெய்வச் சிலை உடைப்புக்களுக்கும் காரணமாக அமைகின்றன.

அனைத்து மதங்களும் அன்பையும் நன்னெறிகளையும் மனிதநேயத்தையும் இறைபக்தியையும் போதிக்கின்றன என்ற பொதுமைப்பாட்டு சிந்தனையை வளர்த்துக் கொள்ளும்போது மதவாதம் தானாக மறைந்துவிடும். மதங்களை மிதிக்காது மதிக்கக் கற்றுக் கொள்வோம்.

மதங்களின் கொள்கைகளையும் நெறிகளையும் சிறப்புக்களையும் வரலாறுகளையும் போதிக்க உரிமை உண்டே தவிர பிற மதங்களை பாதிக்கும் வகையில் திணிப்பதற்கும் ஆக்கிரமிப்பதற்கும் முயல்வது தவறாகும். மதவாதிகளை உருவாக்காது மனிதர்களை உருவாக்கும் இறைவழி தொடர்வோம்.

எக்.யேசுதாஸ்.







# கற்பகதருவை போற்றுவோம்

பனை அபிவிருத்திச் சபையால் உற்பத்தி செய்யப்படுகின்ற கருப்பட்டிக்கு உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் அதிக கேள்வி காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருப்பட்டியில் பல்வேறு மருத்துவக் குணங்கள் உள்ளதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் அதைப் பயன்படுத்துவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பனையைக் கற்பகதரு எனவும் அழைப்பார்கள். பனையிலிருந்து கிடைக்கின்ற பயன்கள் ஏராள்மாக உள்ளன. அதன் ஒவ்வொரு பாகமும் பயன்தரவல்லது. எமது முன்னோர் பனையை மையமாகக் கொண்டே தமது உணவுப் பழக்க வழக்கங்களை அமைத்துக் கொண்டனர். பனம் பழத்தை அவர்கள் உரிய முறையில் தமது உணவாக நாளாந்தம் எடுத்துக் கொண்டனர். ஒடியலை இடித்து மாவாக்கிப் பிட்டைத் தயாரித்து உண்டனர்.

புழுக்கொடியலையும், பனாட்டையும் விரும்பி உண்டனர். கிடைக்கும் போதெல்லாம் பத நீரை அருந்துவத்தும் அவர்கள் தவறுவதில்லை. அவர்கள் அருந்திய பனம்கள் கூட உடல் நலத்துக்கு ஏற்றதாகக் காணப்பட்டது. பனம் மட்டைகளைக் கொண்டு வேலிகளை அவர்கள் அமைத்துக் கொண்டனர். வீட்டின் சில பகுதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் இந்தப் பனை மட்டைகள் உதவின. அப்போதெல்லாம் பனை ஓலைகள் தந்த இதமான குளிர், தற்கால குளிரூட்டிகளைவிட மேலாகக் காணப்பட்டது. வீடுகளை அமைப்பதற்கு பனையின் உடற்பாகம் பெரிதும் உதவியது. பனையில் இருந்து பல பொருள்களைத் தயாரிக்க முடியும். பனை ஈர்க்கும் பயன்தரக் கூடியது. தற்போதுள்ள பிளாஸ்ரிக் பாய்களுக்குப்பதிலாக பனை ஓலையால் இழைக்கப்பட்ட பாய்களே அப்போதெல்லாம் பயன்பாட்டில் இருந்தன. இவற்றில் படுத்து எழும்பும்போது கிடைக்கின்ற சுகம் அலாதியானது.

இன்றுள்ள மனிதர்கள் பனையின் பயன்களை அறியாதவர்களாகிய உள்ளனர். நவநாகரீக மோகம் அவர்களின் கண்களை மறைத்து விட்டது. ஒரு தாய்போன்று எமக்கு உதவுகின்ற கற்பக தருவை நாம் ஒருபோதுமே புறம் தள்ளிவிடக் கூடாது.

# வரலாற்றில் இன்றைய தினம் 05.03.2018



1995 - பலமான நிலையிலிருந்து நாம் பேசுவதனால் ஒருபோதும் ஏமாறமாட்டோம் என்று தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.
1995 - போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்ற அனுருத்தவின் கருத்துக்கு வாசுதேவ நாணயக்கார கண்டனம்.
1995 - கொழும்பில் தமிழருக்கு எதிராக மீண்டும் படையினர் கெடுபிடி.
1995- அரசின் சமாதான முயற்சிகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளதாக சந்திரிகா தெரிவிப்பு.
2002 - வவுனியாவில் 11 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த 'பாஸ்' நடைமுறை முற்றாக நீக்கம்.
2007 - கொசோவா குறித்த ஐ.நாவின் திட்டம் இலங்கைக்கு உடனடி பயமுறுத்தல் என ஜே.வி.பி. தலைவர் ஆட்சேபக் கடிதம்.
2008 - வவுனியா தவசிக்குளம் பகுதியில் 5 இளைஞர் கொலை தொடர்பாக 6 படையினர் கைது.



2002
அமெரிக்காவின் இராணுவ உலங்குவானூர்தி ஆப்கானிஸ்தானில் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 7 பேர் சாவு.

## நாளை

## 06.03.2018

செவ்வாய்க்கிழமை

**மாசி 22**

திதி: பஞ்சமி பி.இ. 04.20 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.இ.12.10 வரை
சுபநேரம்: 10.55–12.25 வரை
ராகுகாலம்: 03.25–04.55 வரை

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைதீவு மருத்துவ உபகரணப்பொருள்கள் வழங்கல் தொடர்பான காலநீடிப்பு - 2018**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு மருத்துவ உபகரண பொருள்கள் வழங்கல் 2018 இற்கான பெறுகை விலைக்கேள்விகள் 17.03.2018 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

விலைக்கேள்விகள் 19.03.2018 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைதீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 19.03.2018 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதார்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**வைத்தியகலாநிதி த. பூங்கோதை**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.** (In.6038) (13.17)

## Course For Human Rights

**"மனித உரிமைகள் பற்றிய அறிவு உடையவரே உன்னதமான சமூகப்பணியாளராக முடியும்"**

**யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் சமூக செயற்பாட்டுமையம் இணைந்து நடத்தும் மனித உரிமைகள் தொடர்பான குறுங்கால கற்கைநெறி**

## Short term course for Human rights

**யாழ். மாவட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வலுப்படுத்துதல் மற்றும் ஆளணியை அதிகரிப்பதற்கான பயிற்சிநெறி.**
**யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும், யாழ். சமூக மேம்பாட்டு மையமும் இணைந்து நடத்துகின்றன.**

**யார் விண்ணப்பிக்க முடியும்?**
1. மனிதவுரிமச் செயற்பாட்டில் அக்கறையுள்ள அரச உத்தியோகத்தர்கள்
2. தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தொழிற்சங்கத்தினர்.
3. சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்
4. அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள்
5. சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள். யுவதிகள்.

**பயிற்சி நடைபெறும் இடம் :-** யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம். 76. கோவில் வீதி. யாழ்ப்பாணம்.

**காலம் :-** சித்திரை – ஆடி 2018 வரை.
(04 மாதங்கள் – 90 மணித்தியாலங்கள்)

**நேரம் :-** சனிக்கிழமைகள் மற்றும் போயாதினங்கள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை

**பயிற்சிக் கட்டணம் :-** ரூபா 5000/-

முன்னணி மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். சட்டத்துறை சார்ந்தோர் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் பணியாளர்களால் பயிற்சிகள் நடத்தப்படும். இரண்டு தவணைகளாக (Semesters) பயிற்சி நடைபெறும். ஒவ்வொரு தவணை முடிவில் பரீட்சைகள் நடத்தப்படும்.

ஒரு பிரிவில் முப்பது பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர் தெரிவு நடைபெறும். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பமுடிவு திகதி :-** 15.03.2018

**விவரங்களுக்கு - 021 222 3668** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வேதநாயகம் தேவானந்த், கௌரவ தலைவர்,**
**யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,**
**76, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.** (C/33159)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி அனற் சௌதாமினி சர்வநாதன்**
**(அனுசா)**

முத்திரைச் சந்தை, நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜேம்ஸ் சவரிமுத்து தம்பதிகளின் கனிஸ்ர புதல்வி கடந்த 01.02.2018 அன்று எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தோர், நேரில் வருகைதந்து அன்னாரின் ஈமைக் கிரியைகளில் பங்குகொண்டோர், உதவியோர், உணவு வழங்கியோர் மற்றும் பல்வேறு வகையில் எமக்கு உதவி நின்றோர் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு யாழ்ப்பாணம் பெரிய கோயிலில் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணியளவில் அவரின் ஆத்மசாந்தி திருப்பலிப் பூசையில் பங்குகொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.
# 225 (639),
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 078 5551, 077 714 6311
(CS/14481)(11,17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 775
சீட்டிழுப்பு திகதி 2018.03.03 சனிக்கிழமை
R 10 12 58 64
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,972,876/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
2018.03.05ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## யாழ்.பல்கலைக்கழக 1988/89 கல்வியாண்டு கலைப்பீட மாணவர்களுக்கான ஒன்று கூடலுக்கான கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் **10.03.2018 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில்** இடம்பெற உள்ளது. **இதில் குறித்த கல்வியாண்டில் கல்விகற்ற கலைப் பீட மாணவ நண்பர்கள்** அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: ஏற்பாட்டுக்குழு சார்பில்**
**ரவிச்சந்திரன் (திருகோணமலை) 077 714 1268** (cs.14354)(13)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 05 . 1982



மறைவு
05 . 03 . 2008

**செல்வன் இராசேந்திரம் கருணாகரர்**
**[யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம், வவுனியா]**

ஆண்டுகள் பல ஓடினாலும் உங்கள் நினைவுகள்
மாறாது மகனே! இறுதிவரை துணையிருப்பாய் என்று
எண்ணி இருந்தோம் எங்களைப் பாதியில்
பரிதவிக்கவிட்டு ஓடி மறைந்தாலும் வாடுகின்றோம்
அன்பான உன் வார்த்தை அயராது எங்கள்
செவியில் ஒலிக்கிறது மகனே.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(CS/14421)(11,17)
உன் பிரிவால் வாடும்
பெற்றோர்

## மரண அறிவித்தல்



**திருமதி சிவயோகவதி கருணாகரன்**

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகவதி கருணாகரன் 03.03.2018 சனிக்கிழமை காலை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கரம்பன் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருமேனி கனகாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், கருணாகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமநாதன் , காசிநாதன் (கொழும்பு), ஜெகநாதன் (நல்லூர்), பத்மாவதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரேவதி, நந்தாவதி (இணுவில்), கமலாவதி (கொழும்பு), சித்திராவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிமலாதேவி (கொழும்பு), சிவநேசன் (பிரான்ஸ்), மகேந்திரராஜா (இணுவில்), தெய்வச்சிலை, காலஞ்சென்ற சுவாமிநாதன், லிங்கேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், டர்ஷா, விதுர்ஷா, சிரானி, ஜனனி, காலஞ்சென்ற கிருஷாந்தன், பிரகலாதன் ஆகியோரின் அன்புப்பெரியம்மாவும், சுஜானி, தேவதா, தயானி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**திருமேனி ஜெகநாதன்**
**071 894 6475**

## தேங்காய் மட்டை தேவை

(பொச்சுமட்டை) தேங்காய் மட்டை தேவை. உங்கள் இடத்துக்கே வந்து கொள்முதல் செய்யப்படும்.

**077 654 4428**

## விற்பனைக்கு

யாழ்.பிறவுண் வீதிக்கு முன்பாக சிவகுருநாதன் வீதியில் 3½ பரப்பு வெற்றுக்காணியும் கொக்குவில் பொற்பதி வீதியில் 1½ பரப்பில் அமைந்த புதிய வடக்குவாசல் வீடும், யாழ். திருநெல்வேலி சந்திக்கு அருகில் 2 பரப்பில் சுற்றுமதில் கூடிய காணியும், உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் 10 பரப்பில் அமைந்த இருவீடுகளும் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472




இணுவில் திருப்பதி
அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
இலட்சார்ச்சனை விழா 2018
05.03.2018 - 14.03.2018 வரை

கோவிந்தன் அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோயில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் ஏவிளம்பி வருடம் மாசித் திங்கள் 21 ஆம் நாள் (05.03.2018) தொடக்கம் மாசித்திங்கள் 30 ஆம் நாள் (14.03.2018) வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம்பெருமானுக்குப் பத்து அந்தண ஆச்சாரியர்கள் ஒன்றுகூடி எம்பெருமானுக்கு இக்கைங்கரியம் நடைபெறவுள்ளதால் அடியார்கள் யாவரும் இவ்வாலயத்துக்கு வந்து இந்த அர்ச்சனையிலும் தினமும் நடைபெறும் மகாயாகத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.

01 ஆம் நாள் (05.03.2018) - மஹா சுதர்சன சக்கர ஹோமம் - வீரம் பெறவும் மற்றும் சகலவித தடை விலகவும்.
02 ஆம் நாள் (06.03.2018) - ஹயக்கிரீவ ஹோமம் / மேதாசூக்த ஹோமம் - சிறந்த கல்வியைப்பெற
03 ஆம் நாள் (07.03.2018) - தன்வந்திரி ஹோமம் / ஆயுஷ்ய ஹோமம் - நோய் நொடி நீங்க
04 ஆம் நாள் (08.03.2018) - லக்ஷ்மி நரசிம்ம ஹோமம் - தீயசக்திகளில் இருந்து விலகி இலக்ஷ்மி கடாட்சம் பெற.
05 ஆம் நாள் (09.03.2018) - சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப்பாக்கியம் பெறுவதற்கு
06 ஆம் நாள் (10.03.2018) - இலட்சுமி ஹோமம் / தன ஆகர்ஷண லக்ஷ்மி ஹோமம் - ஸ்ரீ சூக்த ஹோமம். செல்வம் பெறுவதற்கு
07 ஆம் நாள் (11.03.2018) - நாராயண சூக்த ஹோமம், புருஷ சூக்த ஹோமம் - சர்வசித்தி
08 ஆம் நாள் (12.03.2018) - சம்பூரண சூக்த ஹோமம் - நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க
09 ஆம் நாள் (13.03.2018) - விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம் - சர்வசித்தி
10 ஆம் நாள் (14.03.2018) - பகவத்கீதா ஹோமம் - சர்வசித்தி பெறல், மகா பூர்ணாகுதி, தாரா ஹோமம்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஹோமங்கள் இக்காலத்தில் நடைபெறவிருப்பதால் அடியவர்கள் தங்களுக்கான பரிஹார ஹோமத்தைத் தேர்வு செய்து முற்கூட்டியே ஆலயகாரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:- விஷேட ஹோமங்கள் நடைபெறுவதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோமத் திரவியங்களை ஆலயத்துக்கு சமர்ப்பிக்க முடியும். தொடர்புக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

021 224 2300 (C33160)(11.17) - ஆலய தர்மகர்த்தா -

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English
Veta Fluency Diploma
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 8 : 00 a.m<br>Sat, Sun 9.30 a.m. | Mon,Wed,Fri 10:00 a.m<br>Sat, Sun 3 :00 p.m. | Sat, Sun 8.00 a.m | Sat, Sun 2.30 p.m.<br>Tue,Thu 10 : 00 a.m | Sat, Sun 10.00a.m. |

12-03-2018 முன்னர் பதிவு செய்வோருக்கு 20% கட்டணக்கழிவு

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்
புதிய நடைமுறை சம்பந்தமான தகவல்களை நேரிலோ அல்லது எமது இணையத்தளத்திலோ பெற்றுக்கொள்ளலாம்
http://www.itdmi.com/lifeskill-tamil.html

DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்தானலட்சுமி குணரத்தினம்



தோற்றம் 02.07.1951 மறைவு 03.03.2018

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தானலட்சுமி குணரத்தினம் 03.03.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும், சந்திரசேகர் (கனடா), மதனகலா, மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (cs.14483)(13.17)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு கெங்காதரன்
(மில், லொறி உரிமையாளர்)



தோற்றம் 01.12.1947 மறைவு 05.03.2018

யாழ். சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கெங்காதரன் 03.03.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகனும் சரோஜினிதேவியின் ஆருயிர்க் கணவரும், சாந்தகுமார் (ஜேர்மனி), வசந்தகுமார் (ஜேர்மனி), பாலகுமார் (லண்டன்), செல்வகுமார் (இலங்கை), கோகுலகுமார்(லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பரமசாமி, சிவக்கொழுந்து, புவனேஸ்வரி, புஸ்பவதி, இராசையா, சிவபாக்கியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌரி (ஜேர்மனி), ஜீவரூபி (ஜேர்மனி), சுபாஜினி, தயாளினி, அஜந்தா (லண்டன்), ராஜி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவமணிதேவி, இராசம்மா, காலஞ்சென்றவர்களான அம்பலப்பிள்ளை, செல்லத்துரை, மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்ற இன்பமலர், பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்தோஷ் (ஜேர்மனி), சுவேதா (ஜேர்மனி), சுமித்தா (ஜேர்மனி), அஜய் (ஜேர்மனி), பிரசாந்திகா, தர்மிகா, கானுஜன், பிரவீன், மதுஜா (லண்டன்), மதுசாந் (லண்டன்), பபிஷாலினி (லண்டன்), துவாரகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 11:30 மணியளவில் இடம்பெற்று சரசாலை கொம்பிகுலம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.
076 880 1903



### திருமதி சிவமணி அருணகிரிநாதர்

நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி அருணகிரிநாதர் 03.03.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - சிற்றூண்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தன் (மயிலப்பாசி) - இலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், அருணகிரிநாதரின் அன்பு மனைவியும், வினோத் (சுவிஸ்), பிரஷாத், ஜெயிபா (ஆசிரியை - நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்), சுஜீவன் ஆகியோரின் அன்புத் தாயும், சிந்துஜா (சுவிஸ்), ரம்யா ஆகியோரின் அன்பு மாமியும், விஜுசாவின் அன்புப் பேர்த்தியும், சின்னத்துரை, அப்பாத்துரை, பொன்னுத்துரை, காலஞ்சென்ற தெய்வி மற்றும் பூரணம், காலஞ்சென்ற சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகமுத்து, முருகேசு, குஞ்சுப்பிள்ளை, செல்லமுத்து, சண்முகம், ராசமணி, மனோன்மணி (சுவிஸ்), திருநாவுக்கரசு (சுவிஸ்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.03.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

0771727836 (cs.14479)(13.17)

தேவதை @SaranyaTwtzz

ஆடம்பரமாய் வாழ்வதற்குக் கூட
அதிகம் போராட
வேண்டியதில்லை!
நிம்மதியாய் வாழத்தான் இறப்பு
வரை போராடிக்
கொண்டிருக்கிறோம்.

அபிவீரன் @Akku_Twitz

தலைக்கனம் இல்லாத ஆண்,
ஆடம்பரம் விரும்பாத பெண்
தம்பதிகளாக அமைவது வரம்

ஸ்ரீ@KeethaSj

விட்டுகொடுத்துப் போகிறவனை
தைரியம் இல்லாதவன் என்றும்.,
வைராக்கியமாக இருப்பவனை
ஈகோ பிடித்தவன் என்றும்.,
சித்தரிக்கும் விந்தை உலகம்.

சக்திமான் @mufthimohamed1

எந்நேரமும் மக்களின்
அழுகுரல் கேட்கும் நாட்டிற்கு
பெயர் என்னவோ 'சிரியா'

சுபா/இ.பி.வா பாண்டி அண்ணே

உலகின் தலைசிறந்த
மனிதனை ஒவ்வொருவரும்
தினம் பார்க்கிறோம்,
கண்ணாடியில்.

SHIVA SWAMY.P@ShivaP_Offl

பொறுப்புணர்வோடு
பேசப்படும் பேச்சுக்கள்
மதிக்கப்படுகின்றன.

twitter




# மீண்டும் வருகிறார் 'கொக்கிகுமார்'

செல்வராகவன் இயக்கத்தில், தனுஷ், சினேகா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்து 2006ஆம் ஆண்டு வெளி வந்த படம் 'புதுப்பேட்டை'. இதில் தனுஷ் 'கொக்கிகுமார்' கதாப்பாத்திரத்தில் வித்தியாசமாக நடித்திருந்தார். இந்தக் கதாப்பாத்திரம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில் 12 வருடங்களின் பின்னர் புதுப்பேட்டை படத்தின் இரண்டாம் பாகம் உருவாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

'புதுப்பேட்டை 2' படத்துக்கான கதையை செல்வராகவன் எழுதி முடித்துவிட்டார் என்றும் விரைவில் படம் பற்றிய அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

புத்தகமும் கையுமா
சுத்தினது அந்தக்காலம்



செல்போனும் கையுமா
சுத்திறது இந்தக் காலம்




என்ன வேணும்?




எண்ணை வேணும்...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | | | |
| | 4 | | | 6 | | | 5 | |
| 2 | | 8 | | | | 4 | | 1 |
| | | 4 | | | | | | 7 |
| | 3 | | | 9 | | | 6 | |
| 1 | | | | | | 2 | | |
| 8 | | 7 | | | | 3 | | 2 |
| | 5 | | | 4 | | | 9 | |
| | | | 3 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 4 | 2 | 3 |
| 2 | 9 | 6 | 1 | 3 | 4 | 7 | 5 | 8 |
| 7 | 3 | 4 | 5 | 8 | 2 | 9 | 1 | 6 |
| 5 | 1 | 2 | 9 | 4 | 3 | 8 | 6 | 7 |
| 3 | 4 | 7 | 8 | 1 | 6 | 2 | 9 | 5 |
| 8 | 6 | 9 | 7 | 2 | 5 | 3 | 4 | 1 |
| 9 | 7 | 5 | 2 | 6 | 8 | 1 | 3 | 4 |
| 4 | 8 | 1 | 3 | 5 | 9 | 6 | 7 | 2 |
| 6 | 2 | 3 | 4 | 7 | 1 | 5 | 8 | 9 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆன்மிகத்தில் ஆர்வம் உண்டாகும். மனதில் பெருமிதமும், எதிர்கால வாழ்வில் நம்பிக்கையும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு நிறைவேறும்.

**இடபம்:** தெய்வ அருளால் மனதில் அமைதி நிலைக்கும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். திடீர் செலவுக்காக கடன் பெறுவீர்கள்.

**கடகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். அவமதித்து பேசியவர் தன் தவறை உணர்ந்து அன்பு பாராட்டுவார். தொழிலில் உருவான மந்தநிலை விலகும்.

**சிங்கம்:** பிறர் சொல்லும் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் சீரான இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** திட்டமிட்ட பணி சிறப்பாக நிறைவேறும். உங்கள் நலம் விரும்புவரின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்க தாமதம் ஆகலாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**விருச்சிகம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும்.

**தனுசு:** வாழ்வில் வளம் பெற புதிய வழி பிறக்கும். பிறர் வியக்கும் வகையில் வளர்ச்சியடைவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமான அளவில் இருக்கும்.

**மகரம்:** பணிகள் நிறைவேற கூடுதல் உழைப்பு அவசியம். தொழிலில் உருவாகிற இடையூறை நண்பரின் உதவியால் சரிசெய்வீர்கள். சுமாரான வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** ஒருமுகத் தன்மையுடன் பணியில் ஈடுபடுவது நல்லது. சக தொழில் சார்ந்தவரிடம் தேவையற்ற விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**மீனம்:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பெருமித உணர்வுடன் நற்பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும்.

கருமேகங்கள் எவ்வளவுதான்
முயற்சி செய்தாலும்
சூரிய ஒளியை மறைக்க
முடியாதோ அதுபோலத் தான்
வெற்றிக்கு முன் வரும் தோல்விகளும்...!

ஆசிரியர் வகுப்பறையில்
இருக்கும் போது மாணவர்கள்



ஆசிரியர் திடீரென வெளியே போனவுடன்



ஏன் மச்சான் அதான் டீச்சர் போய்ட்டாங்களே
இந்த சீட்ல நம்ம கொஞ்சம்
உட்கார்ந்து பார்த்தா என்ன...?

# புத்தியைத் தீட்டு



ஒரு காட்டில் மரம் வெட்டுவதற்காக மரம் வெட்டும் தொழிலாளரான இராமனும் பாலனும் சென்றிருந்தனர். பகல் முழுவதும் அவர்கள் மரங்களை வெட்டினர். மாலையானதும் மரம் வெட்டுவதை இருவரும் நிறுத்தினர். அப்போதுஇராமனிடம்அதிகமானவிறகுகள்இருந்ததோடு,அவர் அதிகம்களைப்படையாமலும்இருந்தார்.பாலனோகுறைவான விறகுகளோடு அதிகம் களைப்படைந்தும் காணப்பட்டார். பாலனுக்கோ ஒரே ஆச்சரியம். "எப்படி இது சாத்தியமானது. நானோஇன்றுமுழுவதும்அவனைப்போலத்தான்வேலை செய்தேன். ஆனால் குறைவான விறகுகளையே வெட்டியிருக்கிறேன். அத்தோடு மிகவும் களைப்பும் அடைந்துள்ளேன். ஆனால் அவனோ நிறைய விறகுகள் வெட்டியுள்ளான். அதிகம்களைப்படையாமலும்உள்ளான்" என்று நினைத்தபடி அந்த சந்தேகத்தை இராம னிடம் கேட்டும்விட்டான்.

பாலன், "நண்பனே உன்னைப் போலவே நானும் பகல் முழுவதும் விறகு வெட்டிக் கொண்டிருந்தேன். ஆனால் கொஞ்சம்விறகுகள்தான்கிடைத்தன"என்றான்.இராமனோ "சிறிதும்ஓய்வெடுக்காமல்தொடர்ச்சியாகவாவெட்டினாய்?" என்று கேட்டான். "ஆமாம் அதிக விறகுகள் பெற வேண்டுமே என்று தொடர்ந்து வெட்டினேன்" என்றான் பாலன்.

"நான் அப்படித் தொடர்ந்து வெட்டவில்லை. இடையிடையே களைப்படையாமல் இருக்க ஓய்வெடுத்துக் கொண்டேன்" என்றான் இராமன். மறுநாள் பாலன். இராமன் கூறியது போல இடையிடையே ஓய்வு எடுத்துக் கொண்டு மரங்களை வெட்டி னான். ஆனாலும்தன்நண்பன்அளவுக்குமரங்களைஅவனால் வெட்டமுடியவில்லை. நண்பன்கூறியதுபோலஇடையிடையே ஓய்வெடுத்து மரம் வெட்டியும் அவனளவுக்கு தன்னால் முடியவில்லையே" என வருந்தினான்.

மறுநாள் தன் நண்பன் மரம் வெட்டும்போது ஒளிந்திருந்து பார்த்துவிட வேண்டும் என விரும்பினான். அதன்படி அன்று நண்பனுடன் மரம் வெட்டச் செல்லாது. வீட்டில் தங்கிவிட்டான். நண்பன் தனித்து காட்டுக்குச் சென்றான். அவன் சென்ற பின் அவனைப் பின் தொடர்ந்த பாலன் மறைந்திருந்து நண்பன் மரம் வெட்டுவதைக்கவனித்தான். நண்பனோஅரைமணிநேரம் தொடர்ந்து வெட்டியபின் ஓய்வாக அமர்ந்தான். ஓய்வாக இருந்த அவன் தனது மரம் வெட்டும் கோடாரியைக் கையிலெடுத்து மரத்துண்டு ஒன்றில் தீட்டிக் கொண்டிருக்கக் காணப்பட்டான். இதனைக் கண்டு ஆச்சரியமடைந்தான் பாலன்.

## அழகுமிக்க வெண்ணிலா



அழகு மிக்க வெண்ணிலா
ஆசை காட்டும் வெண்ணிலா
பழகி விளையாடவே
பக்கத்திலே வா வா வா

வானவீதி தன்னிலே
வந்து வந்து மறைகிறாய்
மோனமாகப் பார்க்கிறாய்
மோதி காட்டிச் சிரிக்கிறாய்

சிறுத்துச் சிறுத்துப் போகிறாய்
பெருத்துப் பெருத்து வருகிறாய்
நிறைந்த வட்ட வடிவமாய்
நின்று மகிழ்ச்சி தருகிறாய்

எந்தநாளும் உன்னையே
எதிரில் பார்க்க ஆசையே
சிந்தனை மகிழக் காட்சி தா
சீக்கிரமாய் ஓடிவா...

## சூழல் சுத்தம் பேணுவோம்

நாம் வாழும் வீடாகிலும் வீதியாகிலும் அங்கு சூழல் சுத்தம் பேணப்பட வேண்டும். சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால்தான் சுகாதாரம் நன்றாக அமையும். இதனை நன்குணர்ந்தே எம் முன்னோர்கள் 'சுத்தம் சுகம் தரும்' என்று கூறி வைத்துள்ளனர்.

ஒருமனிதனுக்குஉடற்தூய்மையும்உள்ளத்தூய்மையும் அவசியம். அப்போதுதான் அவனது வாழ்வு முழுமையான வாழ்வாக அமையும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. நோயற்றவாழ்வுக்கு அடிப்படையாக அமைவது உடற்தூய்மையாகும். உடல் தூய்மை உளத்தூய்மைக்கும் வழிகோலும். நாம் வீட்டில் வாழ்கிறோம். எமது அயலிலுள்ள வீடு, வீதி, பாடசாலை, அலுவலகம், கோயில் , பேருந்து நிலையம், விளையாட்டுமைதானம் எல்லாமே சூழலாகும். சூழல் சுத்தமாக இருந்தால் தான் நாமும் சுகமாக வாழ முடியும்.


வீதிகளில் கண்ட கண்ட இடங்களில் உமிழ்நீர் உமிழ்தல், சிறுநீர் கழித்தல் போன்றவை சூழல் அழுக்குகளையும் வீதிகளில் போடுதல் கூடாது. அவற்றைக் குப்பைத் தொட்டிககளில் குப்பைக்குழிகளில் போடப் பழகுதல் வேண்டும்.

வீட்டின் பக்கத்தில் கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கழிவுநீர் தேங்கி நின்றால் நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்பேற்படும். நாம் சுவாசிக்கும் காற்று தூய்மையானதாக இருத்தல் வேண்டும். சூழல் சுத்தமாக இருக்கும் இடங்களில்தான் தூய்மையான காற்றைச் சுவாசிக்க முடியும். எனவே நாம் சுகமாக வாழ சூழல் சுத்தம் மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.





## எலும்புத்துண்டு எதற்கு...?






## நிழல்களை கண்டுபிடிப்போம்.







1. சிவப்பு
2. மஞ்சள்
3. நீலம்
4. ஊதா
5. ஒரேஞ்
6. பச்சை
7. பிறவுண்
8. கறுப்பு

## புதிய பாதையில்...

தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
கட்சிக்குள் பிரச்சினை இருக்கின்றது. அதைத் தீர்ப்பது பற்றிப் பேசி வருகின்றோம். தலைவரை நாம் நீக்கவேண்டியதில்லை. அவராகவே மாற்றத்தை ஏற்படுத்துவார். அதன் பிறகு புதிய பயணம் ஆரம்பமாகும்.
ஐக்கிய தேசியக் கட்சி புதியதொரு கலாசாரத்தை அறிமுகப்படுத்தியது. அது மக்கள் மத்தியில் எடுபடவில்லை. இன்னும் மாற்றம் தேவை என்பதையே மக்கள் எமக்கு எச்சரிக்கையாக வழங்கியுள்ளனர். இன்னும் காலம் இருக்கின்றது. தேர்தல் முடிவை ஒரு பாடமாக எடுத்து. முன்நோக்கிப் பயணிக்க வேண்டும் - என்றார். (ற-5)

## அமர்வுக்கு...

கமான உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளமை மகிழ்வைத் தருகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபையின் அமர்வுகளில் பலரைக் காணக் கிடைப்பதில்லை. கொஞ்ச உறுப்பினர்களே வருவார்கள். ஆனால் இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களில் 30 பேர் கலந்து கொண்டுள்ளீர்கள். இதனைப் பார்க்கும் போது மிகவும் சந்தோசமாக உள்ளது.
நாம் ஏனைய விடயங்களில் எவ்வாறு இருந்தாலும் ஒரு நாட்டின் பிரதிநிதியை மதிப்புறுத்த ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுக்கு அதிக உறுப்பினர்கள் வந்துள்ளீர்கள். இதுதான் எமது பண்பு, கலாசாரம். நாம் எமக்குள் எப்படி இருந்தாலும் எமது கலாசாரம் பண்புகளை விட்டுக் கொடுக்கக் கூடாது. இந்த விடயத்தில் நாம் தமிழர்கள் என்பதில் பெருமையாக உள்ளது - என்றார். (ற-5.8)

## சமாதானத்தை...

னங்கள் சமாதானத்தை வலியுறுத்துவனவாக அமைய வேண்டும். வன்முறையைத் தூண்டும் சின்னங்களாக இருந்து விடக்கூடாது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய கொன்சியூலர் ஜெனரல் நடராஜனுக்கு. யாழ். முஸ்லிம் சமூகம் சார்பில் ரில்கோ தனியார் உணவு விடுதியில் மதிப்புறுத்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை இந்திய அரசு எமது மக்களுக்கு தேவையான எத்தனையோ தேவைகளையும் அபிவிருத்திகளையும் அரசியல் உதவிகளையும் செய்து வருகின்றது.
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கான உரிமைகள் தொடர்பில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திலேயே முதன் முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் நாம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அரசியல் தீர்வு விடயத்தில் முக்கிய ஆவணமாக வைத்துள்ளோம்.
இலங்கையில் நாம் இந்தியாவை ஒதுக்கி எந்தக் கருமத்தையும் செய்து விடமுடியாது. இதில் கோபிக்க எதுவும் இல்லை. இதுதான் உண்மை.
நாங்கள் பல நாடுகளின் இராஜதந்திரிகள் பலரைச் சந்தித்து எமது பிரச்சினைகளைக் கூறும்போது அவர்கள் முதலில் கேட்பது இது தொடர்பாக இந்தியா என்ன சொல்லுகின்றது என்ற கேள்வியையே தொடுக்கின்றனர். இவ்வாறு இந்தியாவின் ஆதரவுடனேயே நாம் எதனையும் செய்ய முடியும். போரால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மீண்டு எழுந்து வாழ இந்தியா பல வழிகளில் உதவிகளை செய்து வருகின்றது. எமக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் உறுதுணையாக நிற்கின்றது. நாம் தவறுகள் ஏதாவது செய்திருந்தால் எமது மக்கள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.
எமது மண்ணை விட்டு பிரிந்து செல்லும் போது இங்கு கூடியுள்ள. முஸ்லிம் சமூக மக்களும் நினைவுச் சின்னம் கொடுப்பீர்கள் என்று நினைக்கின்றேன். இவ்வாறான மனிதர்களுக்கு நினைவுச் சின்னத்தை வழங்கும் போது சமாதானத்தை பிரதிபலிக்கும் சின்னங்களை வழங்குங்கள். மாறாக நீங்கள் வழங்கும் நினைவுச் சின்னம் வன்முறையாக இருந்து விடக் கூடாது என்றார்.
கொன்சியூலர் நடராஜன் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய விருந்துபசார நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாண மக்கள் சார்பாக வாளை வழங்கியிருந்தார். (ற-5.8)

## பிரம்படியில்...

பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் பிரம்படிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு மாலை எட்டுப் பேர் கொண்ட குழுவொன்று சென்றது. வீட்டின் கேற் மற்றும் கதவுகளை கைக் கோடரியாலும் வாள்களாலும் கொத்தி சேதமாக்கியது. வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.
இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் அந்தப் பகுதியில் நடமாடிய இருவர் ஊர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்களை முறையாகக் கவனித்த மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸார் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
தாக்குதல் இடம்பெற்ற வீட்டைச் சேர்ந்த இளைஞனுக்கு ஆவா குழுவுடன் முன்னர் தொடர்பு இருந்தது என்றும், முன்பகை காரணமாகவே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-8)

## பொலிஸின்...

சட்டம். ஒழுங்கு அமைச்சரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அம்பாறை நகரில் பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டதையடுத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து நேற்று அங்கு சென்றார். உலங்குவானூர்தியில் சென்ற அவர் ஒலுவில் சுற்றுலா விடுதியில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின்போதே இவ்வாறு கூறினார்.
இந்தக் கலந்துரையாடலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர், அலிசாஹிர் மௌலானா. பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அம்பாறை மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.தவம், ஆரிப் சம்சுதீன், முஸ்லிம்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன முக்கியஸ்தர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
அங்கு தலைமை அமைச்சர் தெரிவித்ததாவது
நல்லாட்சியில் இப்படியானதொரு சம்பவம் நடந்திருக்கக்கூடாது. இந்தச் சம்பவம் குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். அமைச்சர் ரவூப் ஹக்கீம் என்னை அடிக்கடி தொடர்புகொண்டு இந்தச் சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். நான் சிங்கப்பூரில் இருக்கும்போதும் அலைபேசி மூலம் அவருடன் தொடர்புகொண்டு இதுபற்றிக் கலந்துரையாடினேன்.
சாட்சியங்கள் அழிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விசாரணையை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பொலிஸ் சிறப்புக் குழுவே இனிக் கையாளும். இது தவிர. அம்பாறை பள்ளிவாசலுக்குப் பாதுகாப்பு வழங்க அங்கு பாதுகாப்பு அரண் ஒன்றை அமைக்க வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.
வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்வதற்கு. பயமில்லாமல் சாட்சி சொல்ல முன்வரவேண்டும். சாட்சி சொல்பவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளியிலிருந்து வருபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாக்குதலில் ஈடுபட்ட சகலரும் புதிய விசாரணை மூலம் விரைவில் கைது செய்யப்பட்டு. அவருக்கு உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.
அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு தெரிவித்ததாவது
அம்பாறை தாக்குதலில் இதுவரை எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளில் உள்ள பலவீனங்கள் தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்த நிலையில். சட்டம். ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் தலைமை அமைச்சர் ரணில் தனது நிலைப்பாட்டை சொல்வதற் காக அம்பாறை மாவட்டத் துக்கு வந்துள்ளார். அம்பாறையில் தோன்றியிருக்கும் பதற்ற நிலையானது. தலைமை அமைச்சரின் வருகையால் இன்னும் அதிகரித்துவிடும் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இதை வைத்து இன்னும் குளிர்காய நினைக்கின்ற இனவாத சக்திகளுக்கு மத்தியில், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தலைமை அமைச்சர் எடுத்திருக்கும் முயற்சிக்கு நாம் நன்றி தெரிவிக்கவேண்டும்.
தாக்குதல் சூத்திரதாரிகள் தப்பித்துக்கொள்வதற்கு பல வகைகளிலும் முயற்சித்து வருகின்றனர். தாக்குதல் நடைபெற்ற இடங்களிலுள்ள மறைகாணி (சி.சி.ரி.வி.) பதிவுகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.
அயலிலுள்ள மறைகாணிப் பதிவுகளை பரிசோதித்து தாக்குதலில் ஈடுபட்டோரை உடனடியாகக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ற-5)


கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 262
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.03.04
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 86,523,724/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
R 01 41 45 77
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 186
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.03.04
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,038,515/-
வெற்றி இலக்கங்கள்
02 07 57 70
ஆங்கில எழுத்து T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.03.2018 வெற்றி வாரம் 2258 வர்ணம் ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள் 07 19 49 59
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 12, 941, 308/=
2018.03.06ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

# பணிநயப்பும் மணிவிழா வாழ்த்தும்



மணிவிழாக்காணும்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின்
உபஅதிபர்
## திருமதி T.D. அல்பிரட்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி,B.ED)
அவர்கள் தனது அறுபதாவது அகவையில்
02.03.2018 அன்று ஒய்வு பெறுகின்றார்.

**ஆசிரியரின் சேவை விவரம்**

1. வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் - 1988.08.17 - 1991.02.04
2. கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை - 1991.02.05 - 1992.12.31
3. வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் - 1993.01.01 - 1993.12.31
4. புங்குடுதீவு A.M.T.M. வித்தியாலயம் - 1994.01.01 - 1996.06.11
5. வ/ரம்பைக்குளம் பெண்கள் வித்தியாலயம் - 1996.06.12 - 1999.12.31
6. யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் - 2000.01.01 - 2018.03.02

தனது சீரிய பணிகளால் வானளாவ உயர்ந்து குரு பிரதீபா பிரபா உயர் விருதினையும் பெற்று நிற்கும் எங்கள் பாடசாலை உபஅதிபரின் ஒய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர், பாடசாலை சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

# சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது

## வருமான ஈட்டம் 4.8 வீதமாகப் பதிவு

2017ஆம் ஆண்டு முதல் ஐந்து மாத காலப்பகுதியில் சுற்றுலாத் துறையின் வருமானம் ஆயிரத்து 521.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளதுடன், இது 4.8 வீத அதிகரிப்பாகக் காணப்படுகிறது.

இந்த தகவலை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளிப்படுத்தியுள்ளது.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,

"2016 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் ஆயிரத்து 451.8 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடுடைய வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

குடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை 4.8 வீதமாக அதிகரித்திருந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகை 8 இலட்சத்து 87 ஆயிரத்து 93 ஆக காணப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் இந்தியா, சீனா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து நாட்டினுள் வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் விகிதாசாரம் 51.4 ஆகக் காணப்படுகிறது.

கடந்த மே மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.5 சதவிகிதம் சரிவடைந்துள்ளது. ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 891 சுற்றுலாப் பயணிகள் நாட்டினுள் வருகை தந்துள்ளனர். 209.1 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடுடைய வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது." - என்றுள்ளது. (ஓ)

SRI LANKA TOURIST BOARD
CERTIFIED COMPANY

### ஓய்வு...

சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக 2007ஆம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 60 என்று வரையறை செய்யப்பட்டிருந்தது. கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி இந்த வயதெல்லை 67ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெறும் வயதெல்லை இவ்வாறு வரையறை செய்யப்பட்டிருப்பினும் நோய் உட்பட தேவையின் நிமித்தம் அதற்கு முன்னரே ஓய்வு பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த [03.02.2018] சனிக்கிழமை சிவன் பாதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி

மனோன்மணி செல்லத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று [05.03.2018] திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 27.11.1933 இறப்பு 03.02.2018

வொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.



மரண அறிவித்தல்



செல்லர் நவரத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நவரத்தினம் நேற்று (04.03.2018) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - செல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னமுத்து, பொன்னையா ஆகியோரின் சகோதரனும் நவரத்தினராசா, ஜெயராசா, கௌரி, ஜெய ராணி, தேவராசா ஆகியோரின் தந்தையும் சோதி, தவமலர், திலகேஸ்வரன், இராசேந்திரம், யன்சிலியா ஆகியோரின் மாமனும் கபிலன், மோனிஷா, வேலோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2018) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி வடக்கு, கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


### வரலாற்று...

ருப்பது வரவேற்கத்தக்கது. அந்தத் தாக்குதலை ஈ.பி.டி.பியினரும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினருமே நடத்தினர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அன்று எம்மீது குற்றம் சுமத்தியதுடன், சில தமிழ் ஊடகங்களும் அவ்வாறே செய்தியும் வெளியிட்டிருந்தன. அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இன்று உண்மை வெளியாகியுள்ளது. ஈ.பி.டி.பி. மீது அன்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும் உண்மைக்குப் புறம்பானது என்பது உறுதிசெய்யப்பட்டு அந்த அவதூறிலிருந்தும் ஈ.பி.டி.பியை வரலாறு விடுதலை செய்துள்ளது.

இவ்வாறு அந்தக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

திருமதி அனந்தி சசிதரன் வீட்டின் மீது மர்ம நபர்களால் மாகாணசபைத் தேர்தலுக்கு முதல் நாள் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலை ஈ.பி.டி.பியினரே மேற்கொண்டனர் என்று தமிழ் அரசுக் கட்சியினர் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர். அந்த அவதூறுச் செய்தியானது எமது வெற்றியையும் பாதிக்கச் செய்தது. மேற்படி சம்பவம் தொடர்பாக தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரமுகரும் தற்போதைய அந்தக் கட்சியின் பேச்சாளருமான சட்டத்தரணி சுகாஸ், ஈ.பி.டி.பி மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவதூறுகளை பரப்பி வந்திருந்தார்.

2013ஆண்டுக்கான இலங்கை தொடர்பான அறிக்கையில் அந்தச் சம்பவத்தை ஈ.பி.டி.பியினரே செய்ததாகவும், அந்தத் தாக்குதல் நடைபெற்றபோது நேரடியாகக் கண்டதாகவும் சட்டத்தரணி சுகாஸ் கூறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி மாலையிலும், செப்ரெம்பர் 20ஆம் திகதி அதிகாலையிலும் மாகாணசபைத் தேர்தலுக்கு முதல்நாள் அடையாளம் காணப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் ஏனைய இராணுவச் சீருடை அணிந்திருந்த நபர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட திருமதி அனந்தி சசிதரனுடைய இல்லத்தைத் தாக்கினார்கள். தகவல்களின் படி, வன்முறையாளர்கள் வீட்டினுள் புகுந்து தனியுடமைகளை அழித்ததுடன், 8 நபர்களுக்கும் காயம் விளைவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரான சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பின் சட்ட ஆலோசகர் கே.சுகாஸ் என்பவர், தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு தான் யார் என்பதை தன்னைத் தாக்குவதற்கு முன்னர் கூறியிருந்தார்.

இதன் ஊடாக ஈ.பி.டி.பி. மீது அன்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும் உண்மைக்குப் புறம்பானது என்பதை காலம் வெளிப்படுத்தியுள்ளது.

இதுபோன்று கடந்த காலத்தில் ஈ.பி.டி.பி. மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களும், அவதூறுகளும் சுமத்தியவர்களின் பொய் முகங்கள் தற்போது அம்பலமாகி வருகின்றது. உள்நோக்கத்துடனும், அரசியல் காழ்ப்புணர்ச்சியுடனும், சம்பவங்களை திசை திருப்பும் நோக்கத்துடனும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கி பிழைப்பு நடத்தியவர்களின் கதைகளை பன்னாட்டு முகவர்களும் ஆராயமல் விழுங்கிக் கொண்டுள்ளார்கள் என்பதும் தெரியவருகின்றது. எம்மீது சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து உண்மையான குற்றவாளிகள் யார்? என்பது அடையாளம் காணப்பட்டு உண்மை வெளிவருகின்ற நிலையில் ஈ.பி.டி.பியினராகிய நாம் நிரபராதிகள் என்பதையும், எம்மீது அவதூறுகள் வலிந்து சுமத்தப்பட்டுள்ளது என்பதை வரலாறு வெளிச்சத்துக்கு கொண்டுவந்து எம்மீதான களங்கத்தை துடைத்துள்ளது - என்றுள்ளது. (ந-5)

### தமிழீழம்....

லர் ஜெனரலாகப் பணியாற்றிய நடராஜனுக்கு, பிரிவு உபசார விழா நேற்று இடம்பெற்றது. கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு அருகிலுள்ள மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய அவைத் தலைவர் தெரிவித்ததாவது

இந்தியத் துணைத்தூதரக கொன்சியூலர் நடராஜன் யாழ்ப்பாணத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மாகாண சபை முறைமை உருவாக பெரும் பங்காற்றியது இந்தியாதான். அதிலும் காலம் தாழ்த்தி உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் உருவாக்கத்துக்கும் இந்தியாவின் பங்களிப்பு இருந்தது. நாமும் இந்தியாவும் தாய் பிள்ளைகள் போல உறவாடி வருகின்றோம். ஒரு சில விடயங்களில் எமக்கு ஏமாற்றமான நிகழ்வுகள் நடந்திருந்தாலும் நாம் இன்றுவரை இந்தியாவை நம்பியுள்ளோம். மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஊடாக எமக்குரிய தீர்வை பெற்றுத்தர வலியுறுத்தி மூன்று முக்கிய நாடுகளை கோரியுள்ளோம். அதில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளையே வலியுறுத்தியுள்ளதுடன் இவர்கள் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிரயோகித்து எமக்கான சுயாட்சி, சுய உரிமைகளை பெற்றுத்தர வலியுறுத்தி வருகின்றோம்.

எமது மாகாணத்தில் பொருளாதரத்தில் முக்கிய பங்கு வகித்து வரும் காங்கேசன் துறைமுகம், பலாலி வானூர்தி நிலையம் ஆகியவற்றை இந்தியா பொறுப்பேற்று அபிவிருத்திகளை மேற்கொண்டு எமது மாகாண பொருளாதரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கிருந்து செல்லும் கொன்சியூலர் ஜெனரல், டெல்யில் பணியாற்றவுள்ளார். அவர் டெல்லி ஊடாக எமக்கான தீர்வைப் பெற்றுத் தர அழுத்தங்களைக் கொடுக்க வலியுறுத்தவேண்டும் - என்றார். (ந-5,8)

# தலைச்சுற்றல், மயக்கம் நீங்க சீரகம் சாப்பிடுவது உகந்தது



சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த தண்ணீரை குடித்தால் தலைச்சுற்றல், மயக்கம் நீங்கி விடும். திராட்சை ஜூஸுடன் சீரகம் கலந்து பருகி வர குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்த லாம். அகத்திக்கீரையுடன் சீரகம், சின்ன வெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து சாப்பிட்டு வந்தால் மனநோய் குணமாகும். இதனை உணவில் சேர்த்துச் சாப்பிட்டால் நன்றாக சமிபாட டையும். மந்தத்தைப் போக்கும்; நெஞ்சு எரிச்சலுக்குச் சீரகத் துடன் கொஞ்சம் வெல்லம் சேர்த்துக் கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வந்தால் நெஞ்சு எரிச்சல் குணமாகும். சீரகத்தை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு உலர்த்தி, தூளாக இடித்து ஒரு பேணியில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் தினமும் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு மோர் குடித்து வந்தால் மார்பு வலி நீங்கும்.

மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வாயுத் தொல்ல நீங்கும். சீரகத்தை இஞ்சி, எலுமிச்சம் பழச்சா றில் கலந்து ஒருநாள் ஊறவைத்துக் கொள்ளவும். இதை, தினம் இருவேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டு வர, பித்தம் மொத்தமாகக் குணமாகும்.

இஞ்சி, சீரகம், மிளகு, திப்பிலி ஆகியவற்றைத் தேனில் கலந்து சாப்பிட்டால் எல்லா உடல் உள் உறுப்புகளையும் சீராக இயங் கச்செய்யும். உடலுக்கு குளிர்ச்சியும், தேகத்தைப் பளபளப்பாக வைக்கும் ஆற்றலும் சீரகத்துக்கு உண்டு. சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு குவளை குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொரு மல் போய்விடும். ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதிப் போக்கு நிற்கும். சிறிது சீரகத்து டன், கீழ்காய்நெல்லியை அரைத்து, எலுமிச்சை சாறில் சேர்த் துப் பருகி வர, கல்லீரல் கோளாறு குணமாகும். சமையலுக்கு சுவையும், மணமும் தருவதில் சீரகம் பல வழிகளில் உதவுகி றது. பலவித மசாலாப் பொடி தயாரிப்பில் இது ஓர் முக்கிய பங்கு பங்கு வகிக்கிறது. செரிக்காமை, வாயுத் தொல்லை இவைக ளுக்கு மாமருந்து.

திராட்சைப்பழச்சாறுடன், சிறிது சீரகத்தை கலந்து பருகினால், ஆரம்பநிலை குருதி அழுத்த நோய் குணமாகும். சிறிது சீரகம், நல்லமிளகு பொடித்து, எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளித்தால், கண் எரிச் சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும். அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு சாப்பிட்டால், மன அழுத்தம் மாறும். ஆரம்பநிலை மனநோய் குணமாகும்.

சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப் பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமா கும். சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு குவளை குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் வற்றி, நலம் பயக்கும். ஓமத் துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதிப் போக்கு நிற்கும். சீரகத்தைத்தூள் செய்து இலேகியமாக மெலிந்து போனவர்களுக்குக் கொடுப்பது உண்டு.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 80 | 80 | 60 | 80 | 60 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 60 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 80 | 120 | 60 | 80 | 80 |
| பாகல் | 120 | 200 | 120 | 140 | 100 |
| க.கிழங்கு | 70 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 100 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 45 | 40 | 40 |
| தக்காளி | 60 | 60 | 25 | 30 | 30 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 | 20 |
| ப.மிளகாய் | 80 | 120 | 60 | 60 | 60 |
| புடோல் | 70 | 70 | 60 | 80 | 50 |
| கோவா | 70 | 70 | 50 | 50 | 40 |
| வெண்டி | 80 | 100 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 80 | 150 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 180 | 160 | 160 |
| தேங்காய் | 80 | 80 | 90 | 100 | 80 |
| உ.கிழங்கு | 70 | 70 | 75 | 80 | 60 |
| தேசிக்காய் | 50 | 40 | 40 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 20 | 15 |
| கறிமிளகாய் | 100 | 180 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 140 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | - | 600 | 400 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 1000 | 1000 | 900 |
| நண்டு | 550 | 500 | 500 | 800 |
| கணவாய் | 600 | 800 | 800 | 600 |
| பாரை | 600 | 650 | 600 | 600 |
| சுறா | 500 | 700 | 1000 | 800 |
| சீலா | 400 | 450 | 500 | 500 |
| விளை | 500 | 450 | 500 | 800 |
| முரல் | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 450 | 350 |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 400 |
| ஓரா | 350 | 300 | 450 | 350 |
| திரளி | 250 | 200 | 200 | 400 |
| நகரை | 250 | 300 | 400 | 300 |
| சூடை | 100 | 180 | 160 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 300 | 400 | 350 |
| மதனம் | 200 | 250 | 300 | 200 |
| கொய் | 150 | 100 | 100 | 150 |
| பாலை | 150 | 300 | 500 | 350 |
| வாளை | 100 | 350 | 400 | 200 |



# கூந்தலை அழகாக்கும் இயற்கை வழிமுறைகள்

தலைமுடி உதிர்தல் பிரச்சினைக்குப் பல காரணங்கள் இருக் கின்றன. ஊட்டச்சத்து குறைபாடு, நாம் பயன்படுத்தும் தண்ணீர், கெமிக்கல் கலந்த ஷாம்பு பயன்படுத்துதல், தூசி மற்றும் மாசுக்கள் தலையில்படுதல்எனக்காரணங்களைஅடுக்கிக்கொண்டேபோகலாம். ஆனால் இவற்றையெல்லாம் மீறி, இயற்கையான முறையில் முடி உதிர்தலைத் தடுக்க முடியும். அத்துடன் முடியை பளபளப் பாகவும் நீண்டு வளரவும் செய்ய முடியும்.

கூந்தல் பளபளப்புடன் இருக்க வாரம் ஒரு முறை ஒலிவ் எண் ணெயைக் கொதிக்க வைத்துத் தலையில் நன்றாகத் தேய்க்க வேண்டும். சோறு வடித்த கஞ்சியில் சிறிது ஷாம்பூவை ஊற்றி கலந்து தலையில் தேய்த்து குளியுங்கள்.

எண்ணெய்ப் பசை மற்றும் அழுக்கு நீங்கி கூந்தல் பட்டுப் போல் பளபளக்கும். தலைமுடி வறண்டு, சீராக இல்லாமல் இருந்தால் முகத்தின் பொலிவும் குறையும். ஆகவே மறுநாள் காலையில் ஏதாவது விழா என்றால் முதல் நாள் மாலையில் கூந்தலை எப்போதும் போல் ஷாம்பு மற்றும் சீயக்காய் வைத்து அலசி விட வும்.

அடுத்தநாள் கூந்தலை இலேசாக அலசி, துடைத்துவிட்டு அலங் காரம் செய்தால் கூந்தல் பளிச்சென இருக்கும். முகமும் பொலி வுடன் அனைவரையும் கவரும்.

அழகு நிலை யங்களுக்கு சென்று தலை முடியை கலரிங் செய்து விட்டு, ஷாம்பு மூலம் சுத்தம் செய்யும் போது கூந்தலில் உள்ள சில சத்துக்கள் அழிந்து போகும். இதற்கு வீட்டில் ஷாம்பு போட்டு முடித்த பின்னர், தண்ணீரில் கொஞ் சம் வினிகரை கலக்கி கூந்தலை கழுவி அலசவும். இதனால் கூந்தல் பளபளப்பா கும்

## இது புதுசு



ஆண்களுக்கான சப்பாத்து வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகி யுள்ளன. இவை ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய் யப்படுகின்றன.

# சிறுநீரக கோளாறுக்கு அருமையான மருந்து வாழைத்தண்டு!

சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்களால் துன்பப்படு கிற வர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிக ரித்துக் கொண்டிருக்கிறது. உடலில் உள்ள கழி வுகள் சிறுநீர் மூலம் வெளியேற்றப்படுகின்றது. சிறுநீரைக் கட்டுப்படுத்துவதாலோ அல்லது நோய் பாதிப்புகளாலோ சிறுநீர் சரிவர உடலை விட்டு வெளியேறாமல் இருக்குமானால், அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

1. சிறுநீரகத்தில் கல் உருவாவது இன்று பரவ லாகக் காணப்படும் நோய். அதிக காரமான உணவு, மிகக் குறைவாக நீர் அருந்துதல், வறட்சியான உணவு, மது அருந்தும் பழக் கம், அடிக்கடி சிறுநீரை அடக்குதல் போன்ற காரணங்களால் சிறுநீர் தடைபட்டு சிறு நீரகத் தில் கற்கள் உண்டாகின்றன.
2. சிறுநீரகக் கற்களை வெளியேற்ற மருந்துக ளும், மருத்துவ முறைகளும் இருந்தாலும் நாம் உட்கொள்ளும் உணவு மூலமும் சிறு நீரக கற்களை வெளியேற்றலாம்.
3. வாழைத்தண்டுக்கு சிறுநீரக கற்களை வெளி யேற்றும் சக்தி உள்ளது.
4. வாழைத்தண்டை அடிக்கடி உணவில் சேர்த் துக் கொள்வதால், ஆரம்ப நிலையில் உள்ள கற்களை மிக எளிதாகக் கரைத்து விடலாம். சிறுநீரகக் கற்கள் உள்ளவர்கள் வாழைத் தண்டை வாரம் மூன்று முறை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.
5. வாழைத்தண்டு நார்ச்சத்து மிக்க உணவாத லால் அதிக உடல் எடையால் அவதிப்படுகிற வர்கள், நீரிழிவு நோயாளிகள், குருதியில் கொழுப்புச் சத்து அதிகரித்து இருப்பவர்க ளுக்கு இது மிகச் சிறந்த மருந்து. இதுகுரு தியை தூய்மை செய்யும் இயல்புடையது.
6. உடலைக் குளிர்ச்சியடையவைக்கும் தன் மையிருப்பதால் கோடை காலத்திற்கு மிகவும் ஏற்றது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும் சக்தியும் இருக்கிறது.
7. மாதவிடாய் காலத்தில் இதை உணவில் சேர்த் தால்பெண்களின்உடல்பலமடையும்.மாதவிடாய் கோளாறுகளால் ஏற்படும் அதிக குரு திப் போக்கு, நோய்க்கு சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது.
8. உடல்நிறை குறைய உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் வாழைத்தண்டை உண வில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# பருத்தித்துறை ஐக்கியம் பூப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
பருத்தித்துறைபிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான பூப்பந்தில் சம்பியனாகியது பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

பருத்தித்துறைபிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில், பெண்கள் பிரிவு இறுதியாட்டம் நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும், ஓர் இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. இரண்டு ஒற்றையர் ஆட்டத்தையும் முறையே 21:5 21:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம்.

(ம-108)



# சகிப் அல் ஹசன் விளையாடமாட்டார்

இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நாளை நடைபெறவுள்ள முத்தரப்பு ரி-20 தொடரில் இருந்து பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன் விலகினார். இதனால் பொறுப்புத் தலைவராக மகமதுல்லா செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி சகிப் அல் ஹசனின் கையில் காயம் ஏற்பட்டது. இதனால் இலங்கைக்கு எதிரான முன்னதாக முடிவடைந்த டெஸ்ட் தொடரில் அவர் விளையாடியிருக்கவில்லை. எனினும் இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடருக்கான அணியில் அவர் இடம்பிடித்திருந்தார். ஆனால் காயம் முழுமையாகக் குணமடையாததை அடுத்து அவர் தொடரில் இருந்து விலகினார். (ம)





# முத்தரப்பு ரி-20 நாளை ஆரம்பம்

இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புரி-20 தொடர் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது. இலங்கை - இந்திய அணிகள் நாளைய ஆட்டத்தில் மோதுகின்றன. இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகிறது.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்படவுள்ளது. நாளை முதல் 18ஆம் திகதி வரை தொடரின் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு அணிகளும் மற்றைய அணிகளுடன் தலா 2 தடவைகள் மோதவேண்டும். லீக் சுற்றின் முடிவில் அதிக புள்ளிகளைப்பெறும் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும். ஆட்டங்கள் அனைத்தும் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

நாளை இலங்கை எதிர் இந்தியா, மார்ச் 8ஆம் திகதி பங்களாதேஷ் எதிர் இந்தியா, மார்ச் 10ஆம் திகதி இலங்கை எதிர் பங்களாதேஷ், மார்ச் 12ஆம் திகதி இந்தியா எதிர் இலங்கை, மார்ச் 14ஆம் திகதி இந்தியா எதிர் பங்களாதேஷ், மார்ச் 16ஆம் திகதி பங்களாதேஷ் எதிர் இலங்கை, மார்ச் 18ஆம் திகதி இறுதியாட்டம் என்றவாறாக அட்டவணை அமைந்துள்ளது.

### முக்கிய வீரர்கள் இடம்பெறவில்லை

இந்த முத்தரப்புத் தொடர் அறிவிக்கப்பட்டவுடன் தொடர் தொடர்பாக மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் முன்னணி வீரர்களின் ஓய்வால் தொடர் தனது விறுவிறுப்புத் தன்மையை இழந்துள்ளது என்றே கருதப்படுகிறது. இதன்படி இந்திய அணியின் தலைவர் கோக்லி, இலக்குக் காப்பாளர் டோனி, சகலதுறை வீரர் பாண்டியா, வேகப்பந்து வீச்சாளர்கள் பும்ரா, புவனேஸ்வர்குமார், சுழல்பந்து வீச்சாளர் சாகல், இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

(ம)

# தென்மராட்சி பிரதேச செயலக தடகளத் தெரிவுப் போட்டிகள்

சாவகச்சேரி, மார்ச் 5
தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தெரிவுப் போட்டிகளும் இறுதிப் போட்டிகளும் எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச விளையாட்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அலுவலர் கே.விஜிதரனும் மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன் கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ம-9)

# அரையிறுதியில் பரிஸ் செயின்ட்



பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான தொடரில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மார்ஸெய் அணியை வென்றே அரையிறுதி ஆட்டத்துக்கு பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி தகுதி பெற்றது. முதற்பாதி முடிவடையும் மரியா பெற்ற கோலின் மூலம் முன்னிலை பெற்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன். இரண்டாவது பாதியிலும் மரியா ஒரு கோலைப் பதிவுசெய்தார். எடிக்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி. (ம)



யாழ்ப்பாண மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கயிறு இழுத்தலில் சாவகச்சேரி பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நேற்று நடைபெற்றஇறுதிப் போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. இதில் சாவகச்சேரி பிரதேச செயலக அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-9-422)



யாழ்ப்பாண மாவட்ட கயிறிழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் சம்பியன் ஆகியது கரவெட்டி பிரதேச செயலக அணி. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வீழ்த்தியே கரவெட்டிப் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. (ம-108-422)

# ஸ்கந்தவரோதய மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 5
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், சந்திபுர ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியை எதிர்த்து கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. இதில் மட்டுவில் சந்திபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய அணி 28:26, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-422)





# யாழ்ப்பாணம் இந்து அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 5
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி 41.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அனோசன் 46 ஓட்டங்களையும், சூரியகாந்தன் 30 ஓட்டங்களையும், காதுசன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சந்துரு 4 இலக்குகளையும், கோமைந்தன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

144 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 14 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதையும் இழக்காது அபார வெற்றிபெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சந்தோஸ் 89 ஓட்டங்களையும், மினுக்சன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம-23)

# இன்றைய மோதல்கள்

**கலைவாணியின் 40 வயதுப்பிரிவு கால்பந்தாட்டம்**
கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதித்து யாழ். போதனா வைத்தியசாலை அணி மோதவுள்ளாது.

**கலைவாணியின் கால்பந்தாட்டம்**
கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# பை ஸ்ரார், குறிஞ்சிக்குமரன் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 5
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஏழாலை பை ஸ்ரார், குறிஞ்சிக்குமரன் அணிகள் வெற்றிபெற்றன.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏழாலை பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் பை ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# அஸ்டேரி உயிரிழந்தார்



இத்தாலிய கால்பந்தாட்ட வீரர் அஸ்டேரி, நேற்று உயிரிழந்தார்.
இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் தற்போது நடைபெற்று வரும் தொடரிலும் அஸ்டேரி விளையாடி வந்தார். இந்த நிலையில் அவரின் மறைவு பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அஸ்டேரியின் மறைவை அடுத்து இத்தாலியக் கழகங்களின் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன. (ம)

# வவுனியா வீராங்கனை சைக்கிளோட்டத்தில் முதலிடம் பிடித்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 5
வடக்கு மகாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பெண்களுக்கான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த தர்சிகா முதலாம் இடத்தைப் பிடித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சோபா இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கேமா மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

(ம-23)



தேசியமட்ட கிரிடாசக்தி கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. கொழும்பு மேக்கன்டைல் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொழும்பு மாவட்ட அணியிடம் 24:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோல்வியடைந்ததை அடுத்தே யாழ்ப்பாண மாவட்ட அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. (ம-23)

# சைக்கிளோட்டத்தில் யாழ். வீரர் முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
வடக்கு மகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான 105 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.அனுசன் முதலிடத்தைப் பெற்றார்.

வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.நிதர்சன் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பாலறஜித் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

(ம-23)

# நவஜீவன்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவுன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. நவஜீவன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

(ம-23)

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் மேற்கில், விளாத்தியடி ஒழுங்கையில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக சகல வசதிகளுடன் 4 1/2 பரப்பு காணியில் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு - 077 469 6695
(C 33167/15/17)

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் இணையமுடியும்!

முதல்நாள் வகுப்பு இலவசம் - 10.03.2018

1. காலை 08-10
2. காலை 10-12
3.மதியம் 01-03
4.மாலை 03-05

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும்! ஏதாவதொரு பிரிவில் இணையமுடியும்.

அனைவருக்குமான அறிமுக வகுப்பு காலை 08.00 மணிக்கு.

எமது நேரடியான உரையாடற் பயிற்சிநெறியில் இணைவதன் மூலம் ஆங்கிலத்தில் அடிப்படை அறிவற்றவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

SAAMSON Expert in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர்,
021 320 3313 077 1570 486

# கொல்கத்தாவின் தலைவராக டினேஸ் கார்த்திக்



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா அணியின் தலைவராக டினேஸ் கார்த்திக் நியமிக்கப்பட்டார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் அண்மையில் நடைபெற்றது. ஒவ்வொரு அணியும் தலா இரண்டு வீரர்களை மட்டுமே ஆரம்பத்தில் தக்கவைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதால் கொல்கத்தா அணி, கடந்த சீசனில் தலைவராகச் செயற்பட்ட கம்பீரை விடுவித்தது. மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களான நரைன், ரசல் இருவரையுமே அந்த அணி தக்கவைத்தது.

கம்பீருக்கும், அணியின் நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட மனக் கசப்புக்களை அடுத்து அவர் ஏலத்தின் போதும் கொல்கத்தா அணியால் எடுக்கப்படவில்லை. இதனால் கொல்கத்தா அணியின் தலைமைப் பொறுப்பு எவரிடம் ஒப்படைக்கப்படும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. ஆஸ்திரேலிய வீரர் கிறிஸ் லின், இந்திய வீரர் உத்தப்பா, மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் ரசல் மூவரில் ஒருவரே தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்படு வார்கள் என்று கருதப்பட்ட நிலையில், தமிழக வீரர் டினேஸ் கார்த்திக்கிடம் தலைமைத்துவத்தை ஒப்படைத்துள்ளது அணியின் நிர்வாகம். (ம)

**ஆசிரியர் தேவை**



Facial,
Sewing,
Hairstyle,
Icing

போன்ற பாடங்களுக்கு தகுதி உடைய ஆசிரியர்கள் நேரில் சமுகம் தரவும்.

இடம் - உதயன் அலுவலகம், நெல்லியடி.
நேரம் - பி.ப. 3.00 மணி

# கேட்பே அணியை வீழ்த்தியது ரியல்




ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து கேட்பே அணி மோதியது. ஆட்டத்தின் முதல் இருபது நிமிடங்கள் வரையில் கோல் எதுவும் பதிவாகவில்லை.

24ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் அந்த அணியின் வீரர் பேல். 1:0 என்று மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் நகர்ந்து சென்றது ஆட்டம். 45ஆவது நிமிடத்தில் ரொனால்டோ ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரியல் மட்ரிட்.

இரண்டாம் பாதியின் 68ஆவது நிமிடத்தில் போட்டர்லோ கேட்பேயின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 2:1 என்ற நிலையில் ஆட்டம் மேலும் விறுவிறுப்பானது. 78ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. (ம)



**வேலைவாய்ப்பு**

உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு

- பத்திரிகை மடிப்பவர்கள்,
- பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை.

ஆர்வமுள்ளவர்கள் 05.03.2018 (திங்கள்கிழமை) முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

பத்திரிகை விநியோகஸ்தர்கள் மோட்டார் சைக்கிளும், சாரதி அனுமதிப் பத்திரமும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் - 10.03.18 சனி காலை 10மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் 12.03.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

அறிமுகம் - Rs 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C/58237) (13.17)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.